www.tamilarangam.net

நன்றி - நூலகத்திட்டம்

REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA

வெகுஜன அரசியல் மாதப் பத்திரிகை

புதிய பூமி

පුදිය පූමි

Puthiya Poomi

சுற்று 12 ஒக்ரோபர் 2005 பக்கம்12 விலை 12/- சுழற்சி 84

# தேர்தலில் எவருக்கு வாக்களிப்பது?





எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஒன்பது வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர். இவர்களில் ஐக்கிய தேசியக் கட்சியின் ரணில் விக்கிரமசிங்காவும் சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் மகிந்த ராஜபக்ஷவும் பிரதான போட்டியாளர்கள். இவ்வாறு இவர்கள் இருவரும் முதன்மை பெற்று நிற்பது அவர்கள் முன்வைக்கும் கொள்கை வேலைத்திட்டங்களின் அடிப்படையில் அல்ல.

1931ம் ஆண்டு சர்வசன வாக்குரிமை வழங்கப்பட்ட காலம் முதல் இந்நாட்டின் நிலவுடமை மேட்டுக்குடிகளில் இருந்து வந்தவர்களே தேர்தல்களில் நிற்கவும் மக்களிடம் வாக்குளைப் பலவழிகளிலும் ஏமாற்றிப் பெற்று வெற்றி பெறவும் செய்தனர். 1947ம் ஆண்டிலிருந்து பாராளுமன்ற ஆட்சிமுறை வந்த பின் அதே மேட்டுக்குடி உயர்வர்க்க முதலாளித்துவ சக்திகள் தான் ஐக்கிய தேசியக்கட்சி சிறிலங்கா சுதந்திரக் கட்சி எனத் தமக்குள் பிரிந்து நின்று மாறி மாறி ஆட்சி அதிகாரம் செலுத்தி வந்தார்கள்.

1978ம் ஆண்டிலிருந்து நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியைத் தெரிவு செய்யும் தேர்தல்களிலும் இவர்களே மாறி மாறி ஜனாதிபதிக் கதிரையில் இருந்து ஆட்சி செய்தும் வந்தனர். இப்பொழுது அதன் தொடர்ச்சியாக அதே பரம்பரைகளில் இருந்து வந்த மேட்டுக்குடி உயர் வர்க்க நலன்கள் காத்து நிற்கும் பேரினவாத நிலைப்பாடுடை ரணிலும் மகிந்தாவும் ஜனாதிபதித் தேர்தலில் பிரதான வேட்பாளர்களாகி போட்டியிடுகின்றனர். இவர்கள் இருவரில் யாருக்கு வாக்களிப்பது என்பதே ஏகப்பெரும்பான்மையான அனைத்து உழைக்கும் மக்களினதும் முக்கிய கேள்வியாகும். இவ்வேளையில் இவர்களது கொள்ளைத் திட்டங்களையும் வாக்குறுதிகளையும் வாக்குகள் பெறும் தந்திரோபாயங்களையும் புரிந்து கொள்வது மிக அவசியமானதாகும். இவர்கள் முன்வைப்பனவற்றில் இரண்டு விடயங்கள் அவதானிக்கப்பட வேண்டியவைகளாகும். ஒன்று மக்களின் வாக்குகளைக் கவர்ந்திழுப்பதற்கான கொள்கை வேலைத்திட்டங்களாக

தொடர்ச்சி 12ம் பக்கம் ➡

## மேல் கொத்மலைத்திட்ட எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் மீது தலவாக்கொல்லையில் குண்டர் தாக்குதல்

மேல்கொத்மலைத்திட்டத்திற்கு எதிரான மக்கள் போராட்டத்தின் மீது தலவாக்கெல்லையிலுள்ள அரசாங்க சார்பு குண்டர்கள் தாக்குதல் நடத்தினர். அவர்களுடன் ஐ.தே.கட்சியை சேர்ந்த தலவாக்கெல்லை நகர சபைத் தலைவர் நிமலசேனவும் இருந்தார். இதிலிருந்து சுதந்திரக்கட்சியும், ஐ.தே.கட்சியும் நாசம் நிறைந்த மேல்கொத்மலை நீர் மின்திட்டத்தை முன்னெடுப்பதிலும் அத்திட்டத்திற்கு எதிரான போராட்டத்கை முறியடிப்பதிலும் ஒருமைப்பாட்டுடனே செயற்படுகின்றன என்பது தெளிவாகிறது.

மேல்கொத்மலைத்திட்டத்திற்கு எதிரான மக்கள் இயக்கத்தின் ஒருமாத எதிர்ப்பு நடவடிக்கைகளின் நிறைவு நிகழ்ச்சி தலவாக்கொல்லை நகரில் ஒக்டோபர் 2ஆம் திகதி ஆர்ப்பாட்டமாக நடைபெற்றது. பி.ப.12 மணிக்கு தலவாக்கொல்லை கதிரேசன் கோவில் அருகிலிருந்து ஆரம்பமான பேரணி தலவாக்கொல்லை பஸ்தரிப்பு நிலையத்தை சென்றடைந்ததுடன் அங்கு மறியல் போராட்டம் இடம் பெற்றது.

அப்போது அவ்விடத்திற்கு ஜனாதிபதி வேட்பாளர் மஹிந்த ராஜபக்சாவினது பிரசார காரியாலயத்திலும் அதற்கு முன்னாலுள்ள முச்சக்கரவண்டி தரிப்பு நிலையத்திலிருந்தும் வந்த குண்டர்கள் ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது தாக்குதல் நடத்தினர். அதனைப் பார்த்துக்கொண்டு தலவாக்கொல்லை பொலிஸார் மௌனம் காத்து நின்றனர்.

அவசரகாலச்சட்டம் அமுலில் இருந்த போதும் ஜனநாயகரீதியான ஆர்ப்பாட்டதிற்கு தடை இல்லாத போதிலும் குண்டர்கள் தாக்குதல் நடத்திய போதும் பொலிஸார் அவர்களுக்கு எதிரான எந்தவொரு நடவடிக்கையையும் எடுக்கவில்லை. மாறாக அவசரகாலச்சட்டம் சாதாரண மக்களின் உரிமைகளை மறுக்கவே பயன்படுத்தப்படுகிறது என்பது தெளிவாகிறது.

மேல்கொத்மலைத்திட்டத்திற்கு எதிரான மக்கள் இயக்கத்தின் இரண்டாவது கட்ட எதிர்ப்பு போராட்டம் ஒக்டோபர் மாதம் 2 ஆம் திகதியுடன் நிறைவு பெற்றது. 2 ஆம் திகதி நடைபெற்ற போராட்டத்தின் மீது நடத்தப்பட்ட தாக்குதலுக்கு எதிரான நடவடிக்கைகள் பற்றியும் இத்திட்டத்தை முற்றாக தடுத்து நிறுத்த அடுத்த கட்ட போராட்ட நடவடிக்கைகள் பற்றித் தீர்மானிக்கவும்

தொடர்ச்சி 12ம் பக்கம் ➡







ஒக்ரோபர் 2ம் திகதி தலவாக்கொல்லையில் மேல் கொத்மலைத் திட்டத்திற்கு எதிரான மக்கள் இயக்கம் நடாத்திய ஆர்ப்பாட்டத்தை மேல் படத்திலும், குண்டர்கள் தாக்குதலை நடாத்த ஆரம்பிப்பதை கீழ்படத்திலும் மக்கள் இயக்க அமைப்பாளர் சட்டத்தரணி இ.தம்மையா ஊடகம் ஒன்றிற்கு கருத்துக் கூறுவதையும் படத்தில் காணலாம்



## அமெரிக்க ஐரோப்பிய நாடுகளை நம்பி விடுதலைப் போராட்டத்தை முன்னெடுக்க முடியாது

தமிழ் மக்கள் மத்தியில் அரசியல் பண்பாட்டுத் தளங்களில் அன்று முதல் இன்றுவரை பழைமைவாத கருத்தியல் சிந்தனா முறைமையே ஆதிக்க நிலையில் இருந்து வருகின்றது. அதன் அடிப்படையிலேயே தமிழ்த்தேசிய இனத்தின் உரிமைகளை வென்றெடுக்க இந்திய ஆளும் வர்க்கத்தை தமிழர் தலைமைகள் நாடிச்சென்று எதிர்பார்த்து காரியமாற்றின. இறுதியில் ஏமாந்து போக வேண்டியதாயிற்று. அதன்பின் சுயநிர்ணய உரி மையை வென்றெடுத்து நிலை நாட்ட அமெரிக்கா ஐரோப்பிய ஒன்றியம் உள்ளிட்ட மேற்குலக நாடுகளிடம் நம்பிக்கை வைக்கப்பட்டது.

ஆனால் அந்த நம்பிக்கை இன்று தகர்ந்து வருகிறது. விரைவில் அந்த வெள்ளை ஆதிக்க வாதிகளின் சுயரூபத்தை முழுத் தமிழ் மக்களும் தரிசிக்க வேண்டியே வரும். அமெரிக்கா மாமனும் அல்ல ஐரோப்பா மச்சானும் அல்லர். அவர்கள் அன்று கொலனி ஆதிக்கத்தால் நமது நாட்டையும் மக்களையும் சுரண்டி பிரித்தாண்டவர்கள். இப்போது தமது ஏகாதிபத்திய உலகமயமாதல் ஊடாக சுரண்டல் கொள்ளையிடவே தமிழர் போராட்டத்திற்குப் பச்சைக் கொடி போன்று ஒன்றை அசைத்துக் காட்டினர். இப்போது அபாயக் கொடி காட்ட ஆரம்பித்துள்ளனர். இலங்கை முழுவதிலும் குறிப்பாக வடக்கு கிழக்கிலும் வளங்களைக் கொள்ளையிடவும் நுகர்வு மூலம் புலம் பெயர்ந்தோர் அனுப்பும் பணத்தை மீளச் சூறையாடிச் செலவுமே அந்த வெள்ளை ஆளும் வர்க்கப் பிசாசுகள் முன்நிற்கின்றன. தத்தமது நாடுகளிலேயேயும் நமது புலம் பெயர்ந்த மக்களின் உழைப்பை மிகக் குறைந்த சம்பளத்தில் கடுமையான உடலுழைப்பின் மூலம் கொள்ளையிட்டு வருகின்றன. இத்தகைய ஏகாதிபத்திய முதலாளித்துவ மேற்குலக நாடுகள் தேசிய இன விடுதலைப் போராட்டத்திற்கோ அல்லது மக்கள் தொழிலாளர்கள் கோரிக்கைகளுக்கோ ஆதரவு தெரிவிப்பார்கள் என்று எதிர்பார்க்க முடியுமா? இத்தகையவர்களின் பயங்கரவாதம் பற்றிய பிரகடனங்களும், மிரட்டல் அறிக்கைகளும், தடைகள் பற்றிய முடிவுகளும் நமக்கு ஆச்சரியமோ அதிர்ச்சியோ தருவதாக இல்லை. இது பற்றிய புதியபூமி தொடர்ந்து விளக்கி வற்புறுத்தி வந்துள்ளமையை நினைவூட்ட விரும்புகிறது.

www.tamilarangam.net நன்றி - நூலகத்திட்டம்



# பட்டதாரிகளை பரிதவிக்கவிட்ட வ.கி.மா.அமைச்சு நியமனங்கள் எந்த அடிப்படையில் இடம்பெற்றன?

நாடு முழுவதிலும் பட்டதாரிகளுக்கு நியமனம் என்று அரசாங்கம் ஆறு மாதங்கள் முன்பு ஆரவாரம் செய்து பயிலுனர் நியமனங்களும் வழங்கியது. அதில் குளறுபடிகளும் தில்லு முல்லுகளும் இடம் பெற்றன. பட்டம் பெற்ற பாடங்களினதும் திறமைகளினதும் அடிப்படையில் மேற்படி நியமனங்கள் இடம் பெறவில்லை. அதிலும் நிரந்தரம் வழங்கப்படவில்லை. இவை பட்டதாரிகள் பொதுவாக நாடுமுழுவதும் எதிர் நோக்கி நிற்கும் பிரச்சினைகளாகும்.

அதே வேளை இரண்டு மாதங்களுக்கு முன்பு வடக்கு கிழக்கில் உள்ள அரசாங்கப் பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர்/ திட்டமிடல் நிதி உதவியாளர் பதவிக்கான வெற்றிடங்களை நிரப்புவதற்கு பட்டதாரிகளை ஆட்சேர்ப்புச் செய்யும்– 2005 விண்ணப்பங்கள் கோரப்பட்டன. அதற்கான பரீட்சையும் நடத்தப்பட்டதுடன் நேர்முகப் பரீட்சைக்கும் பட்டதாரிகள் அழைக்கப்பட்டு நேர் காணப்பட்டனர். இவ்வாறு சென்ற பட்டதாரிகளின் எண்ணிக்கை 4767 பேராகும். இத்தொகையில் ஏற்கனவே பயிலுனர்களாக நியமனம் பெற்றவர்களும் அடங்குவர்.

இந் நிலையில் கடந்த மாத நடுப்பகுதியில் மேற்படி பரீட்சைக்குத் தோன்றி பின் நேர்முகப்பரீட்சைக்கும் சென்று வந்தவர்களில் ஆயிரம் பட்டதாரிகளுக்கு மட்டுமே நிரந்தர நியமனம் வழங்கப்பட்டது. ஏனையோர் பற்றி எவ்வித முடிவும் தெரிவிக்கப்பட்டவில்லை. ஏற்கனவே நடாத்தப்பட்ட பரீட்சையில் பெற்ற புள்ளிகள் அடிப்படையில் நியமனம் வழங்கப்பட்டதா? அப்படியாயின் மிகக் குறைந்த புள்ளிகளைப் பெற்றதாக அறியப்படும் சிலருக்கு எப்படி நியமனம் கிடைத்தது. பட்டம் பெற்ற வருட அடிப்படையில் நியமனம் வழங்கப்பட்டதா என்று பார்த்தால் அப்படியும் இல்லை. அல்லது பாடங்களின் தேவை அடிப்படையில் வழங்கப்பட்டதா? அவ்வாறும் இல்லை. ஏனெனில் சில குறிப்பான பாடங்களுக்கு வடக்கு கிழக்கு பாடசாலைகளில் வெற்றிடங்கள் இருந்தே வருகின்றன. அவற்றுக்குரிய பட்டதாரிகள் கூட நியமனம் பெறவில்லை. நியமனம் கிடைக்காத பயிலுனர் பட்டதாரிகள் நடாத்திய எதிர்ப்பு மறியல் போராட்டத்தால் மாகாணக் கல்வித்திணைக்களம் அவர்களுக்கு தவணை சொல்லி போரட்டத்தைக் கைவிடச் செய்துள்ளது. அதே வேளை ஏனைய பட்டதாரிகள் பற்றி வடக்குகிழக்கு மாகாண கல்வித்திணைக்களம் மௌனம் சாதித்து வருகின்றது. ஏன் இந்த நிலை? பட்டதாரிகள் இவ்வாறு ஏமாற்றப்பட்டு பரிதவிக்கவிடப்பட்ட பின்னணி யாது? அரசியல் தலையீடா? வேறு வகைச் செல்வாக்குகளா? வழமையான புறக்கதவு வழிமுறையா? வடக்கு கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் திணைக்களம் ஏற்கனவே தன்னிச்சையாகவும் தான் தோன்றித்தனமானவும் அதிகாரத் திமிருடனும் நடந்து வருகின்றது என்ற குற்றச் சாட்டு வடக்கு கிழக்கு பாடசாலைகளின் கல்விச் சமூகத்தினரிடம் இருந்து வருகின்றது. அதனை நீருப்பிப்பது போன்ற செயலாகவே அண்மைய பட்டதாரிகள் நியமனம் இடம் பெற்றுள்ளன.

இவ்வாறு எந்த நியாயமான அடிப்படைகளும் இன்றி ஒரு பகுதியினருக்கு நியமனமும் ஏனையோருக்கு புறக்கணிப்பு அநீதியும் செய்யப்பட்டுள்ளமை மிக வன்மையாகக் கண்டிக்கப்பட வேண்டியதாகும். பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்குவது என்பது வெறுமனே அவர்களுக்கு வேலை வழங்குவதுடன் சம்பந்தப்பட்ட ஒன்று மட்டுமல்ல. வடக்கு கிழக்கு பாடசாலைகளின் முன்னேற்றத்திற்கும் கல்வி வளர்ச்சிக்கும் அடிப்படையானவைகளாகும்.

எனவே வடக்குகிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் கீழான கல்வித் திணைக்களம் மேற்படி பட்டதாரி நியமனக் குளறுபடிகளுக்கும் தில்லு முல்லுகளுக்கும் உரிய பதிலை வழங்க வேண்டும். வஞ்சிக்கப்பட்ட அனைத்துப் பட்டதாரிகளுக்கும் உரிய நியமனங்கள் வழங்கவேண்டும். அவ்வாறு வழங்கப்படாது விடின் பாதிக்கப்பட்ட பட்டதாரிகள் வீதியில் இறங்கிப் போராடுவதைத் தவிர அவர்களுக்கு வேறு மார்க்கம் கிடையாது.

**கோப்பாய் க.முகுந்தன்**

# மலையகத் தோட்டத் தொழிலாளர்கள் கொத்தடிமைத் தொழிலாளர்களா?

அண்மையில் பாராளுமன்றத்தில் தனியார் துறையைச் சேர்ந்தோருக்கு 1000ரூபா சம்பள உயர்வு வழங்கும் சட்டம் கொண்டுவரப்பட்டது. ஆனால் மலையகத் தோட்டத் தொழிலாளர்களுக்கு அச் சம்பள உயர்வு மறுக்கப்பட்டது. ஏனெனில் அவர்கள் ஏற்கனவே முதலாளிமார்– தொழிற் சங்க தலைமைகளின் கூட்டு ஒப்பந்தத்தின் கீழ் வருவதாலேயே மேற்படி சம்பள உயர்வு மறுக்கப்பட்டுள்ளது. மலையகத் தோட்டத் தொழிலாளர்கள் பெருந் தோட்ட தேயிலை ரப்பர் உற்பத்தியில் ஈடுபட்டு வருபவர்களாவர். அவர்களே பிரதான ஏற்றுமதியின் முதுகெலும்பாக விளங்கி வருபவர்கள். ஆனால் அத் தொழிலாளர்கள் சம்பள உயர்வில் எப்போதும் புறக்கணிக்கப்பட்டே வருகிறார்கள். அதே வேளை அத் தொழிலாளர்களின் வியர்வையையும் இரத்தத்தையும் உறுஞ்சியே தோட்டமுதலாளிகளும் ஆளும் வர்க்க ஆட்சியினரும் சுகபோகம் அனுபவித்து வருகின்றனர். இந்நிலை ஐக்கிய தேசியக் கட்சி அதிகாரத்திற்கு வந்தாலும் சிறிலங்கா சுதந்திரக்கட்சி பாராளுமன்ற இடதுசாரிகளுடன் சேர்ந்து பதவியில் இருந்தாலும் நீடித்தே வந்துள்ளது. மலையக தொழிற் சங்க அரசியல் தலைமைகளைத் தமது காலடியில் வைத்துக் கொண்டே தொழிலார்களை இரண்டாம் தரமாக நடாத்தி வருகின்றன. ஏழு லட்சத்திற்கு மேற்பட்ட பெருந்தோட்டத் தொழிலாளர்கள் அரசாங்கத்தின் கீழும் இல்லை. தனியார் துறை என்பதற்குள்ளும் கணிக்கப்படவில்லை. அப்படியானால் அவர்கள் கொத்தடிமைத் தொழிலாளர்களாகவே கணிக்கப்பட்டுள்ளனர். அப்படியாயின் அவர்கள் யாருடைய கொத்தடிமைகளாக நடாத்தப்பட்டு வருகிறார்கள்? அவர்கள் கொம்பனி முதலாளிகளினதும் மலையகத்தின் ஆதிக்கம் பெற்றுள்ள பிரதான தொழிற்சங்கங்களினதும் கொத்தடிமைகளாகவே வைக்கப் பட்டுள்ளனர். இதனை அரசாங்கம் தனியார் துறை சம்பள உயர்வு அவர்களுக்கு மறுக்கப்பட்டதன் மூலம் நிரூபித்துள்ளது.

# 1000 ரூபா சம்பளஉயர்வு வெறும் கண்துடைப்பு! விலை உயர்வுக்கு எந்த மூலைக்குப் போதும்?

கடந்த மாதம் மூன்றாவது வாரத்தில் பாராளுமன்றத்தில் தொழில் உறவுகள் அமைச்சரால் தனியார்துறையினருக்கு 1000 ரூபா சம்பள உயர்வு வழங்க கட்டாயப்படுத்தும் சட்டமூலம் நிறைவேற்றப்பட்டது. முதலாளிகள் இதயமற்றவர்கள் முதலாளித்துவம் இரக்கமற்றது என்பதையே இச் சட்ட மூலம் எடுத்துக் காட்டியது. ஏனெனில் மிகச் சிறிய தொகை சம்பள உயர்வைக் கூட சட்டம் இன்றி தமது தொழிலாளர்களுக்கு வழங்க பெரும்பாலான முதலாளிகளும் தொழில்தருவோரும் முன்வரவில்லை. கடந்த ஜனவரி மாதத்திலிருந்து அரசாங்கத் துறையினருக்கு 2500 ரூபா சம்பள உயர்வு வழங்கப்பட்டது. அப்போதே தனியார்துறையினருக்கு ஆயிரம் ரூபா வழங்குமாறு அரசால் அறிவுறுத்தப்பட்டது. ஆனால் இதுவரை அது வழங்கப்படவில்லை. எனவே ஜானதிபதித் தேர்தல் வரவுள்ள சூழலில் மேற்படி சம்பள உயர்வுக்கு சட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது.

இது அடிப்படையில் ஒரு கண்துடைப்பும் ஏமாற்றுமாகும். மாதாந்தம் இருபதினாயிரம் ரூபாவிற்கு குறைந்த சம்பளம் பெறும் தனியார் துறை ஊழியர்கள் உத்தியோகத்தர்கள் தொழிலாளர்களுக்கே இவ் ஆயிரம் ரூபா சம்பள உயர்வாகும். தனியார் துறையில் இரண்டாயிரம் முதல் ஆறாயிரம் ரூபாய்கள் வரையான சம்பளம் பெறுவோரே பெரும்பான்மையினராகும். பல்தேசியக் கம்பனிகள் உள்நாட்டுக் கம்பனிகள் தனியார் நிறுவனங்களில் வேலை செய்வோருக்கும் நாளாந்தச் சம்பளம் பெறுவோருக்கும் வழங்கப்பட வேண்டும் எனச் சுட்டப்பட்டுள்ள 1000ரூபா சம்பள உயர்வுச் சட்டம் சில நெழிவு சுழிவுகளைக் கொண்டுள்ளது. அதன் ஒட்டைகளுக்குள் விரல் விட்டு முதலாளிகள் ஏமாற்றவே செய்வர். அதற்கும் மேலால் தீர்மானிக்கப்பட்டுள்ள இச் சம்பள உயர்வு எந்த மூலைக்கு போதுமானதாகும்.

பொருட்கள் விலை காலையில் ஒரு விலை மாலையில் வேறு விலையாக ஏறிக் கொண்டு செல்கிறது. அதனால் சாதாரண தொழிலாளர்கள் விவசாயிகள் நடுத்தர வர்க்கத்தினர் வாழ்க்கைச் செலவைச் சமாளிக்க முடியாது தடுமாறி கீழ்நோக்கி வீழ்ச்சியுற்று வருகின்றனர். ஆயிரம் ரூபா சம்பள உயர்வைக் கூட கடந்த ஆகஸ்ட் மாதத்தில் இருந்தே வழங்குமாறு முதலாளிகளுக்கு சலுகை வழங்கி இருக்கிறது அரசாங்கம். இது உண்மையான சம்பள உயர்வு அல்ல. ஜனாதிபதித் தேர்தலுக்காக வீசி எறியப்பட்ட வெறும் எலும்புத் துண்டேயாகும் என்பதை தனியார் துறையினர் உணர்ந்து கொள்வது அவசியம். அரசாங்கத்தின் இச் செயலை யூஎன்.பி தனது தேர்தல் பிரசாரத்திற்கு ஒரு கருவியாகத் தூக்கி நிற்கிறது. ஆனால் அவர்கள் தொழிலாளர்களுக்கு சொர்க்கமா காட்டப் போகிறார்கள். எல்லோரும் முதலாளித்துவ ஆளும் வர்க்க குட்டையில் ஊறிய மட்டைகளேயாவர். இதனை உழைக்கும் மக்கள் உணர்ந்து கொள்வது அவசியம்.

# நாலு நடக்கும் உலகிலே நற்குணன்

## என்.ஜி.ஓ சோஷலிஸவாதிகளின் ஒரு நாள் கூத்து

இலங்கையின் தேசிய இனப்பிரச்சனையையும் பொருளாதாரப் பிரச்சனையையும் தீர்ப்பது பற்றிய ஒரு நாள் கருத்தரங்கு ஒன்று சென்ற மாத முற் பகுதியில் கொழும்பில் நடந்தது. அதை ஏற்பாடு செய்தது கண்டியில் உள்ள ‘சத்தியோதயா’ எனும் என். ஜி. ஓ ஆதரவில் இயங்கும் நிறுவனம். ஆய்வுக்கட்டுரைகளை வரைந்தவர்கள் முன்னாள் சமசமாஜக்கட்சி/ நவசமசமாஜயக்கட்சிப் பிரமுகர்கள்.

அவர்களது ஆலோசனைகள் எல்லாம் எப்படி இலங்கையை ஏகாதிபத்திய உலகமயமாக்கலுடன் முரண்படாமல் சுழியோட வைப்பது என்பதன் அடிப்டையிலே தான் அமைந்திருந்தன. உதாரணமாக அவர்களுடைய கருத்தில் இலங்கையின் விவசாயிகள் நாட்டின் மீது ஒரு பெரிய சுமையாக உள்ளார்கள். தானியச் செய்கையின் இடத்தில் நுகர்வுப் பொருட்களை உற்பத்தி செய்கிற விதமாகப் பயிர்ச்செய்கை மாற்றியமைக்கப்பட வேண்டுமாம். இதைச் சொல்ல இந்தச் சோரம் போன இடதுசாரிகள் தான் தேவையா? நேரடியாகவே உலக வங்கியின் முகவர்களை அழைத்து வந்திருக்கலாமே!

## பாரத நாட்டுக்கிணை பாரதநாடே!

ஹர்யானா மாநிலத்தில் உள்ள கோஹானாவில் தாழ்த்தப்பட்ட சாதியினரின் வீடுகள் ஐம்பது தீக்கிரையாக்கப்பட்டன. அதற்கும் மேலாகச் சுவர்களில் “கண்ணூறு படுத்துகிற சனங்களே உங்கள் வீடுகளில் பெண்குழந்தைகளே பிறப்பதாக!” என்ற ஒரு ‘சாபமும்’ பொறிக்கப்பட்டிருக்கிறது. அதையடுத்து அதே வாரத்தில் மகாராஷ்டிரத்தில் அகோலா என்ற ஊரில் இருபத்தைந்து வீடுகள் தீக்கிரையாகியுள்ளன.

இது நடந்தது இந்தியாவின் அரசியல் யாப்பில் தீண்டாமையைச் சட்ட விரோதமாக்கும் 17வது அங்கம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப் பட்ட 50வது ஆண்டு நிறைவு தினத்தையொட்டிய நாட்களிலேயே என்பது கவனிக்க உகந்த ஒரு விநோதம்!

இதற்கெல்லாம் காரணம் என்ன? சட்டமும் நீதியும் அரசாங்கங்களும் என்ன செய்கின்றன? சாதிய மறுப்புச் சட்டம் மதிக்கப்பட இன்னும் எத்தனை அரை நூற்றாண்டுகள் கழிய வேண்டும்? தாழ்த்தப்பட்ட சாதியினர் தமக்குள் ஒற்றுமைப்படுவதுடன் பிற ஒடுக்கப்பட்ட சமூகங்களுடனும் வர்க்கங்களுடனும் இணைந்து போராடும் வரையும் சாதியத்தின் கொடுமைகள் தொடரும்.

## இப்படி வாழாமல் இறந்ததே மேல்!

போராசிரியர் சிவத்தம்பியின் நேர்காணல் நூல்வெளியீட்டின் போது அவரது இப்போதைய தேசியவாத நிலைப்பாட்டை நியாயப்படுத்தும் நோக்கில் ஒரு பேச்சாளர், இப்போது பேராசிரியர் கைலாசபதி உயிரோடு இருந்திருந்தால் அவரும் பேராசிரியர் சிவத்தம்பியைப் போலவே நடந்து கொள்வார் என்று சொன்னாராம். அவருக்குப் பேராசிரியர்கள் இருவருடையதும் சிந்தனை முறைகளிடையிலுள்ள வேறுபாடு தெரியாமலிருக்கலாம். அடுத்துப் பேசிய இன்னொரு எழுத்தாளர், பேராசிரியர் கைலாசபதி உயிருடனிருந்து அந்த விதமாக நடந்து கொள்வாரென்றால் அவர் இறந்தது நல்லது தான் என்றாராம்.

## கிளின்ற்றனின் ஞானோதயம்

ஈராக் மீதுஅமெரிக்கா தொடுத்த போர் உலக நாடுகளில் அமெரிக்காவின் படிமத்துக்குத் கேடுசெய்வதாக செப்டம்பர் நடுப்பகுதியில் முன்னாள் அமெரிக்கச் சனாதிபதி பில் கிளின்டன் அறிவித்திருக்கிறார். அத்துடன் ஈராக்கின் ஆயுதங்கள் பற்றிய ஐ. நா. சபையின் விசாரணைகள் முடிவுக்கு வருமுன்னரே போரைத் தொடங்கியது தவறு என்றும் அவர் கண்டித்திருக்கிறார். நல்லது தான்.என்றாலும் இந்தப் போர் தவறு என்று அது தொடங்கியபோதே கிளின்ற்றனுக்குத் தெரியாதா?

அதை அவர் ஏன் அப்போதே கண்டிக்கவில்லை? அதற்கு முன்னர் 1999ல் மொனிக்கா லிவின்ஸ்கி விவகாரத்தால் தன் பதவிக்கு வந்த மிரட்டலைத் திசை திருப்ப ஈராக்கு மீது தீவிர குண்டுத்தாக்குதல் நடத்துவித்தாரே! அது தவறில்லையா? அதை மறந்து விட்டாரா? சொல்லப் போனால், ஜோஜ் புஷ் படு வில்லன் தான், ஆனால் கிளின்ற்றனை விட யோக்கியமான ஒரு வில்லன் என்றே சொல்வேன்.

## காடைத்தனமும் கலாச்சாரச்சீரழிவும்

யாழ்ப்பாணத்தில் இளைஞர்களது காடைத்தனத்தைக் கட்டுப்படுத்த உதவுமாறு பொதுமக்கள் சார்பாக விடுதலைப்புலிகள் அமைப்பிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது என்று செய்தி வெளியாகியுள்ளது. இந்தக் காடைத்தனத்தின் காரணம் என்ன? ஊதாரித்தனத்தை ஊக்குவிக்கிற ஒரு சமூகச்சூழல் ஏற்பட்டுள்ளதல்லவா? உலகமயமாதலின் கொக்காகோலா கலாசாரத்தையும் அதனோடு கலந்து குடிக்கின்ற மது வகைகளின் பரவலையும் எதிர்க்காமல் அதன் விளைவான பண்பாட்டுச் சீரழிவை எதிர்க்க முடியுமா? விடுதலைக்காகப் போராட வேண்டிய ஒரு தலைமுறை வீணாகப் போகாமல் தடுக்க முடியுமா?

## மகேஸ்வர லீலை

முன்னாள் அமைச்சர் மகேஸ்வரன் இப்போது யூ என். பியிலிருக்கிறாரா அல்லது தனிக்கட்சி ஒன்று நடத்துகிறாரா என்று தெரியாதளவுக்கு அவர் கட்சிக் கட்டுப்பாட்டை மீறி நடந்திருக்கிறார். அவசரகாலச்சட்டத்தை ஆதரித்து யூஎன்.பி வாக்களிக்க முடிவு செய்திருந்தும் அவர் அதை எதிர்த்து இருமுறை வாக்களித்திருக்கிறார். தான் எதிர்த்துப் பேசத் தனக்கு வாய்ப்பு மறுக்கப்பட்டதால் ஆவணங்களைக் கிழித்து ஆவேசப்பட்டிருக்கிறார். இது யாருக்கு எதிரான ஆவேசம்? எதிர்த்து வாக்களிக்க அனுமதித்த கட்சி என்றால் பேசவும் நேரம் ஒதுக்கியிருக்க வேண்டும் மல்லவா? அனுமதிக்காத கட்சி என்றால் ஒழுங்கு நடவடிக்கை எடுத்திருக்க வேண்டுமே! இப்போது என்ன விதமான நாடகம் நடக்கிறது என்று அறியும் தேவை நமக்கு இருக்கிறது.

யூஎன்.பி மகேஸ்வரன் மூலம் ஒரு முகத்தையும் வாக்கெடுப்பில் தனது நிலைப்பாட்டின் மூலம் இன்னொரு முகத்தையும் காட்டுகிறதா? அல்லது இன்றைய பலவீனமான பாராளுமன்றப் பலத்தின் காரணமாகக் கண்டுங்காணாமல் இருக்கிறதா? நாளை அதிகாரத்துக்கு வந்தால் மகேஸ்வரனை மீண்டும் அமைச்சராக்குமா? அப்படி நடந்தால் மகேஸ்வரன் பாராளுமன்றதில் மறுபடியும் தனது ஆவேசக் கூத்தை நடத்த யூஎன்.பி அனுமதிக்குமா?

www.tamilarangam.net நன்றி - நூலகத்திட்டம்



# சுனாமிக் கொள்ளையர்கள் பற்றிய அறிக்கை

சுனாமிப் போரழிவு இடம் பெற்று ஒன்பது மாதங்கள் முடிவடைந்து விட்டன. அதனால் கடுமையான பாதிப்புகளைப் பெற்ற வடக்கு, கிழக்கு, தெற்கு, மேற்கு கரையோர மக்களின் வாழ்வு தொடர்ந்தும் அவல நிலையிலேயே இருந்து வருகின்றது. சுனாமி அழிவுகளுக்கு சர்வதேச உதவி என்று பெரும் வாக்குறுதிகள் வழங்கப்பட்ட போதிலும் அவற்றில் ஒரு பகுதி உதவிகளே கிடைத்தன. சில சர்வதேச அரசுசார்பற்ற நிறுவனங்கள் ஆடம்பரமான பிரசாரங்களுடன் புனர்வாழ்வு புனரமைப்பு என வந்திறங்கிய போதும் அவற்றின் பலாபலன்கள் பாதிக்கப்பட்ட மக்களைச் சென்றடையவில்லை. கண்துடைப்பிற்கு ஆங்காங்கே சில செய்யப்பட்டன.

அரசாங்க அமைச்சு உயர் அதிகாரிகள் தொட்டு மாகாணச் செயலகங்கள் பிரதேச செயலகங்கள் மட்டுமன்றி கிராம சேவை அலுவலகங்கள் வரை சுனாமி புனர்நிர்மாண, புனர்வாழ் நிதிகளும் பொருட்களும் சூறையாடப்பட்டுள்ளன. அரசாங்க திணைக்களங்களில் மட்டுமன்றி அரச சார்பற்ற நிறுவனங்களிலும் சுனாமி நிதியும் பொருட்களும் கையாடல்களுக்கு உள்ளாகியுள்ளன. ஏற்கனவே சுனாமி நிதிக்கென வந்த பெருந்தொகைப் பணம் பிரதமர் ஊடாகத் திசை திருப்பப்பட்டதென்றும் குற்றச்சாட்டு இருந்து வருகின்றது. அது இன்று நீதிமன்றம் வரை சென்றுள்ளது.

இந் நிலையிலேயே அரசாங்க கணக்காய்வாளர் திணைக்களம் சுனாமி நிதியில் இடம் பெற்றுள்ள மிகப் பெரும் மோசடிகளையும் ஊழல்களையும் அறிக்கையாக்கி பாராளுமன்றத்தில் சமர்ப்பித்துள்ளது. சுனாமிப் பேரழிவு ஏற்பட்ட பின்பு கடந்த யூன் மாதம் வரையான ஆறு மாதங்களில் சர்வதேச உதவி நிதியாக மொத்தம் 1168.8 மில்லியன் அ. டொலர்கள் கிடைத்துள்ளன. அவற்றில் 158.34 மில்லியன் மட்டுமே அதாவது 13.5 சதவீதம் மட்டுமே புனரமைப்புக்கு செலவிடப்பட்டுள்ளது. அதேவேளை உள்நாட்டில் திரட்டப்பட்ட சுனாமி நிதி 4.277, 999, 499 ரூபாய்களாகும். இதில் 1,576, 318, 448 ரூபாய்கள் (37வீதம்) மட்டுமே செலவிடப்பட்டுள்ளது. இத்தகைய உள்நாட்டு நிதி திரட்டப்பட்டதற்குரிய முறையான கணக்கு விபரங்கள் எதுவும் அமைச்சுக்களிலோ திணைக்களங்களிலோ வைத்திருக்கப்படவில்லை என மேற்படி கணக்காளர் திணைக்கள அறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது.

இவை மட்டுமன்றி 384 அரச சார்பற்ற நிறுவனங்கள் புனர்நிர்மாணப் பணிகளுக்கு 1,321 மில்லியன் அ.டொலர்களைச் செலவு செய்ய முன் வந்த போதும் அரசாங்கத்துடன் ஒப்பந்தம் செய்யப்படாமையால் பணிகள் எதுவும் தொடங்கப்படவே இல்லை. சுனாமி அழிவின் பெயரில் வெளிநாடுகளில் இருந்து பெருந்தொகைப் பொருட்கள் கப்பல்கள் விமானங்கள் மூலம் வந்தடைந்தன. அவற்றை அரசாங்க திணைக்களங்கள் அரச சார்பற்ற நிறுவனங்கள் பொறுப்பேற்றன. ஆனால் அவற்றின் பெரும்பகுதி முறையாகப் பகிர்ந்தளிக்கப்படாது கள்ளச் சந்தையில் விற்கப்பட்டன. உதாரணமாக சுனாமியால் கடுமையாகப் பாதிக்கப்பட்ட கல்முனைப் பிரதேசத்தில் 1,010,950 ரூபா பெறுமதியான உதவிநிவாரணப் பொருட்கள் காணாமல் போயின. 65 மின் பிறப்பாக்கிகள், 78 நீர்த்தாங்கிகள், 88 கூரைத் தகடுகள், 40 நீர் இறைக்கும் யந்திரங்கள் களவாடப்பட்டன. அம்பாறையில் 1,350,000 ரூபா பெறுமதியான கூப்பன்கள் பாதிக்கப்படாத தனிநபர்களுக்கு முறைகேடாக விநியோகிக்கப்பட்டன. இவற்றில் அதிகாரிகள் முதல் கிராம அலுவலர்கள் வரை சம்மந்தப்பட்டனர்.

சுனாமிப் புனரமைப்புப் பணிகளுக்கு 506 வாகனங்கள் இறக்குமதியாகின. தொடர்ச்சி 4ம் பக்கம்

# அமெரிக்க கோக்கா கோலாவை நிராகரிப்போம் அடித்து விரட்டுவோம்



**கோக்- தண்ணீர் தனியார்மயத்தின் குறியீடு.** திருநெல்வேலி மாவட்டம் கங்கை கொண்டானில் அமையவிருக்கும் கோக் ஆலைக்கு, சிப்காட் வளாகத்தில் நிலம் கொடுத்து தாமிரவருணியிலிருந்து அன்றாடம் 5 இலட்சம் லீட்டர் தண்ணீரையும் குழாய் மூலம் கொண்டு வந்து தரவிருக்கிறது தமிழக அரசு, ஒரு லீட்டர் தண்ணீரின் விலை ஒண்ணேகால் பைசா, இதுவன்றி அங்கே ஆழ்துளைக் கிணறுகளை இறக்கி விருப்பம் போல நிலத்தடி நீரைச் சூறையாடவுமிருக்கிறது கோக்கா கோலா நிறுவனம். நெல்லை, தூத்துக்குடி, விருதுநகர் மாவட்ட மக்கள் குடிநீரும் பாசனநீரும் இல்லாமல் தவிக்கும்போது அந்த மண்ணுக்குரிய தாமிரவருணித் தண்ணீரை லீட்டடர் ஒண்ணே கால் பைசாவுக்கு வாங்கி 12 ரூபாய்க்கு விற்று மக்களைக் கொள்ளையிடப் போகிறது கொக்கோ கோலா, கட்டப்பொம்மனும், பூலித்தேவனும், சுந்தரலிங்கமும், வ.உ.சி.யும் பிறந்த மண் மறுகொலனியா திக்கத்தால் உறிஞ்சப்படவிருக்கிறது.

**கோக் என்பது அமெரிக்க மேலாதிக்கத்தின் சின்னம்.** "உலகமே தன் தாகத்தைத் தணித்துக் கொள்ள தம் பானத்தை எதிர் பார்த்துக் காத்திருக்க வேண்டும்" என்பது அந்த நிறுவனத்தின் இலட்சிய வாசகம். 200 நாடுகளை ஆக்கிரமித்திருக்கும் கோக், தனது லாபத்தில் 70சதவீதத்தை அமெரிக்காவுக்கு வெளியிலிருந்துதான் கொள்ளையிடுகிறது. ஒவ்வொரு நொடியும் கோக் நிறுவனத்தின் ஏதாவதுதொரு பானம், உலகெங்கிலும் 13,0000 தொண்டைகளுக்குள் இறங்கிக் கொண்டிருக்கிறது. 'கோக்கினால் நனைக்கப்பட்ட தொண்டையிலிருந்து அமெரிக்க எதிர்ப்புக் குரல் எழும்பாது' என்பது அவர்களின் நம்பிக்கை. ஏனென்றால், கோக்- அடிமைகளின் பானம்!

**கோக்-ஆக்கிரமிப்பின் சின்னம்.** கேரளத்தின் நீர்வளமிக்க பிளாச் சிமடா கிராமத்தை அது இரண்டே ஆண்டுகளில் சுடுகாடாக்கியது; அம் மக்களைக் குடிநீருக்காக அன்றாடம் 5கி. மீ தூரம் அலையச் செய்தது. உள்ளூர் மக்கள் தவித்தாலும், "அந்தக் கிராமத்தின் நிலத்தடி நீரை உறிஞ்சும் உரிமை அமெரிக்கக் கம்பெனிக்கு உண்டு" என்று நீதிமன்றத்தைச் சொல்ல வைத்ததன் மூலம் தான் ஒரு ஆக்கிரமிப்பாளன் என்பதை நிரூப்பித்திருக்கிறது கோக்.

**கோக் ஒரு கொலைகாரன்.** தனக்குத் தண்ணீர் தந்த பிளாச்சிமடா மக்களின் மண்ணில் நஞ்சை வைத்திருக்கிறது. கோக் நச்சுக் கழிவுநீரால் விளைநிலத்தை மாசுபடுத்தியது மட்டுமல்ல, கொடிய இராசாயனக் கழிவுகளை 'இயற்கை உரம்' என்று விவசாயிகளிடம் விநியோகித்து அவர்களுடைய மண்ணையே கொன்றிருக்கிறது. கொலம்பியாவில் தன் நிர்வாகத்தை எதிர்த்துப் போராடிய தொழிற்சங்கத் தலைவர்களை. கூலிப் படை வைத்துக் கொன்று குவித்திருக்கிறது.

**கோக் ஒரு உயிர்க் கொல்லி.** லின்டேன், டி.டி.டி, மலத்தியோன் போன்ற பூச்சி மருந்துகள் மேலைநாடுகளைக் காட்டிலும் 36 மடங்கு அதிகமாக இந்திய கோக்கில் இருப்பது நிரூபிக்கப்பட்டிருக்கிறது. ஆந்திரா, சட்டிஸ்கார் விவசாயிகள் பருத்திச் செடியின் பூச்சியைக் கொல்ல கோக் தெளிக்கிறார்கள். நூற்றாண்டுகள் ஆனாலும் மக்கி மடியாத மனிதனின் பற்களையே கோக். அரித்துக்கரைக்கிறது. கக்கூசின் கறைகளையும் அகற்றுகிறது கோக்.

கோக் ஒரு மானம் கொல்லி. நஞ்சென்றும், பூச்சி மருந்தென்றும், கக்கூசு கழுவும் திரவமென்றும் தெரிந்த பின்னரும் அதைக் காசு கொடுத்து வாங்கிச் சுவைக்கச் செய்து 'தனது அடிமைகளுக்கு அறிவு மட்டுமல்ல, மானமும் கிடையாது' என்பதை அது உலகுக்கே அறிவிக்கிறது. ஆரோக்கியமும் புத்துணர்ச்சியும் அளிக்கும் இளநீரையும் மோரையும் எலுமிச்சைச் சாறையும் புறந்தள்ளி "இந்தக் கக்கூசு பானத்தை அருந்துங்கள்!" என்று விளம்பரம் செய்ய வெட்கங்கெட்ட தேசத்துரோகிகளை அது கூலிக்கு அமர்த்திக் கொள்கிறது.

கோக்கின் மீதான குற்றச்சாட்டுகள் ஒவ்வொன்றும் பெப்சிக்கும் பொருந்தும். கோக்கும் பெப்சியும் அமெரிக்க மூத்திரம். தண்ணீரை மூத்திரமாக்கும் 'தொழிலுக்கு' தாகத்தைக் காசாக்கும் 'தொழிலுக்கு' நம் தாமிரவருணியைத் தாரைவார்க்க முடியாது. கோக், பெப்சியைப் புறக்கணியுங்கள்! மறுகாலனியாக்கத்திற்கெதிரான போராட்டத்தில், தண்ணீர் தனியார் மயத்திற்கெதிரான போராட்டத்தில் அணிதிரளுங்கள்!

*நன்றி: தமிழக நூல் :தண்ணீர் தாகத்திற்கா இலாபத்திற்கா?*

# வாசுதேவ கனவு காண்கிறார்



தோழர் வாசுதேவ நாணயக்காரா ஒரு இடதுசாரி. பாராளுமன்றத்தில் அங்கம் பெற்றவர். நல்ல மனிதர் என்றும் பேசப்படுபவர். அநீதியும் அடக்கு முறைகளும் எங்கும் இடம் பெற்றாலும் எதிர்த்து குரல் கொடுப்பவர். அது மட்டுமன்றி மக்கள் போரட்டங்களில் நேரடியாகவே பங்கு கொள்பவர். சந்திரிகாவின் பொதுசன முன்னணி அரசாங்கத்தில் பாராளுமன்ற உறுப்பினராக இருந்து தேசிய இனப் பிரச்சினை விடயத்தில் தமிழ் மக்கள் சார்பாக நின்று 'சமாதானத்திற்கான யுத்தத்தை' எதிர்த்து எதிர்க்கட்சி வரிசையில் வந்து அமர்ந்து தனது அரசியல் நேர்மையை நிருபித்தவர். அதன் பின் அவர் பாராளுமன்றம் செல்ல இயலவில்லை. இருப்பினும் யுத்தத்திற்கு எதிராகவும் தமிழ் மக்களின் உரிமைகள் உள்ளடங்கிய சமாதானத்திற்காகவும் தொடர்ந்து குரல் கொடுத்து வருகிறார். இதன் காரணமாகவே புதிய- ஜனநாயக கட்சி வாசுவுடன் இடதுசாரி நட்புறவு டன் நடந்து வந்தது.

வாசுதேவ நாணயக்கார ட்ரொட்சிசக் கட்சியான சமசமாஜக் கட்சியில் இருந்தே வந்தவர். அதன் காரணமாக அடிக்கடி அவரிடம் குழப்பகரமான முடிவுகள் மேற்கொள்ளும் போக்கும் இருந்து வந்தது. அதனால் நிலையான ஒரு நிலைப்பாட்டைக் கொள்ளாது அவ்வப்போது குழம்பிய தீர்மானங்களுக்கு வருவது அவரின் அரசியல் பலவீனமாகும்.

அத்தகைய பலவீனத்தின் ஒரு அம்சமாகவே எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் பிரதமர் மகிந்த ராஜபக்சாவை ஆதரிக்க முடிவு செய்துள்ளார். இத்தகைய முடிவு பலருக்கு ஆச்சரியத்தை கொடுத்துள்ளது. வாசுவுக்கு பாராளுமன்ற ஆசை மீண்டும் வந்து விட்டதா? என்று கேட்பவர்களும் உண்டு. பதவிகளுக்கும் சலுகைகளுக்கும் விலை போகாத வாசு எப்படி மகிந்த ராஜபக்சாவை ஆதரிக்க முடிவு செய்தார் என்பது விநோதமானது தான்.

மகிந்தா ஏற்கனவே ஜே.வி.பி - ஹெல உறுமயவுடன் கைகோர்த்து பேரினவாத வெறித்தன நிபந்தனைகளுடன் இணைந்து நிற்கிறார். அப்படி இருக்கும் போது வாசு சொல்கிறார் தான் ஜே.வி.பிக்கும் ஹெல உறுமயவுக்கும் எதிராம். ஆனால் மகிந்தாவிற்கு ஆதரவாம். அத்துடன் மகிந்தாவை மிகப் பெரும்மை வாக்குகளால் வெல்ல வைத்து ஜே. வி. பி- ஹெல உறுமயவின் இனவாத நிபந்தனைகளைத் தோற்கடித்து புலிகள் இயக்கத்துடன் பேசவும் பொதுக்கட்டமைப்பு உட்பட அரசியல் தீர்வும் சமாதானமும் காணலாம் என்றும் கூறி வருகிறார் வாசுதேவ நாணயக்காரா

வாசுவின் மேற்படி நிலைப்பாட்டிற்கு சிரிப்பதா அல்லது சினப்பதா என்றே தெரியவில்லை. அவர் கூறுவதில் எவ்வித தர்க்கமோ நியாயமோ அரசியல் விவேகமோ இருப்பதாக நமக்குப் புரியவில்லை. சுருக்கமாகக் கூறுவதானால் வாசுதேவ ஒரு வகை அரசியல் கனவு காண்கிறார் என்றே கூறவேண்டியுள்ளது. இந்தக் கனவு கலையும் போது இப்போது ஆதரிக்க முற்பட்டுள்ள மகிந்தாவை வாசு எதிர்க்கவே செய்வார். இத்தகைய வீண் நம்பிக்கைகளும் கனவுகளும் தான் கடந்த கால இடதுசாரி இயக்கப் பின்னடைவுகளுக்கு காரணங்களாகும். வாசுவிற்கும் அதில் பங்கு உண்டு என்பதை நிராகரிக்க முடியாது.




மூத்த கவிஞர் தமிழறிஞர் தேசிய கலை இலக்கிய பேரவையின் தலைவர் கலாநிதி இ.முருகையனின் 70 வயது பூர்த்தியைக்குறித்து யாழ்ப்பாணத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட கலை இலக்கிய ஒன்று கூடலில் பேராசிரியர் அ.சண்முகதாஸ் பேராசிரியர் சி.சிவசேகரம் குழந்தை ம.சண்முகலிங்கம் ஆகியோர் உரை நிகழ்துவதையும் முருகையன் ஏற்புரை வழங்குவதையும் ஒன்று கூடலில் கலந்து கொண்டோரில் ஒரு பகுதியினரையும் படத்தில் காணலாம்

www.tamilarangam.net
நன்றி - நூலகத்திட்டம்



# மே.கொ.தி. எதிர்ப்பு வெறும் பிரச்சாரம் அல்ல

## மலையக மண்ணையும் மக்களையும் பாதுகாக்கும் மக்கள் மயப்பட்ட போராட்டமாகும்!

மேல்கொத்மலைநீர்மின் திட்டத்திற்கு எதிரானமக்கள் இயக்கத்தின் இரண்டாவது கட்ட போராட்டமான ஒரு மாத எதிர்ப்பு நடவடிக்கைகள் செப்ரெம்பர் மாதத் 1ஆம் திகதி முதல் ஒக்டோபர் மாதம் 2 ஆம் திகதி வரை நடைபெற்றது. முதலாவது கண்டனப்போராட்டம் ஏப்பிரல் மாதம் 10 திகதி முதல் யூலை 3 ஆம் திகதிவரை நடைபெற்றது.

இந்த ஒரு மாத எதிர்ப்பு நடவடிக்கைகளின் மூலம் மக்கள் மத்தியில் அத்திட்டத்தினால் ஏற்படக்கூடிய நாசங்கள் பற்றிய அறிவூட்டல்களும் அதனை தடுத்துநிறுத்துவதற்கான வழிமுறைகள் பற்றிய பரப்புரைகளும் நடைபெற்றன.

இந்தக் கட்ட நடவடிக்கைகளில் மூலம் அத்திட்டத்தை உண்மையாகவே தடுத்து நிறுத்த வேண்டும் என்று எண்ணம் கொண்ட சக்திகளையும் போலியாக எதிர்ப்பதாகக் கூறிக்கொள்ளும் சக்திகளையும




பிரித்தறிய வாய்ப்புகள் கிடைத்துள்ளன. மக்கள் மத்தியில் கருத்தை பரப்பியதுடன் மக்களை அணிதிரட்டும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டதுடன் மக்கள் விரோத சக்திகளை அம்பலப்படுத்தவும் வாய்ப்பு ஏற்பட்டது.

வீதிகளிலும், பொதுஇடங்களிலும் வீடுகளிலும் கறுப்புக் கொடிகள் போடப்பட்டன. பொதுக்கூட்டங்கள் கலந்துரையாடல்கள் நடைபெற்றன. செப்டெம்பர் 14,15ஆம் திகதிகளில் கொழும்பில் போராட்டத்திற்கான நிதி சேகரிப்பு நடைபெற்றது. 17,18,24 ஆம் திகதிகளில் மலையகத்தில் நிதி சேகரிக்கப்பட்டதுடன் ஆர்ப்பாட்டங்களும் நடைபெற்றன.

25 ஆம் திகதி தலவாக்கொல்லை கதிரேசன் கோயில் மண்டபத்தில் மேல்கொத்மலைத்திட்டத்திற்கு எதிரான மக்கள் மாநாடுநடைபெற்றது. அம்மாநாடு பற்றிய போஸ்டர்களை ஒட்டிய 5 செயற்பாட்டாளர்கள் பத்தனை பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டனர். 25 ஆம் திகதி மாநாட்டை குழப்பும் நோக்கத்துடன் கைது செய்யப்பட்ட அவர்கள்27ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டனர். 27 ஆம் திகதி பாலா, பாலு சுதர்சன், சற்குணம், சதாசிவம் ஆகிய ஐந்து இளைஞர்களும் பிணையில் விடுவிக்கப்பட்டு அவர்கள் சென்ற வாகனம் விடுவிக்கப்பட்டது.

இவ்வாறான சூழ்நிலையிலும் அந்த மக்கள் மாநாடு நடைபெற்றது. ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டதின்படியும்

**- அழகேசன் -**

அம்மாநாட்டில் மீண்டும் தீர்மானிக்கப்பட்டதற்கு இணங்கவுமே ஒக்டோபர் 2 ஆம் திகதி தலவாக்கொல்லையில் ஆர்ப்பாட்டம் செய்வதென தீர்மானிக்கப்பட்டது.

29 ஆம் திகதி கொழும்பிலுள்ள ஜப்பானிய தூதரகத்தில் மேல்கொத்மலைத்திட்டத்தை எதிர்த்து மகஜரொன்று சமர்ப்பிக்கப்பட்டது. ஜப்பானிய சர்வதேவச முகாமைத்துவ வங்கி அத்திட்டத்திற்காக வழங்கவுள்ள கடனை மீளப்பெற்றுக் கொள்ள வேண்டு மென்றும் ஜப்பானிய மயோடா கம்பெனி அத்திட்டத்தின் நிர்மாணப் பணிகளை மேற்கொள்ளக்கூடாது என்றும் வலியுறுத்திக் கேட்கப்பட்டுள்ளது.

மேலும் ஒக்ரோபர் 2ம் திகதி ஆர்ப்பாட்டத்திற்கு எல்லோருடைய ஆதரவும் கேட்கப்பட்டது. ம.ம. மு, மே.மா. ம.மு, இ.ஐ.தொ.மு, வி.தோ.கா, அ.இ.ஐ. தோ.தொ.சங்கம் போன்றன ஆதரவு வழங்குவதென அறிவித்திருந்தன.

தீர்மானிக்கப்பட்டப்படி மேல்கொத்மலைத்திட்டத்திற்கு எதிரான மக்கள் இயக்கத்தின் செயற்பாட்டாளர்கள் 2ம் திகதி தலவாக்கொல்லையில் பகல் 12 மணிக்கு ஆர்ப்பாட்டப் பேரணியை ஆரம்பித்தனர். தலவாக்கொல்லை கதிரேசன் கோவிலுக்கு அருகில் இருந்து பேரணி தலவாக்கொல்லை பஸ்தரிப்பு நிலையத்திற்கு சென்றது. அங்கு மறியல் ஆர்ப்பாட்டம் தொடர்ந்தது.

இந்த ஆர்ப்பாட்டப் பேரணிக்கு பின்னாலேயே சென்ற பேரினவாதக் குண்டர்கள் ஆர்ப்பாட்டக்காரர்களை இழிவாகப் பேசி கூக்குரலிட்டதுடன் அவர்கள் மீது தாக்குதல் நடத்தினர். இந்நிலையில் கடுமையான இழுபறிக்கு பின்னர் ஆர்பாட்டக்காரர்கள் மறியலை முடித்தனர்.

மேல்கொத்மலைத்திட்டத்திற்கு எதிரான மக்கள் இயக்கத்தின் அமைப்பாளர் இ.தம்பையா தலைமையில் நடைபெற்ற அந்த ஆர்ப்பாட்டப் பேரணியில் புதிய- ஜனநாயக கட்சியின் பொதுச்செயலாளர் சி. கா. செந்திவேல், அக்கட்சியின் மலையகப்பிரதேச செயலாளர் ச. பன்னீர்செல்வம், புகையிரத தொழிலாளர் கூட்டமைப்பின் தலைவர் சரத்பெர்ணான்டோ இலங்கை ஆசிரியர்சங்கத் தலைவர் ஜோசப் ஸ்டாலின், அகில இலங்கை மீனவர் சங்கத்தலைவர் விஜேந்திரன், ஆசிரம பிதா கீத பொன்கலன், சமூகசெயற்பாட்டாளர் மேகலா சண்முகம் எஸ்.பஞ்சவர்ணம் புதிய மலையகம் மகேந்திரன் உட்பட தொழிலாளர்கள் இளைஞர்கள் கலந்துகொண்டனர்.

அவ்வார்ப்பாட்டத்திற்கு ஆதரவு தருவதாகக் கூறிய ஏனைய அமைப்புகள் எதுவும் அவ்வார்ப்பாட்டத்தில் கலந்துகொள்ளவில்லை. அதில் ம.ம. முன்னணிக்கு அத்திட்டத்தை முற்று முழுதாக எதிர்க்கும் நோக்கம் இருப்பதாகத் தெரியவில்லை. எதிர்ப்பதாகக் கூறுகின்ற ஏனைய அமைப்புகள் அங்கு வரவில்லை.

எனினும் போராட்டத்தை முன்னெடுப்பதற்கான ஏற்பாடுகள் மிகவும் பொறுப்புடன் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுகின்றன. மக்கள் போராட்டங்களுக்கு சில சில பின்னடைவுகள் ஏற்பட்டாலும் அவை தோல்வியடைந்ததாக வரலாறில்லை.

# மேல் கொத்மலைத்திட்டத்தின் நாசம் அறியாத ம.ம.மு

மலையக மக்கள் முன்னணிக்கு இன்னும் மேல் கொத்மலைத்திட்டத்தினால் ஏற்படக்கூடிய விளைவுகள் பற்றித் தெரியவில்லையாம். 'மக்கள் அத்திட்டத்தினை எதிர்க்கிறார்கள் என்றும் அதனால் ஏற்படக்கூடிய விளைவுகள் பற்றி விளக்கங்கள் அளிக்கப்பட வேண்டியதும் கருத்துப்பரிமாற்றங்கள் செய்யப்பட வேண்டியதும் அவசியம். அதுவரை மேல் கொத்மலைத்திட்டத்தை தொடங்கக்கூடாது' என்றும் ம.ம.மு ஜனாதிபதி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவிடம் சமர்ப்பித்த மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதிலிருந்து ம.ம.மு அத்திட்டத்தை முற்றாக கைவிட வேண்டுமென்ற நிலைப்பாட்டில் இல்லை என்பது தெளிவாகிறது. ஆகஸ்ட் மாதம் 11ஆம் திகதி முதல் 14 திகதி வரை தலவாக்கொல்லையில் நடைபெற்ற இளைஞர் சிலரின் சாகும்வரை உண்ணாவிரதத்தை முடித்து வைத்தப்பிறகு நடைபெற்றக் கூட்டத்தில் பேசும்போது மேல்கொத்மலைத்திட்டத்தை முற்றாக கைவிட வேண்டும் என்பதே ம.ம.மு இன் நிலைப்பாடு என்று அதன் தலைவர் பெ. சந்திரசேகரம் தெரிவித்தார்.

தற்போது பத்திரிகைகளில் வெளியாகி இருக்கும் ம.ம.மு ரணில் விக்கிரமசிங்ஹவிற்கு சமர்ப்பித்த மகஜரை பார்க்கின்ற போது ம.ம.மு மேல்கொத்மலைத்திட்டத்தை முற்றாக கைவிடவேண்டும் என்பதல்ல என்பது தெளிவாகிறது. அதனை மீண்டும் அவரது தனிப்பட்ட கட்சி நலனுக்கு பேரம்பேசும் விடயமாக அத்திட்டத்தை சந்திரசேகரம் கையாளப்போகிறார்.

இதனால்தான் ஒக்டோபர் 2 ஆம் திகதி தலவாக்கொல்லையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொள்வதாக வாக்குறுதி அளித்து விட்டு அதில் கலந்து கொள்ளவில்லை என்பதும் புரியக் கூடியதாகும்.

இ.தொ.கா தலைமை மேல்கொத்மலைத்திட்டத்தை ஆதரிக்கிறது. ம.ம.முன்னணி யூஎன்.பிக்கு ஆதரவு தெரிவித்து உண்மையான முகத்தைக் காட்டுகிறது. ஆனால் மக்களை ஏமாற்ற எதிர்ப்பு போன்று பாசாங்கு செய்கிறது. வேறும் சில அமைப்புகளும் இவ்வாறான இரட்டை நிலை தான். எல்லாம் சுயநலத் தேவைக்கானவையேயாகும்.

## புதியபூமிக்கு ஒரு கடிதம்

# இன்னுமொரு கூஜா தூக்கும் நடவடிக்கை

மலையகப் புத்திஜீவிகள் என்று கூறிக்கொண்டு சில N.G.O எஜமானர்கள் மலையகத்தமிழ் மக்களின் (அவர்களின் பாஷையில் இந்திய வம்சாவழித் தமிழர்கள்) பிரச்சினைகளை தொகுத்து மகஜரொன்றை தயாரித்திருப்பதாக அறியமுடிகிறது. இரண்டு பிரதான கட்சிகளின் வேட்பாளர்களிடம் சமர்ப்பிப்பதற்கான அம்மகஜர் தயாரிக்கப்பட்டுள்ளதாம்.

இ.தொ.கா 19 அம்சக் கோரிக்கைகளையும் ம.ம.மு. 15 கோரிக்கைகளையும் சமர்ப்பித்திருந்தன. இவற்றிலிருந்து எவ்விதத்திலும் N.G.O எஜமானர்களின் கோரிக்கைகள் வேறுட்டதாகவோ முற்போக்கானதாகவோ இல்லை. 1950 ஆம் ஆண்டு இ.தொ.காவின் ஆரம்ப மாநாட்டில் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளைத்தான் மலையகத் தமிழ் மக்களின் சார்பில் இன்றும் முன்வைக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலை இருக்கிறது. அன்றிருந்த அதே பிரச்சினைகள் இன்னும் தீர்க்கப்படாமலே இருக்கின்றன. அப்பிரச்சினைகளில் பிரதானமானவற்றை முதன்மைபடுத்தாமல் உப பிரச்சினைகளை முதன்மைப்படுத்தியே கோரிக்கைகள் தயாரிக்கப்பட்டுள்ளன. இரண்டு தொழிற்சங்கங்களின் கோரிக்கைகளும் அவ்வாறே அமைந்துள்ளன.

இவற்றுக்கு மாறாக புதிதாக ஏதோ செய்வதாகக் கூறிக்கொண்டுத்தான் N.G.O காரர்கள் கோரிக்கைகள் அடங்கிய மகஜரை தயாரித்துள்ளனர். தொழிற்சங்க வட்டாரங்களுக்கு அப்பால் முதன்முறையாக மலையக புத்திஜீவிகள் இவ்வாறான மகஜரொன்றை சமர்ப்பிப்பதாகப் பிரசாரங்கள் செய்யப்படுகின்றன.

மலையகத் தமிழ் மக்களா? இந்தியவம்சாவழி தமிழ் மக்களா? என்ற அடையா ளப்பிரச்சினையில் இந்தியவம்சாவழித் தமிழ்மக்கள் என்ற பிற்போக்கு அடையா ளத்தையே அம்மகஜரில் காணமுடிகிறது. மலையகத்தமிழ் மக்களை ஒரு தேசிய இனம் என்று கூறாமல் மிகவும் பின்தங்கிய நிலையில் பிச்சா பாத்திரம் ஏந்தி நிற்கும் சமூகமாகவே காட்டப்பட்டுள்ளது.

சரியான அடிப்படையான நிலைப்பாடுகளை எடுக்காமல் பேரினவாதிகளை அசௌகரியப்படுத்தாமல் அவர்களது மனம் நோகாமலே அக்கோரிக்கைகளும் தேர்ந்தெடுக்கப்பட்டு வெளிப்படுத்தப்பட்டுள்ளன. மலையகப் பகுதிகளில் தமிழ்மொழிப்பிரயோகம், பிரஜாஉரிமைப்பிரச்சினை, வீட்டுப்பிரச்சினை, பின்தங்கிய நிலையிலிருக்கும் மலையக சமூகத்தின் கல்வி வேலை வாய்ப்பில் விஷேட சலுகைகள் போன்றவற்றையே அம்மகஜரில் வலியுறுத்தியுள்ளனர். இந்த மகஜரை இரண்டு பெரிய கட்சிகளின் வேட்பாளர்களான ரணில்விக்கிரமசிங்ஹவிடமும் மஹிந்த ராஜபக்ஷவிடமும் ஒப்படைப்பதுடன் அவர்களின் வேலை முடிந்துவிடுகிறது.

மலையகத்தமிழ்மக்களின் உடனடியான நீண்டகால பிரச்சினைகளையும் தீர்வுகளையும் முன்வைத்து மக்கள் மத்தியில் அதற்கு ஆதரவான அபிப்பிராயத்தை திரட்டி சுதந்திரமான அணுகுமுறையொன்றை முன் எடுப்பதே இன்றைய தேவையாகும். ஆனால் இந்த N.G.O காரர்கள் சுதந்திரமான அனுகுமுறையென்று கூறிக்கொண்டு இதுவரை மலையகத்தலைவர்கள் செய்துவந்த பேரினவாத முதலாளித்துவ கட்சிகளுக்கு கூஜா தூக்கும் வேலையையே செய்கின்றனர். அந்தளவிற்கு மலையக அரசியல் தலைமைத்துவச் சூழல் தாழ்ந்தே இருக்கிறது.

முஸ்லிம் கட்சிகளுக்கு அப்பால் முஸ்லிம் புத்திஜீவிகள் எனப்படுபவர்கள் முஸ்லிம் மக்களின் சார்பில் பல கோரிக்கைகள் அடங்கிய மகஜர்களை இரண்டு ஜனாதிபதி வேட்பாளர்களுக்கும் கொடுத்தனர். அதே மாதிரியான வேலையைத்தான் இந்த மலையக N.G.O காரர்களும் செய்துள்ளனர்.

இந்நடவடிக்கையானது மலையகத்தின் தற்போதைய எழுச்சி பெற்று வரும் அரசியலுக்கு மாறாக மற்றொரு தலைமையை தோற்றுவிப்பதற்கான முயற்சியாகும். அத்துடன் தேசியரீதியில் இரண்டு பெரிய கட்சிகளுக்கு அப்பால் புதிய அரசியல் பாதை பற்றிய பரந்த சிந்தனைக்கும் எதிரானதாகும்.

தொழிற்சங்கத் தலைவர்களைப் போன்ற இந்த N.G.O காரர்களும் பிற்போகான அரசியல் அடிப்படைகளை கொண்ட மக்கள் விரோத நிலைப்பாட்டினை முன்னெடுப்பவர்களே ஏன்பது புரிந்து கொள்ளப்பட வேண்டும்.

**இப்படிக்கு க. சுதர்ஷன் தலவாக்கொல்லை**

# தலவாக்கொல்லையில் நீர் விநியோகம் துண்டிப்பு

ஒக்டோபர் 2 ஆம் திகதி மேல்கொத்மலைத்திட்டத்திற்கு எதிரான மக்கள் இயக்க ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது நடத்தப்பட்ட குண்டர் தாக்குதலை கண்டித்து கிறேட் வெஸ்டன் கல்கந்தை தோட்ட மக்கள் அத்தோட்டத்திலிருந்து தலவாக்கொல்லை நகரசபை எல்லையிலுள்ள மக்களுக்கு விநியோகிக்கப்படும் குடிநீரை துண்டித்துள்ளனர்.

ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது தாக்குதல் நடத்திய குண்டர்களுடன் தலவாக்கொல்லை நகரசபைத் தலைவர் நிமல சேனாவும் இருந்தமையால் அவர் அத்தாக்குதலுக்காக மன்னிப்பு கேட்க வேண்டுமென்ற நிபந்தனையை விதித்தே கல்கந்தை மக்கள் மேற்படி நீர்விநியோகத்தை துண்டித்துள்ளனர் என அறியமுடிகிறது. அதனையடுத்து மேல் கொத்மலைத்திட்டத்திற்கு எதிரான போராட்டங்களுக்கு ஆதரவாக மக்கள் மேலும் பல வேறு நடவடிக்கைகளில் ஈடுபடவுள்ளதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் கூறுகின்றன.

# மயில் சின்னம் விலைபோனதா?

கே. வெள்ளையன் ஆரம்பித்து சி. வி வேலுப்பிள்ளை போன்றவர்களால் கட்டி வளர்க்கப்பட்ட தொழிலாளர் தேசிய சங்கம் சிதைக்கப்பட்டது. முன்பு அதன் அரசியல் பிரிவு தேசிய ஜனநாயக கட்சியாக மாற்றப்பட்டு மயில் சின்னம் அதன் சின்னமானது.

மயில் மீது ஏறிவந்த கந்தன் தற்போது அதனை அகில இலங்கை முஸ்லீம் தேசிய முன்னணி என்ற கட்சியிடம் கொடுத்துவிட்டதாக அறியமுடிகிறது. தேசிய ஜனநாயக கட்சியும் இல்லை. மயில் சின்னமும் இல்லை. கந்தனின் கருணை மிகவும் ஆழமானது தான். மலையக அரசியலில் இது போன்ற குத்துக்கரணங்களுக்கு பஞ்சமே இல்லை. ஆறுமுகன் தொட்டு கந்தனானவர் வரைக்கும் இவை சர்வ சாதாரணம் தான். இத்தகைய விற்பனை கொடுக்கல் வாங்கல்கள் எதுவரைக்கும் என்றால் மலையக மக்கள் விழிப்படையும் வரை தான்.

## சுனாமி கொள்ளைய......

3ம் பக்க தொடர்ச்சி

இதில் 207 அரசாங்கப் பணிகளுக்கும், 290 அரசார்பற்ற நிறுவனங்களுக்கும் 9 வேறு நிறுவனங்களுக்கும் சென்றடைந்தன. இவ்வாகனங்களின் பயன்பாடு யாரால் எதற்குப் பயன்படுகிறது. முற்றாகச் சேதமடைந்த வீடுகள் 40,974 எனக் கூறப்பட்ட அதே வேளை 1055 வீடுகள் மட்டுமே (2வீதம்) புனரமைக்கப்பட்டன என்றும் அவ் அறிக்கை கூறுகின்றது.

அமைச்சர்கள் உயர் அதிகாரிகள் முதல் கீழ்மட்ட ஊழியர்கள் வரை சுனாமிப் பேரழிவுக்கான நிதியையும் உதவி நிவாரணப் பொருட்களையும் கொள்ளையிட்டுள்ளனர். அவ்வாறே அரச சார்பற்ற 'தொண்டர்'களான அதிகாரிகளும் கையாடி தமதாக்கிக் கொண்டனர். இவற்றுக்கான சாட்சியமாகவே மேற்படி கணக்களார் திணைக்களத்தின் அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இன்றைய முதலாளித்துவ சமூக அமைப்பில் நீதி நேர்மை மனச்சாட்சி என்பதெல்லாம் வெறும் பொய்யுரைகளேயாகும். சுயநலத்திற்கும் சுயஈடேற்றத்திற்கும் எந்தக் குறுக்கு வழிகளையும் கையாளாலாம் என்பதே அவர்களது தர்மமாகும். மனித நேயமும் மனட்சாட்சியும் என்பது முதலாளித்துவ அதிகாரிகளுக்கு கைவராத விடயங்களாகும். செத்த பிணங்களிலும் அழிந்த வீடுகளிலும் எதனைப்பிடுங்க முடியுமோ அவற்றைப் பிடுங்கிக் கொள்ளவே செய்வார்கள். இவர்கள் தான் அரச- அரச சார்பற்ற நிறுவனங்களில் உயர்தர ஆடைகள் அணிந்து உயர்க வாகனங்களில் வலம் வரும் நவீன கொள்ளையர்களாவர். இவர்களது மூக மூடிகளை மக்கள் ஒரு நாள் கிழித்தெறியவே செய்வார்கள்.

www.tamilarangam.net நன்றி - நூலகத்திட்டம்



REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA
வெகுஜன அரசியல் மாதப் பத்திரிகை
புதிய பூமி
Puthiya Poomi
சுற்று12 ஒக்ரோபர் 2005 பக்கம்12 விலை 12/- சுழற்சி 84

எஸ்.47,3ம் மாடி , கொழும்பு மத்திய சந்தைக் கட்டிடத் தொகுதி.
கொழும்பு 11, இலங்கை. தொ.பே: 2435117,தொலை நகல்:011-2473757
ஈ-மெயில் : puthiyapoomi@hotmail.com

# ஐரோப்பிய ஒன்றியமும் சுயநிர்ணய உரிமையும்

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்க உறுப்பினர்கள் ஐரோப்பிய ஒன்றியத்தில் அங்கம் வகிக்கும் 25 நாடுகளில் பிரயாணம் செய்வதற்கு தடைவிதிக்கப்பட்டுள்ளது. இத்தடை மேலும் விரிவடைந்து அவ்வியக்கத்தின் மீது பூரணமான தடைகள் விதிக்கப்படலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. கடந்த மாதம் 19ஆம் திகதி நியூயோர்க் நகரில் நடைபெற்ற இலங்கையின் சமாதான நடவடிக்கைகளுக்கான இணத்தலைமை நாடுகளின் அறிக்கையை அடுத்து அதனைசுட்டிக் காட்டியே ஐரோப்பிய ஒன்றியம் அத் தடையை விதித்துள்ளது. அத்தடையை நியாயப்படுத்தும் வகையில் அமெரிக்கா அதன் கருத்தை வெளியிட்டுள்ளது. ஐரோப்பிய ஒன்றியத்தின் மீது அளவுகடந்த நம்பிக்கை வைத்திருந்த தமிழர்தரப்புக்கு பழமைவாதிகளுக்கு இத்தடையைக் கொடுத்திருக்கிறது பேரதிர்ச்சியாக இருக்கிறது.

இந்திய ஆளும் வர்க்கத்தின் மீது இவ்வாறான நம்பிக்கை முன்பு வைக்கப்பட்டது. அந்த நாட்டு ஆளும் வர்க்கத்திற்கும் நம்நாட்டு ஆளும் வர்க்கத்தினருக்கும் இருக்கும் 'தொப்புள்கொடி' உறவை பிழையாக இந்திய மக்களுக்கும் இலங்கைத் தமிழ்மக்களுக்குமிடையேயான'தொப்புள்கொடி' உறவென அர்த்தம் கொடுத்து பெருமிதம் கொண்டவர்கள் தமிழ்ப் வாதிகள் இலங்கையின் இனப்பிரச்சினையில் தலையிட்டு இந்தியா "அமைதிப்படை அனுப்பியது தொடக்கம் இன்றுவரை சமாதானத்திற்கு இந்தியா ஒரு இடையூறாக இருப்பதை விளக்கிக்கொள்வதற்கு இத்தகையோருக்கு ஒரு குறிப்பிட்ட காலம் எடுத்தது.

அதே போன்று அமெரிக்க ஏகாதிபத்தியம் தமிழர் போராட்டத்திற்கு உதவுமென்று கற்பனை செய்யப்பட்டது. த.வி.பு. இயக்கத்தை தடை செய்தது தொடக்கம் சமாதான பேச்சுவார்த்தைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்திற்கான முன்னோடி கூட்டத்தில் த.வி.பு. இயக்கத்தை கலந்துகொள்ள விடாது தடுத்தது. சுனாமி பொதுக்கட்டமைப்பு ஏற்படுத்தப்பட்டப் பிறகு அதற்கு நிதி வழங்க முடியாது என்றும் கூறியது. அதற்குப் பிறகும் அமெரிக்கா தமிழர்களுக்கு உதவும் என்று கூறுவதற்கு நியாயங்கள் எதுவும் இருக்க முடியாது.

பிரிட்டன் மீது தமிழ் பழமைவாதிகளுக்கு அளவு கடந்த பாசம். அந்நாட்டில் த.வி.பு. இயக்க நடவடிக்கைகள் தடைசெய்யப்பட்டு பெரிதும் கட்டுப்படுத்தப்பட்டுள்ளன. தற்போது ஐரோப்பிய ஒன்றியத்திற்கு பிரிட்டனே தலைமை வகிக்கிறது. பயங்கரவாதம் என்ற அடிப்படையில் விடுதலைப்போரட்டங்கள் பற்றி பிரிட்டன் தொடர்ந்து தெரிவித்து வரும் கருத்துகள் தமிழ் பழமைவாதிகளுக்குக் கூட மகிழ்ச்சி தருவதாக இருக்க முடியாது.

பிரிட்டனை தவிர்த்து ஐரோப்பிய ஒன்றியத்தின் மீது நம்பிக்கை வைக்கப்பட்டது. அதனுடைய உண்மையான நிலைப்பாடு தற்போது நன்கு அம்பலத்திற்கு வந்ததுள்ளது. அதில் வகிக்கும் நாடுகளில் பெரும்பாலானவை ஏகாதிபத்திய அக்கறைகளை இலக்காக கொண்டவை. தற்போதைய ஏகாதிபத்திய உலகமயமாதலை இயக்கும் உலக அமைப்புகளில் ஐரோப்பிய ஒன்றியம் முக்கியமானதாகும். அதனிடம் ஒடுக்கப்படும் தேசிய இனத்தின் சுதந்திரம் விடுதலை என்பவற்றுக்கு ஆதரவை எதிர்ப் பார்ப்பது எப்போதுமே சரியான நோக்காக இருக்க முடியாது.

ஏகாதிபத்திய சக்திகளிடையேயான முரண்பாடுகளை கையாள்வது அல்லது எதிரிகளிடையேயான முரண்பாடுகளை கையாள்வது என்பது அச்சக்திகள் அல்லது எதிரிகள் பற்றிய சரியான மதிப்பீட்டிலேயே தங்கியுள்ளது. இலங்கையின் இனப்பிரச்சினையில் இந்தியாவுக்கும் அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகள் போன்றவற்றுக்கிடையிலான முரண்பாடுகளை கையாள்வது என்பது அந் நாடுகள் பற்றிய சரியான மதிபீடு இல்லாமல் சாத்தியமாகாது. அவை இலங்கைத் தமிழ் மக்களின் போராட்டத்திற்கு ஆதரவான சக்திகள் என்றோ நட்பு சக்திகள் என்றோ மதிப்பிடுவதும் அப்படியானதொரு அபிப்பராயத்தை மக்களிடையே பரப்புதுவம் சரியானதல்ல.

அமெரிக்கா, இந்தியா, ஐரோப்பிய ஒன்றியம் என்பவற்றின் சமாதான முழக்கம் என்பது போராட்டசக்திகளை அரச இயந்திரத்துடன் இணங்கச் செய்வது அல்லது அடிமைப்படுத்துவதேயாகும். அதற்காக அரச யந்திரத்தின் தரப்பில் சில சரிக்கட்டல்களை செய்வதே அவர்களின் சமாதான முயற்சிகளாகும். அரச யந்திரத்தின் தரப்பில் சில சரிக்கட்டல்களை செய்ய அழுத்தம் கொடுப்பது என்பது கோரிக்கைகளையும் போராட்டத்தையும் ஏற்றுக்கொள்வதாக அர்தப்படுத்தக் கூடாது. அது போராட்டத்தை நசுக்குவதற்கான முன்னோடி நடவடிக்கை ஆகும்.

இலங்கையின் இனப்பிரச்சினை தீர்விற்காக அரச யந்திர தரப்பில் எந்தவொரு விடயத்தையும் செய்யும் படி அழுத்தம் கொடுக்கப்படவில்லை. மீண்டும் பேச்சுவார்த்தை தொடக்கப்பட வேண்டும் என்று மேலோட்ட அறிக்கைகள் விடுவதைத் தவிர 'சர்வதேச சமூகம்' என்பது வெறெதெனையும் செய்யவில்லை.

இங்கு பயங்கரவாதம் இருப்பதாகவும் மனித உரிமைகள் மீறப்படுவதாகவும் கூறிக் கொண்டே 'சர்வதேச சமூகம்' என்பது அதனது வேலைத்திட்டங்களை முன்னெடுத்துச் செல்லப்பார்க்கிறது. வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரின் கொலை 'சர்வதேச சமூகம்' என்பதற்கு பேரதிர்ச்சியை கொடுத்துவிட்டது. அதனாலேயே த.வி.பு. இயக்கத்தின் மீது பிரயாணத்தடையை விதித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. உண்மையில் அச்சம்பவம் அவர்களின் உள்நோக்கத்தை நடைமுறைப்படுத்துவதற்கு ஒரு சாட்டாகும்.

இவ்விடயத்தில் நாம் இரண்டு விடயங்களை பிரதானமாக கவனிக்க வேண்டும். ஒன்று இந்த 'சர்வதேச சமூகம்' பற்றிய மாயையை அகற்ற வேண்டும். அது பற்றிய அளவு கடந்த நம்பிக்கையை வைப்பது தவறான முடிவாகையால் தவறான விளைவுகளையே ஏற்படுத்தும். எப்பொழுதும் போராட்டம் சரியான திசையில் செல்ல வெளிச்சக்திகள் பற்றிய சரியான ஆய்வு அவசியம். உள்சக்திகள் பற்றிய சரியான மதிப்பீடும் அவசியம். அவைபற்றிய முடிவுகள் வெறும் அக ரீதியான விருப்பு வெறுப்புகளுக்குட்பட்டதாக அன்றி புறநிலை யதார்த்தின் அடிப்படையிலானதாக அமைதல் வேண்டும் சுயநிர்ணய உரிமைக்கான போராட்டத்தில் இவை முக்கியமானவையாகும். இவை பற்றி புதிய பூமி அவ்வப்போது சுட்டிக்காட்டி வந்துள்ளது நினைவுகூரத்தக்கது.

-ஆசிரியர் குழு-

# ஜனாதிபதி தேர்தல் களம் திரைமறைவில் பேரங்களும் முடிவுகளும்

ஐந்தாவது ஜனாதிபதித் தேர்தல் வந்துவிட்டது. இம் மாதம் 7ம் திகதி அதற்கான நியமனப் பத்திரம் தாக்கல் செயயப்பட்டுள்ளது. நவம்பர் 17ம் திகதி தேர்தல் நடைபெற உள்ளது. அன்றைய தின வாக்களிப்பில் நிறைவேற்று அதிகார ஜனாதிபதிக் கதிரையில் யார் அமர்ந்து கொள்ளப் போகிறார் என்பது தீர்மானிக்கப்படும். நாற்பது நாட்கள் பிரச்சாரங்கள் நடாத்தப்படும். ஒரு கோடி முப்பது லட்சம் மக்கள் வாக்காளர்கள் என்ற தகுதி பெற்றிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. பழக்கப்பட்டுபோன செக்கிழுத்த பாதையில் வாக்களிக்க மக்கள் மீண்டும் நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர். வெறும் எதிர்பார்ப்பு, வீணான நம்பிக்கை, தரிசனத் தலைமை வழிபாடு, அறியாமை, ஏமாற்று, ஊழல்-மோசடி, மிரட்டல், இன மத சாதி ஊர் உறவு எனப் பன்முக செயற்பாடுகளின் ஊடாகத் தேர்தல் வாக்களிப்பிற்காக மக்கள் வேண்டப்படுகின்றனர். இதனையே வாக்களிக்கும் சுதந்திரத்துடன் கூடிய ஜனநாயகம் என்று மகிடமிட்டு ஆளும் வர்க்கத்தினர் கூறிக்கொள்வர். இவற்றைக் கேள்விக்கு உட்படுத்தாது பெரும்பான்மையான உழைக்கும் மக்கள் ஒரு வகை யந்திரம் போன்று செயற்படுகின்றார்கள். இவ்வாறு செயற்படும் சிந்தனை-நடைமுறை என்பது நிலவுடமை வழி வந்த முதலாளித்துவ அடிமை விசு வாசச் சிந்தனைக்கு உட்பட்ட தொன்றேயாகும்.

இத்தகைய தேர்தலுக்கு 93 கோடி ரூபாய்கள் இந்நாட்டு மக்களின் பணம் செலவிடப்படவுள்ளது. எமது நாட்டு மக்களை அடக்கி ஆள்வதற்காக அவர்களின் வாக்குகளினாலும் பணத்தினாலும் தெரிவு செய்யப்படும் ஜனாதிபதி மக்களின் பணத்திலேயே அதி உயர் சம்பளமும் ஏனைய செலவுகளையும் செய்து கொள்வார். இத்தகைய ஜனாதிபதியும் அவரது ஆளும் வர்க்க கட்சியும் இந்நாட்டின் மேட்டுக்குடி உயர் வர்க்கத்தினரதும் அவர்களது அந்நியக் கூட்டாளிகளினதும் குபேர வாழ்வுக்கும் சொத்து சுகம் தேடலுக்கும் வழி வகுத்து பாதுகாப்பும் வழங்கி வருவர். மாளிகைகளிலும் கோபுர வீடுகளிலும் ஐந்து நட்சத்திரக் ஹோட்டல்களிலும் உண்டுகளித்து யாவற்றையும் சுவைத்து அனுபவித்துக் கொள்ளும் ஒரு ஐந்து அல்லது பத்துசதவீதமானர் வர்களுக்காகவே நிறைவேற்று அதிகாரம் பயன்படுத்தபப்படுகிறது. அதேவேளை ஒரு கோடி முப்பது லட்சம் வாக்காளர்களிலும் மிகுதியான சுமார் 70லட்சம் 18வயதிற்கு குறைவானவர்களிலும் ஆகப் பெரும்பான்மையான தொழிலாளார்கள் விவசாயிகள் புத்திஜீவிகள், இளைஞர்கள்- யுவதிகள் மற்றும் உழைக்கும் மக்களானவர்கள் அன்றாட வாழ்வோடு போராடி வருபவர்களாகவே உள்ளனர். அவர்கள் தமது அடிப்படை வாழ்வாதாரத் தேவைகளான உணவு, உடை, இருப்பிடம், வேலைவாய்ப்பு கல்வி, சுகாதாரம் உள்ளிட்ட பொருளாதார நெருக்குதல்களின் கோரப்பிடிகளும் சமூக பண்பாட்டுச் சீரழிவுகளும் நாளாந்தம் வளர்ச்சி பெற்றுக் செல்கின்றன. அத்துடன் இனமுரண்பாடுகளும் போராட்டங்களும் யுத்தமாக நீடித்துச் செல்கின்றன.

இவற்றின் மத்தியிலேயே 5வது ஜனாதிபதித் தேர்தல் நடைபெற இருக்கின்றது. இத் தேர்தலில் இரண்டு பிரதான ஆளும் வர்க்க கட்சிகளின் சார்பாக ரணில் விக்கிரமசிங்காவும் மகிந்த ராஜபக்ஷவும் ஜனாதிபதிக்காகப் போட்டியிடுகின்றனர். ஐக்கிய தேசியக் கட்சி சிறிலங்கா சுதந்திரக் கட்சி சார்பான இவ்விருவரும் ஜனாதிபதிப் பதவிக்கு புதியவர்களாயினும் ஆளும் வர்க்க அதிகார பீடத்திலிருந்து பிரதமர் பதவிகளைப் பெற்று அதிகார ஆட்சி நடத்தியவர்கள். அதன் மூலம் அவர்களது சொல்லும் செயலும் சாதாரண உழைக்கும் மக்களுக்கோ உரிமைகள் மறுக்கப்பட்ட தேசிய இனங்களுக்கோ சாதகமாக இருந்ததில்லை. முற்றுமுழுதான மக்கள் விரோத நிலைப்பாட்டிலிருந்தே அதிகாரம் செலுத்திக் கொண்டனர்.

இவ்விரு ஜனாதிபதி வேட்பாளர்களும் அவர்களது கட்சிகளும் தத்தமது வெற்றிக்காக மக்களை ஏமாற்றிக் கொள்வதற்கான வாக்குறுதி

**வெகுஜனன்**

களை தேர்தல் விஞ்ஞாபன வடிவிலே முன்வைத்துள்ளனர். ஏட்டிக்குப் போட்டியாக முன்வைக்கப்படும் வாக்குறுதிகள் மக்களைக் கவர்ந்து கொள்வதற்கான தந்திரோபாயமே அன்றி நடைமுறைக்குரியவைவல்ல. சில விடயங்கள் பொத்தாம் பொதுவாளையாகவே குறிப்பிடப்பட்டுள்ளன. புதிய ஜனாதிபதி பதவிக்கு வந்து கொண்ட பின்பு தேர்தல் விஞ்ஞாபனத்தில் கூறப்பட்ட விடயங்களையும் வாக்குறுதிகளையும் ஆளும் கட்சியும் அதன் ஜனாதிபதியும் மறந்து விடுவார்கள். அவர்கள் மட்டுமன்றி வாக்களித்த மக்களும் மறந்து விடுவார்கள். மக்களின் இந்த மறதி ஆளும் வர்க்கத்தினருக்கு நல்ல வச

> **இரண்டு பிரதான வேட்பாளர்களும் உருவத்தில் வேறானவர்கள். கட்சிகளும் வேறானவை. ஆட்சிக் கதிரையும் கொள்கை நடைமுறைகளும் திட்டங்களும் அடிப்படையில் ஒன்றேயாகும்.**

தியாகி விடும். தாம் ஏமாற்றப்படுகின்றோம் என்பதையும் மறந்து சில வருடங்களின் பின் அடுத்த தேர்தலில் இரண்டில் ஒரு கட்சிக்கு வாக்களிக்கும் போதைக்குள் மக்கள் இறங்கிக் கொள்வார்கள்.

இவ்வாறான தேர்தல் வழிமுறையின் கீழ் மக்களுக்கு காட்டிக் கொள்ள வெளிவெளியான தேர்தல் விஞ்ஞானபனங்கள் விளங்கும் அதே வேளை திரைமறைவிலே பல்வேறு காரியங்கள் நடைபெறுகின்றன. உள்நாட்டு சக்திகளை இவ்இரு வேட்பாளர்களும் பல்வேறுபட்ட நிலைகளில் தத்தமக்காக அணைத்துக் கொள்கின்றனர். அரசியல் கட்சிகள், சமூக அமைப்புகள் போன்றவற்றை தத்தம் பக்கம் வளைத்துப் பிடிக்கின்றனர். குறிப்பாக தேசிய இனங்களிடையே காணப்படும் கட்சிகளின் தலைமைகளை தம்வசப்படுத்திக் கொள்ள நிற்பார்கள். அக்கட்சிகள் தங்களது இன மத பிரதேச நிலைப்பாட்டைக் காட்டி ஏதோ மக்களுக்கான கோரிக்கைகள் போன்று சில வற்றை முன்வைப்பார்கள். அவை வெளிப்படையான பேரப்பேச்சுக்கானவையாக உள்ள போதிலும் பதவிகள் பணக்கட்டுக்கள் மற்றும் சலுகைகளே பேரப்பேச்சின் உள்ளாந்த பிரதானமையமாக விளங்கும். கோடிக் கணக்கில் பணம் கைமாற்றப்படும். அதேவேளை அடுத்து வரும் பாராளுமன்ற மாகாணசபைத் தேர்தல்களில் பெறும் வெற்றிகளின் ஊடாக எத்தனை அமைச்சர் பிரதி அமைச்சர் ஏனைய நிறுவனத் தலைமைப் பதவிகள் என வரையறுக்கப்படுகின்றன. இவை வெளியே மக்களுக்கு தெரியாத வகையில் உயர்மட்ட இரகசியமாகவே இருந்து வரும். இவை திரைக்குப் பின்னால் இடம் பெறும் விடயங்களாகும். இன மத பிரதேச தொழிற்சங்க ஆதிக்கப்பிடிகளை வைத்திருக்கும் சகல பாராளுமன்றக் கட்சிகளும் இத்திரைக்குப் பின்னாலான செயற்பாட்டில் இரண்டு வேட்பாளர்களிடமும் பேரம் பேசி தமக்குரியவற்றைப் பெற்றுக் கொள்கின்றன. ஆனால் திரைக்கு முன்னால் தத்தம் மக்களுக்காக கோரிக்கை வைத்து வாக்குறுதிகள் பெறுவதாக ஒரு மிகப் பெரும் பொய்த்தோற்றம் காட்டிக் கொள்வார்கள். தலைமைகள் தவறாக நடக்கமாட்டார்கள் என்ற தரிசன வழிபாட்டு நம்பிக்கையில் மக்களும் பின்னால் இழுபட்டுச் செல்வார்கள். இத்தகைய பாராளுமன்றக் கட்சிகளின் தலைமைகளுக்கு இன ஒடுக்கு முறைபற்றியோ தொழிலாளர்கள் விவசாயிகளின் பிரச்சினைகள் பற்றியோ நாடு மக்கள் பற்றியோ எவ்வித அக்கறைகளும் கிடையாது.

அதேவேளை இவ் ஜனாதிபதித் தேர்தல் களத்தின் திரைக்குப் பின்னால் வெளிநாட்டு ஆதிக்க சக்திகள் இரண்டு பிரதான வேட்பாளர்களின் பின்னாலும் இருந்தும் வருகின்றன. அமெரிக்காவும் மேற்குலக நாடுகளும் ரணில் விக்கிரமசிங்கா ஜனாதிபதியாக வரவேண்டும் என்பதில் வெளிப்படையாகவே அக்கறை செலுத்தி நிற்கின்றன. அதற்கேற்றவாறு இலங்கை விவகாரங்களைக் கையாண்டு வருகின்றனர். அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் வெளியிடும் அறிக்கைகளும் அவற்றின் தூதரகங்கள் நடந்து கொள்ளும் முறைமைகளையும் கூர்ந்து நோக்கினால் புலப்படும். அவ்வறாறே மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக வேண்டும் என்பதில் இந்தியா பல்வேறு தரப்புகளையும் உற்சாக மூட்டி ஆதரவளிக்க வைத்தும் வருகின்றது. ஜே.வி.பி, ஹெலஉறுமய போன்ற வற்றை நெருங்கிவர இந்தியாவின் பங்கு அதிகம். அவ்வாறே ஆறுமுகன் தொண்டமானை அழைத்து அழுத்தம் கொடுத்தமை பகிரங்கமானதாகும்.

ஜனாதிபதித் தேர்தல் களத்தில் முன்னே போடப்பட்டிருக்கும் பச்சை நீலசிவப்புத் திரைகளை விலக்தி உள்நோக்கிப் பார்க்கும் போதுதான் இந்நாட்டின் எதிர்காலம் எத்திசையில் இழுத்துச் செல்லப்படுவதற்கான கொள்ளைகளும் திட்டங்களும் உண்மையான வடிவங்களில் இருப்தைக் கண்டு கொள்ளமுடியும். முதலாளித்துவ பேரினவாத ஆளும் வர்க்கத்தினதும் அவர்களினது அந்நிய மேலாதிக்க சக்திகளினதும் ஏற்கனவே நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் கொள்கைகளை மேலும் தொடர்ந்து முன்னெடுப்பதற்கு இருவரில் ஒருவர் தேவைப்படுகிறார். என்பதே உண்மையாகும். ஆட்கள் இருவரும் அவர்களது கட்சிகளுமே வெவ்வேறானவர்கள். ஆனால் அதிகாரக் கதிரையும் நடை முறைப்படுத்தும் கொள்கைகளும் திட்டங்களும் வேறுபட்டவைகள் அல்ல. ஜே.ஆரில் தொடங்கி சந்தி ரிகா வரை கடந்த 27 வருடங்க ளாக வழிநடந்து வந்த அதே பாதையில் தான் ரணிலாயினும் மகிந்தா வாகிலும் வழிநடப்பார்கள் என்பது மட்டும் உண்மையான தாகும்.

www.tamilarangam.net நன்றி - நூலகத்திட்டம்



சனாதிபதித் தேர்தல் -மோகன்-

# தெரிவுகளல்லாத தெரிவுகளும் தெளிவில்லாத தலைமைகளும்

ஸ்ரீ.ல.சு.கட்சியின் வேட்பாளராக அறிவிக்கப்பட்டதையடுத்துப் பிரதமர் ராஜபக்ஷ எடுத்த நடவடிக்கைகள் அரசியல் அவதானிகளைக் கொஞ்சம் குழப்பத்தில் ஆழ்த்தின. சென்ற ஆண்டு ஜே.வி.பி.யுடன் ஸ்ரீ.ல.சு.கட்சி ஏற்படுத்திய உறவு முற்றிலும் சந்தர்ப்பவாத அடிப்படையிலானது. அதன் மூலம் பாராளுமன்ற அரசியல் நோக்கில் கூடிய ஆதாயம் பெற்றது ஜே.வி.பி என்பது உண்மை. எனினும் தனித்து நின்று போட்டியிட்டு ராஜபக்ஷ வெற்றி பெற ஜே.வி.பியின் ஆதரவு தேவை என்ற உணர்வு ஸ்ரீ.ல.சு.கட்சிப் பிரமுகர்களில் ஒரு பகுதியினரிடம் இருந்து வந்துள்ளது.

சனாதிபதி குமாரண துங்கவுடன் ஜே.வி.பி. வெளிவெளியாகவே மோதிய வேளையிலும் ஜே.வி.பியைக் கூட்டணிக்குள் வைத்திருக்கவே மேற்குறிப்பிட்ட ஸ்ரீ.ல.சு.க பிரமுகர்கள் கடுமையாக முயன்றனர். எனினும் சுனாமி நிவாரணப் பொதுக்கட்டமைப்புத் தொடர்பாக ஜே.வி.பி. எடுத்த கடும் போக்கு அதன் வெளியேற்றத்திற்குக் காரணமாயிற்று. இதன் விளைவாக, ஜே.வி.பி தான் முதலில் ஒரு பேரினவாதக் கட்சியே என்பதைத் தெளிவுபடுத்தியது. ஜே.வி.பியின் தந்திரோபாயம் ஸ்ரீ.ல.சு கட்சியைப் பலவீனப்படுத்தித் தன்னையே யூஎன்.பிக்கு மாற்றான பிரதான சிங்களப் பேரினவாத அரசியற் கட்சியாக்குவது என்று முன்னரே கருத்துக் கூறப்பட்டிருக்கிறது. இம்முறை. ஸ்ரீ.ல.சு. கட்சிக்குள் ஒரு பிளவை ஏற்படுத்துவதற்கு ராஜபக்ஷ ஜே.வி.பியின் ஆதரவைப் பெற எடுத்த நடவடிக்கை காரணமாகியுள்ளது.

ஜே.வி.பியுடன் ராஜபக்ஷ செய்த உடன்படிக்கையில் முக்கியமான சில பகுதிகள் தேசிய இனப்பிரச்சனை. சுனாமி நிவாரணம் ஆகிய விடயங்களில் ஸ்ரீ.ல.சு.கட்சி ஏற்றுக் கொண்ட கொள்கைகட்கு நேர்மாறானவை தனியார்மயமாக்கல் போன்ற விடயங்களில் ஜே.வி.பியின் நிலைப்பாடு வரவேற்கத்தக்கது என்றாலும், ஆட்சியிலிருந்த போதே ஜே.வி.பி. தலைமை அதிகம் வற்புறுத்தாதவை. ஜாதிஹெல உறுமையவுடனான உடன்படிக்கை மேலும் மர்மமானது. அது எப்போது ஒப்பமிடப்பட்டது என்பதும் அதில் என்ன உள்ளது என்பதும் தெளிவாக்கப்படவில்லை. எனினும் தமிழ் மக்கள் தொடர்பாக ஜே.வி.பியினதும் ஜா.ஹெ.உ. யினதும் கொள்கைகளில் வோறுபாடு குறைவு. எனவே பிரதமர் ராஜபக்ஷ விளக்கம் வெளியிடப்படுமளவும் ஸ்ரீ.ல.சு கட்சி நிலைப்பாட்டை அது பிரதிபலிக்கின்றதா என்பது பற்றி உறுதியாக எதுவும் கூற இயலாது.

விக்கிமசிங்க சனாதிபதியாவதை ஜே.வி.பி விரும்பாது. எனவே ஜே.வி.பி தலைமைக்கு ராஜபக்ஷவை ஆதரிப்பதை விட வேறு வழியில்லை. ஜா.ஹெ.உ. இப்போது பொதுமக்களிடையே செல்வாக்கை இழந்த கட்சி. அதன் ஆதரவுத் தளமாக இருந்தது படித்த வசதிபடைத்த நடுத்தர வர்க்கம். அதன் ஆதரவு பொதுவாக யூஎன்.பியின் பக்கமே. எனவே இந்த இரண்டு கட்சிகளுடனும் அவசர அவசரமாக ராஜபக்ஷ செய்துள்ள உடன்படிக்கை சிறுபான்மைத் தேசிய இனங்களிடையே கவலைக்குக் காரணமாகியுள்ளது. இது யூஎன்.பிக்கு வாய்ப்பாக அமைந்துள்ளது. எனவே ராஜபக்ஷவின் ஆலோசகர்களது கணிப்பு, ஜே.வி.பியுடனான உடன்படிக்கை மூலம் கிடைக்கக் கூடிய லாபம் சிறுபான்மைத் தேசிய இனத்தவருடைய ஆதரவில் ஏற்படும் இழப்பிலும் பெரியது என்பதாகவே தெரிகிறது.

சிறுபான்மைத் தேசிய இனத்தவரைத் தனக்கு ஆதரவாகத் திரட்ட ராஜபக்ஷ பின்னர் எடுத்துள்ள முயற்சிகள் ஜே.வி.பியுடனான உடன்படிக்கையால் இதுவரை குறிப்பிடத்தக்க வெற்றியைத் தருகிற சாடையில்லை. அதை விட யூஎன்.பியின் கீழ் தமிழ்மக்கள் மிகக் கடுமையாகப் பாதிக்கப்பட்ட காலங்களின் போது மட்டுமே தமிழ் தேசிய அரசியல்வாதிகள் யூஎன்.பிக்கு எதிராக ஒரு நிலைப்பாட்டை எடுத்துள்ளனர். மற்றப்படி யூஎன்.பியை ஆதரிக்கும் எந்த வாய்ப்பையும் அவர்கள் தவறவிட்டதில்லை. இப்போதும் அவசரகால நிலையை ஆதரித்து யூஎன்.பி வாக்களித்தது கூட அவர்களுக்கு ஒரு பொருட்டில்லை. விக்கிரம சிங்கவின் நழுவல் போக்கும் அவர்களுக்கு ஒரு பிரச்சனையில்லை.







தேசிய இனப் பிரச்சனையின் தீர்வுக்கு முட்டுக்கட்டை இடுவதில் யூஎன்.பி ஆற்றிய பங்கைவிட ஸ்ரீ.ல.சு.க. ஆற்றிய பங்கிற்குத் தமிழ் தலைவர்களும் ஊடகங்களும் கூடிய முக்கியமளித்து வந்துள்ளன. அதை விடவும் சனாதிபதி குமாரணதுங்கவின் கடந்த பதினொரு வருடக்காலச் சொற்களும் செயல்களும் அவர் மீதான நம்பிக்கைக்கு அதிகம் உதவவில்லை. சுனாமி நிவாரணம் பற்றிச் சரியானதொரு முடிவை அவர் எடுத்த போதும் அதை நடைமுறைப்படுத்துவதில் அவரது தடுமாற்றமான போக்கு அந்த முடிவை எதிர்த்தவர்கள் அதைத் தடுக்க உதவியது.

பொதுக்கட்டமைப்பு உட்பட்ட விடயங்களில் ராஜபக்ஷவின் அண்மைக்கால நடத்தை அவர் ஒரு பேரினவாதி என்று தமிழ் மக்கள் நம்ப வழி செய்துள்ளது. விக்கிரமசிங்க தேசிய இனப் பிரச்சனையின் தீர்வையோ சுனாமி நிவாரணத்தையோ நல்ல முறையில் முன்னெடுக்கச் சனாதிபதிக்கு உதவியவரல்ல என்பதை எல்லாரும் அறிவோம். அவர் சனாதிபதியானால் உலகமயமாதல் மேலும் துரிதமடையும் என்பதுடன் நேரடியான அமெரிக்க ஆதிக்கத்துக்கு வழியேற்படும் என்பதில் நமக்கு ஐயம் வேண்டாம்.

ராஜபக்ஷவை இந்தியாவின் முகவராக்கும் காரியங்களின் ஒரு பகுதியாகவே ஜே.வி.பியுடனான அவரது உடன்பாடு உள்ளது என்று கருத நியாயமுண்டு. ஸ்ரீ.ல.சு. கட்சிக்குள் (கடைசிக் காலங்களில் கதிர்காமர் உட்பட) ஜே.வி.பியை நாடுகிற பகுதியினரிடையே இந்தியாவின் செல்வாக்குக் கூடுதலாகவே உள்ளது எனலாம். நேரடியாகவே இந்தியாவின் ஏவலாட்களாகச் செயற்படும் சில தமிழ்த்தலைமைகளின் நிலைப்பாடு ராஜபக்ஷவுக்குச் சாதகமாக இருப்பதிலும் ஆறுமுகன் தொண்டமான் ஸ்ரீ.ல.சு. கட்சிக்கு நெருக்கமானதிலும் இந்திய மேலாதிக்க முகவர்கட்குப் பங்கு உண்டு. எவ்வாறாயினும் குமாரணதுங்க- ராஜபக்ஷ முறுகலும், யூஎன்.பி யிலிருந்து கிடைக்கக் கூடிய சில ஊக்குவிப்புக்களும் ஆறுமுகனின் நிலைப்பாட்டை மாற்றலாம்.

எப்படியாயினும், பெருவாரியான அரசியல்வாதிகளும் கட்சிகளும் எந்தெந்த வியூகங்களில் நிற்பார்கள் என்பது 'எப்போதோ முடிந்து போன அலுவல்'. இங்கே சுயாதீனமாகத் தீர்மானிக்கக் கூடிய நிலையில் இருந்தவர்கள் இடதுசாரிகள் மட்டுமே. இங்கே கம்யூனிஸ்ற், சமசமாஜக்கட்சிகள் ஜே.வி.பி எதிர்ப்பாக என்ன விதமான பாசாங்குகள் செய்தாலும் முடிவில் ராஜபக்ஷவுடனேயே நிற்பார்கள். அவர்களை ஒரு வித்தியாசமான நிலைப்பாட்டை எடுக்கும் படி தூண்டும் படி பாராளுமன்ற அரசியலில் இல்லாத தென்னிலங்கை இடதுசாரிகள் எந்த விதமான பொதுத் திட்டத்தையும் வகுக்கவில்லை. மாறாக அவர்களது தன்னிச்சையான செயல்கள் மேலும் இடதுசாரி ஒற்றுமையைக் குலைக்கும் முறையிலேயே அமைந்துள்ளன.

ராஜபக்ஷவின் அரசியல் தடுமாற்றத்தை அறிந்து கொண்டே அவருக்கு நிபந்தனைக்குட்பட்ட ஆதரவைத் தெரிவித்த சனநாயக இடதுசாரி முன்னணித்தலைவர் வாசுதேவ நாணயக்கார ஜே.வி.பியுடனும் ஜா. ஹெ. உவுடனுமான உடன்படிக்கையை அடுத்து அந்த ஆதரவை விலக்குவதாகக் சொல்லிவிட்டு இப்போது எப்படி ஆதரிப்பது என்பதற்கு வழி தேடித் தடுமாறுகிறார். அவரோடு சேர்ந்து ஒரு பொது நிலைப்பாட்டை எடுக்க முன்வந்த கம்யூனிஸ்ற், சமசமாஜக் கட்சிகளின் கீழ் மட்டங்களில் ராஜபக்ஷ பற்றிய அதிருப்தி தெரிந்தாலும் பாராளுமன்றத் தலைமை ராஜபக்ஷவை ஆதரிப்பது பெருமளவும் உறுதியாகிவிட்டது.

தொடர்ச்சி 7ம் பக்கம்

# உதவி வழங்கும் நாடுகளின் இரட்டை வேடம்

பிள்ளையையும் கிள்ளி தொட்டிலையும் ஆட்டிக் கொள்வது பற்றிய முதுமொழியை எல்லோரும் அறிவர். அத்தகையதொரு செயலையே உதவி வழங்கும் நாடுகள் என்னும் பெயரிலான பணக்கார நாடுகள் இலங்கை இனப்பிரச்சினை விவகாரத்தில் செய்து வருகின்றன. அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம், யப்பான், நோர்வே ஆகிய நான்குமே இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் இணைத் தலைமை நாடுகளாகும். இவற்றையே உலக சமூகம் என்றும் ஊடகங்கள் அழைத்துக் கொள்கின்றன.

2002ல் புரிந்துணர்வு ஒப்பந்தம் அரசாங்கம் – புலிகள் இயக்கத் தரப்புகளிடையே கைச்சாத்திடப்பட்ட பின்பு இவ் உதவிவழங்கும் நாடுகளின் கூட்டம் யப்பானியத் தலைநகர் டோக்கியோவில் நடைபெற்றது. அதன் போதே உதவி வழங்கும் நாடுகளின் இணைத்தலைமை தோற்றுவிக்கப்பட்டது. நாற்பத்தையாயிரம் கோடி உதவி என்ற ஒரு பெரும் பணப்பொதி உயரத்தில் கட்டித்தூக்கப்பட்டது. அதை ஆட்டிக் காட்டி இலங்கை அரசாங்கத்தையும் விடுதலைப் புலிகளையும் தமது ஆணைக்கு ஏற்ப நடந்து கொள்ளுமாறு நிர்ப்பந்தம் செய்தன. ஆனால் அவர்களது சுயலாப நோக்கங்களுக்கான திட்டங்கள் எதிர்பார்க்கப்பட்டவாறு நிறைவேறவில்லை. இருப்பினும் அத்தலைமையானது இடைக்கிடையே கூடி தீர்மான வடிவில் அறிக்கை விட்டுக் கொள்வார்கள். காரணம் இலங்கையின் இனப்பிரச்சினையின் ஊடாகத் தமது பிடியைத் தளரவிடக் கூடாது என்பதற்காகவேயாகும். அத்துடன் இலங்கையின் இன மோதல் விவகாரத்தில் தாம் நடுநிலையாக நின்று உளத்தூய் மையுடன் சமாதானம் ஏற்படப் பாடுபடுவதாகவும் தோற்றம் காட்டிக் கொள்வார்கள். ஆனால் இத்தகைய மேற்குலக நாடுகளும் யப்பானும் இந்தச் சின்னம் சிறிய நாட்டின் மோசமான இன அடிப்படையிலான யுத்தத்திற்கு மறைமுகச் சூத்திரதாரிகளாக இருந்து வந்ததை இந்நாட்டின் அனைத்து மக்களும் என்றோ ஒரு நாள் கண்டு கொள்ளவே செய்வார்கள்.

இந்த உதவி வழங்கும் நாடுகளின் இணைத் தலைமை கடந்த செப்ரம்பர் 19ல் நியூயோர்க்கில் கூடி கதிர்காமரின் கொலைக்குப் பின்னரான இலங்கை நிலவரம் பற்றி ஆராய்ந்து அறிக்கை வெளியிட்டது. அந்த அறிக்கையைப் பார்த்த போது சிரிப்பே வந்தது. அதில் காணப்பட்ட கபடத்தனத்தையும் இரட்டைவேட வாசகங்களையும் கண்டபோது எவ்வாறு இந்தப் பணக்கார நாடுகளின் ஆளும் வர்க்கத் தலைமைகள் மூன்றாம் உலக நாடுகளின் பிரச்சினைகளைக் கையாண்டு தங்களது நலன்களையும் ஆதிக்க நிலைகளையும் இறுக்கிக் கொள்கிறார்கள் என்பதையே புரிய முடிந்தது.

அவ் அறிக்கையில் அரசாங்கத் தரப்பையும் குறை கூறுவது போலக் கூறியும் புலிகள் இயக்கத்தை சற்று கண்டிப்பது போலக் கண்டித்தும் தங்களது தலையீடுகளை ஏற்றுக் கொள்ளுமாறு நிர்ப்பந்தித்தும் அவ்வறிக்கை வெளியிடப்பட்டிருந்தது. பொத்தாம் பொதுவாகவும் சிலவற்றைக் குறிப்பாகவும் குறிப்பிட்டுள்ள அறிக்கை சமஷ்டி அரசியல் தீர்வு சமாதானம் போன்ற சொற்தொடர்களைப் பயன்படுத்திய அதேவேளை பயங்கரவாதம், படுகொலைகள், துணைப்படைகள், சிறுவர்களைச் சேர்த்தல் என்பனவற்றையும் ஆங்காங்கே வெளிப்படுத்திக் கொண்டன. இது அங்கேயும் நோகாது இங்கேயும் நோகாது “நான் அடிப்பது போல் அடிக்கிறேன், நீ அழுவது போல் அழு” என்ற விதமாக இரு தரப்பையும் சமாளித்துக் கொள்ளும் அதே வேளை இருதரப்பினரும் தங்களை விட்டுச் செல்லாது தாம் கீறிய கோட்டுக்குள் நிற்க வேண்டும் என்பதை வலியுறுத்துவதை அவ் அறிக்கையின் அர்த்தங்கள் நமக்குப் புரிய வைக்கின்றன.

இதில் மேலும் வேடிக்கை என்னவெனில் சிங்கள ஆங்கில பேரினவாத ஊடகங்கள் இவ் இணைத் தலைமை நாடுகள் புலிகளை கண்டித்திருப்பதாகக் கூறி அவ் அறிக்கையில் கூறப்பட்ட புலிகள் சம்மந்தமான கூற்றுக்களை மட்டும் மிகைப்படுத்தி செய்தி களை வெளியிடுகின்றன. இந்த வகையில் ஐரோப்பிய யூனியன் கடந்த செப்டம்பர் 27ம் திகதி வெளியிட்ட மற்றொரு அறிக் கையில் புலிகள் இயக்கத்தினர் ஐரோப்பிய நாடுகளில் பயணம் செய்வதைத் தடை செய்வதாக அறிவித்துள்ளது. மேலும் அந்தந்த நாடுகளில் புலிகள் இயக்கம் பற்றிய சுயாதீனமான முடிவுகளை எடுப்பதற்கும் ஐரோப்பிய யூனியன் அனுமதி அளித்திருக்கிறது. இது பேரினவாத ஊடகங்களுக்கு மேலும் தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கைகளையும் புலிகளையும் வைத்து வாய்புலம்பி இனவெறிகக்க வழிவகுத்திருக்கிறது. அதே வேளை தமிழ்த் தேசிய நிலைப்பாடுடைய ஊடகங்கள் அவ் அறிக்கையில் சமஷ்டியை வற்புறுத்தி தமிழர்களுக்குச் சாதகமான கூற்றுக்கள் இருப்பதை மட்டும் சுட்டிக் காட்டியுள்ளன. ஆனால் இருதரப்பு ஊடகங்களும் இந்த இணைத்தலைமை நாடுகளின் அந்தரங்க நோக்கங்கள் பற்றி அலசி ஆராயவோ மக்களுக்கு உரியவாறு அறிவூட்டவோ முன் வருவதில்லை. “பிள்ளையையும் கிள்ளி தொட்டிலையும் ஆட்டி” வரும் அவற்றின் நயவஞ்சகப் போக்கை அம்பலப்படுத்தி சிங்கள தமிழ் முஸ்லீம் மலையகத் தமிழ் மக்கள் தமக்குள் ஐக்கியப்பட்டு பிரச்சிகைகளுக்கு அரசியல் தீர்வு காணப்படுவதை ஊக்கப்படுத்துவதை இவ் வியாபார வர்த்தக ஊடகங்கள் தவறவிட்டே வருகின்றன. அது அவர்களின் ஊடக தர்மமுமாகும்.

ஆனால் உலக சமூகம் என்று சுட்டப்படும் பணக்கார முதலாளித்துவ நாடுகள் மூன்றாம் உலக நாடுகளில் உட்புகுந்து எவ்வாறு அங்குள்ள பிரச்சினைகளைக் கையாண்டு தமது நலன்களை நிலைநிறுத்தி வருகின்றன என்பதற்கு இலங்கையில் அவை நடந்து கொள்ளும் செயல் முறைகள் ஒரு சோற்றுப் பதமாகவே காணமுடியும்.

www.tamilarangam.net நன்றி - நூலகத்திட்டம்



# சமூகமும் சனநாயகமும்

## அரசியல் வரலாற்று விசாரணை (05)

பேராசிரியர் சி.சிவசேகரம்

## முதலாளிய சனநாயகத்திற்கு மாற்றான சனநாயகங்கள்

முதலாளியச் சனநாயகத்தின் செயற்பாடு சார்ந்த சில நடைமுறைகளையே சனநாயகமாக் கருத நாம் பழக்கப்படுத்தப்பட்டுள்ளோம். இரண்டு கட்சிகள் மாறிமாறி ஆளுகிற (அல்லது பல கட்சிகளாலான இரண்டு கட்சி அணிகள் மாறிமாறி ஆளுகிற) முறையொன்றையே சனநாயக ஆட்சிமுறை என்று பலரும் நம்புகிறோம். நம் முன்னுள்ள தெரிவுகள் கவனமாக வரையறுக்கப்பட்டுள்ளன என்பதை நாம் எளிதிற் காண முடிவதில்லை. ஐம்பது, நூறு, இருநூறு ஆண்டுக்கணக்காக இந்த மாதிரி ஆட்சி மாற்றங்களை உலக நாடுகள் கண்டுள்ளன. எனினும் சமுதாய அமைப்பு மாறியதாகத் தெரியவில்லை. ஒடுக்கப்பட்ட மக்கள் ஆட்சி அதிகாரத்தைப் பிடித்துச் சமுதாயத்தை மாற்றும் வாய்ப்பு ஏற்பட்ட ஒவ்வொரு தருணத்திலும் முதலாளிய சனநாயகத்தை ஆளும் அதிகார வர்க்கம் குழிதோண்டிப் புதைத்து விடும். அந்த ஆபத்து நீங்கியதும் 'சனநாயகம்' மறுபடி மீட்டெடுக்கப்படும். இது முதலாளியச் சனநாயகத்தின் கடந்தகாலமும் நிகழ்காலமும் எதிர்காலமுமாகும்.

பின்தங்கிய பொருளாதார வளர்ச்சியும் குறைபாடான சமுதாய விழிப்புணர்வும் உள்ள நாடுகளில் சனநாயகம் என்பதும் தேர்தல்கள் என்பனவும் அப்பட்டமான ஏமாற்று வித்தைகளாகவே அமைகின்றன. சமுதாய மாற்றம் மிகவும் அவசியமாக உள்ள இந்தச் சூழல்களில் பாராளுமன்ற ஆட்சியை மாற்றிச் சமூக நீதியை வென்றெடுக்க இயலாது. இங்கெல்லாம் மிக ஆழமான அடிப்படையான ஒரு மாற்றம் தேவைப்படுகிறது. முதலாளிய–நிலவுடமை வர்க்கங்களின் அதிகாரத்தையும் அவற்றின் மூலம் முழுநாட்டையும் சுரண்டி ஆதிக்கம் செலுத்துகிற ஏகபோக முதலாளியத்தையும் முதல் முறியடிக்க வேண்டும். அதன்பின், உழைக்கும் மக்களிடம் அதிகாரம் கைமாற வேண்டும். இந்த மாற்றம் வெறுமனே ஆட்சியைப் பிடிப்பதுடன் நின்றுவிடக் கூடியதல்ல. ஒரே நாளில் நடத்தி முடிக்கக் கூடியதுமல்ல. அதை உலகின் முதலாளிய வல்லரசுகளும் பெருமுதலாளிய நிறுவனங்களும் கைகட்டிப் பார்த்துக் கொண்டிருக்கப் போவதுமில்லை.

எவ்வாறாயினும், ஒரு சமூகப்புரட்சியின் முன் முக்கியமான இரண்டு உடனடிப் பணிகள் உள்ளன. ஒன்று உற்பத்தி உறவுகளை மாற்றியமைப்பது; அதாவது, உற்பத்திச் சாதனங்களில் தனியார் உடைமையை முடிவுக்குக் கொண்டு வருவதும் அதன் இடத்தில் சமுதாய உடைமையை நிறுவுவதும். மற்றது முதலாளியச் சனநாயகத்தினது அல்லது அதன் மறுப்பின் வழியில் உருவான முதலாளிய சர்வாதிகாரத்தினது இடத்தில் உழைக்கும் மக்களின் ஆட்சியை நிறுவுவது.

முதலாளிய ஆட்சியைப் புரட்சி மூலம் விழுத்துவது கடினமானது என்றாலும் அதனிடத்தில் ஒரு மாற்று ஆட்சியமைப்பை நிறுவிச் சமத்துவமான ஒரு சமுதாய அமைப்பைக் கட்டியெழுப்புவது அதை விடக் கடினமானது. இதன் சிரமங்களையும் சிக்கல்களையும் நேரத்துடன் அடையாளங் காணத் தவறியதன் விளைவாகவே சோஷலிஸ அரசுகள் பல சமூக நெருக்கடிகட்கு முகங்கொடுக்க நேரிட்டது. எவ்வாறாயினும் இரண்டு பொதுவான மாற்றுச் சனநாயக முறைகள் கம்யூனிஸ்ற் புரட்சியாளர்களால் முன்வைக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

மக்கள் சனநாயகம், புதிய–சனநாயகம் என்று குறிப்பிடப்படுகின்றவை முறையே கிழக்கு ஐரோப்பாவில் இரண்டாம் உலகப் போரின் பின்பு நிறுவப்பட்ட ஆட்சி முறையையும் சீனாவில் நடைமுறைப்படுத்தப்பட்ட ஆட்சிமுறையையும் குறிக்கின்றன. இந்தக் கோட்பாடுகளை விறைப்பான முறையில் விளங்கிக் கொள்வது தவறானது. இவை புரட்சி மூலம் ஆட்சி அதிகாரம் தொழிலாளி வர்க்கத் தலைமைக்குக் கைமாறுகிற சூழ்நிலையில் சமூக யதார்த்தத்தைக் கணிப்பிலெடுத்து நடைமுறைப்படுத்தப்படக் கூடிய ஆட்சி முறைகளேயாகும். இவற்றினிடையில் உடனடிச் சூழ்நிலை சார்ந்த வேறுபாடுகட்கும் மேலாகப், புரட்சி மூலம் ஆற்றப்பட வேண்டிய குறுகியகால, இடைநிலைப்பட்ட காலப் பணிகள் சார்ந்த அடிப்படையான வேறுபாடுகளும் உண்டு. அதன் காரணமாகவே மக்கள் சனநாயகம் என்று ஐரோப்பாவின் சோஷலிஸ நாடுகளில் அறியப்பட்ட கோட்பாட்டினின்று சீனாவின் சனநாயகமுறை வேறுபட வேண்டியதை உணர்த்து முகமாகப் புதிய–சனநாயகம் என்ற சொல் பயன்படுகிறது. எனினும், இவை, சனநாயகம் இயங்குகிற தளத்தை விரிவுபடுத்துகின்ற நோக்கில் ஒற்றுமையுடையன.

ஆளும் வர்க்கத்தின் வெவ்வேறு பிரிவினரது நலன்களை அடையாளப்படுத்தும் முதலாளியக் கட்சிகள் முதலாளிய முறையை நிருவகிப்பது எப்படி என்பது பற்றியே வேறுபடுகின்றன. முதலாளிய நாடுகளின் சோஷலிஸக் கட்சிகள் எனப்படுகின்றவை கூட, முதலாளிய முறைக்குட்பட்ட சீர்திருத்தக் கட்சிகளாக இயங்காமல், உற்பத்தி உறவு முறையை மாற்ற முயன்றால் என்ன நடக்கும் என்பதை மீண்டும் விளக்க அவசியமில்லை. எனவே, சனநாயகம் என்ற முகப்புத் தோற்றத்துக்கு அலங்காரமாக இருக்கிற அளவில் பலவாறான இடதுசாரிக் கட்சிகளும் செயற்பட முடியும்.

சோஷலிஸ அரசின் கீழ் நிலைமை முற்றிலும் வேறுபட்டது. சோஷலிஸ இலக்கையுடைய ஆட்சியில் முதலாளிய முறையை மீண்டும் நிலைநிறுத்துவது என்பது கேள்விக்கு அப்பாற்பட்டது. உற்பத்திச் சாதனங்களை முற்று முழுதாகச் சமுதாய உடைமையாக்குவதை இலக்காகக் கொண்ட ஒரு ஆட்சி முறையில் முதலாளியத்திற்கு மீளுவது பற்றிய விவாதங்களை விட முக்கியமான கடமைகள் உள்ளன. முதலாளிய ஆட்சியின் கீழ் உருவாக்கப்பட்ட பல சமுதாயச் சிக்கல்களையும் சுரண்டல் சமுதாயச் சிந்தனையின் தொடர்ச்சியின் விளைவான முரண்பாடுகளையும் தீர்ப்பதில் ஒன்றுபட்ட அணுகுமுறை தேவைப்படுகிறது.

> பின்தங்கிய பொருளாதார வளர்ச்சியும் குறைபாடான சமுதாய விழிப்புணர்வும் உள்ள நாடுகளில் சனநாயகம் என்பதும் தேர்தல்கள் என்பனவும் அப்பட்டமான ஏமாற்று வித்தைகளாகவே அமைகின்றன

சனநாயகம் என்பது தேர்தல் மூலம் தெரிவு செய்யப்பட்ட ஒரு குழுவினரின் கைகளில் ஆட்சிப்பொறுப்பை ஒப்படைப்பதல்ல. பாராளுமன்ற அரசாங்கம் என்பது அரசு இயந்திரத்தின் முகத் தோற்றம் மட்டுமே. அரச இயந்திரத்தின் உண்மையான செயற்பாடு அதன் பல்வேறு நிறுவனங்களின் மீது, அதாவது ஆயுதப் படைகள், பொலிஸ், நீதித்துறை போன்றவற்றின் மீது தங்கியுள்ளது. சோஷலிஸ அரசு இவற்றையெல்லாம் மாற்றியமைக்க வேண்டியுள்ளது. அரச அதிகார மையங்கள் சிலவற்றை முற்றாக நீக்கி அவற்றின் இடத்தில் புதிய அதிகார மையங்களை உருவாக்கும் தேவை இருக்கிறது. மக்கள் தமது கருத்துக்களைத் தெரிவிக்கவும் எண்ணங்களை நடைமுறைப்படுத்தவும எல்லா நேரத்திலும் தமது பாராளுமன்றப் பிரதிநிதிகளையே நம்பியிருக்க இயலாது. அவர்கள் தமது அதிகாரத்தைப் பிரயோகிக்கக் கூடிய இடங்களில் அதை நியமிக்கவும் முழுமையாகவும் பயன்படுத்தும் வாய்ப்புக்களை உருவாக்க வேண்டியுள்ளது. தொழிற்சாலைகள், குடியிருப்புப் பகுதிகள், ஊராட்சியமைப்புக்கள், கூட்டுப்பண்ணைகள் போன்ற இடங்களிலெல்லாம் அன்றாட அலுவல்கள் முதலாக நிருவாகம் தொடர்பான பலவேறு விடயங்களிலும் சம்மந்தப்பட்ட அனைவரும் பங்குபற்றும் வாய்ப்புக்களை உறுதி செய்யும் விதமாக ஆட்சிக் குழுக்கள், ஆலோசனைக்குழுக்கள் போன்ற பலவேறு அமைப்புக்கள் நிறுவப்படுகின்றன.

முன்னேறிய தொழில் வளர்ச்சி பெற்ற ஒரு நாட்டில் தொழிலாளி வர்க்கத்தின் தலைமையின் கீழ் மேற்கூறியனவற்றை நடைமுறைப்படுத்த இயலும். பின்தங்கிய பொருளாதார அமைப்பையும் நிலவுடைமை முறையிலிருந்து முற்றாக விடுபடாத விவசாயத் துறையையுங் கொண்ட ஒரு சமுதாயத்தில் மக்கள் அதிகாரத்தை நிறுவுவதில் நிலவுடைமைச் சிந்தனையிலிருந்து மக்களை விடுவிக்கிற சவாலையும் எதிர் கொள்ள வேண்டியிருக்கிறது. அதற்கும் மேலாக நவீன உற்பத்தி முறையை நோக்கிய பயணத்திற்கு வேண்டிய மூலதனத்தை திரட்ட வேண்டிய தேவையை எதிர்கொள்ள வேண்டியிருக்கிறது. எனவே, சீனாவில் கைக்கொள்ளப்பட்ட அணுகுமுறை கிழக்கு ஐரோப்பாவிலும் கிழக்கு ஐரோப்பாவை விடப் பின் தங்கிய முதலாளிய வளர்ச்சியைக் கொண்ட நிலையில் புரட்சியைக் கண்ட ரஷ்சியப் பேரரசிலும் கைக்கொள்ளபட்ட அணுகு முறையிலிருந்தும் வேறுபட்டதாகவே அமைவது அவசியமாயிற்று.

எவ்வாறாயினும், பாராளுமன்றத்தையொத்த மத்திய ஆட்சியமைப்பு ஒன்றிற்கான தேவை இருக்கிறது. அங்கு எந்த அடிப்டையில் மக்களின் பிரதிநிதிகள் தெரிவு செய்யப்படுகின்றனர். அவர்களின் பணிகள் என்ன என்ற கேள்விகட்கு ஒவ்வொரு சோஷலிஸ அரசிலும் நாட்டின் சூழ் நிலைக்கு ஏற்ப வேறுபட்ட தீர்வுகள் காணப்பட்டுள்ளன. எல்லாவற்றிலும் பொதுவாக உள்ள ஒரு பண்பு ஏதெனில் பாராளுமன்றத்திற்கு ஈடான மக்கள் மன்றங்களில் வேறுபட்ட சமுதாயப் பிரிவினர் ஒவ்வொருவரதும் குரல் அங்கே கேட்கப்படக் கூடிய விதமாகத் தெரிவுமுறை அமைந்திருப்பதும் பெரும்பான்மை வாக்கெடுப்பை விடப் பொது உடன்பாட்டின் அடிப்டையிலேயே நாட்டின் அடிப்படையான பொருளாதாரக் கொள்கை, திட்டமிடல் போன்ற முக்கியமான விடயங்கள் முடிவு செய்யப்பட்டுள்ளன.

எதைச் சொன்னால் அதிக வாக்குக்களைப் பெறலாம் என்ற கணிப்பின் முன் சமுதாய ஒற்றுமையையும் பொதுவான நலன்களையும் புறக்கணிக்கும் முறையில் இயங்கி யாரும் தேர்தலில் வென்று அதிகாரத்தைக் கைப்பற்ற இயலாது என்பது மக்கள் சனநாயக, புதிய–சனநாய ஆட்சி முறைகளின் முக்கியமான ஒரு பண்பு.

கம்யூனிஸ்ற் கட்சி மட்டுமே இயங்குகிற ஒரு கட்சி சர்வதிகாரம் என்ற முதலாளிய விமர்சனங் கூட உண்மைக்குப் புறம்பானதே. சீனா, போலந்து, கிழக்கு ஜேர்மனி போன்ற நாடுகளில் கம்யூனிஸ்ற் கட்சியை விடப் பிற கட்சிகட்கும் இடம் இருந்தே வந்துள்ளது. கம்யூனிஸ்ற் கட்சியின் ஆதிக்கம் அது ஏகப்பெரும்பான்மையான உழைக்கும் மக்களின் பிரதிநிதியாக இயங்குகிற அடிப்படையிலேயே இயலுமாகிறது. எனினும் கம்யூனிஸ்ற் கட்சிகள் கொள்கை தவறிப்போகவும் கட்சிக்குள் சந்தர்ப்பவாதிகள் நுழையவும் கட்சிக்குள்ளேயே சந்தர்ப்பவாதம் தோன்றவும் கட்சி மக்களிடமிருந்து தனிமைப்பட்டுப் போகவும் இயலும் என்பதைப் பற்றி ஸ்தாலினும் மாஓவும் எச்சரித்திருக்கிறார்கள். அதற்கு எதிரான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன.

இன்று உலக சோஷலிஸ நாடுகளிற் பெரும்பாலானவை முதலாளியப் பொருளாதாரத்தை ஏற்றுள்ளன. இது ஏன் நடந்தது, இதை எவ்வாறு தடுக்கலாம் என்பன முக்கிய கேள்விகள், சனநாயகத்தையும் சோஷலிஸத்தையும் வலுப்படுத்துவதில் ஏற்பட்ட பிரச்சனைகள் இதற்கு முக்கியமான காரணங்கள். இப்பிரச்சனைகள் வெளியிலிருந்தும் உள்ளேயிருந்தும் தோன்றலாம் என்பதே சோவியத் சோஷலிஸத்தின் முக்கால் நூற்றாண்டுக்கால அனுபவம். இவை பற்றிக் கட்டுரையின் அடுத்த இறுதிப் பகுதியில் சுருக்கமாகக் கவனிப்போம்.

---

### சனாதிபதி தேர்தல்..........

6ம் பக்க தொடர்ச்சி.

அதேவேளை, இரண்டு பிரதான வேட்பாளர்களையும் எதிர்க்கிற பேரில் மூன்று ற்றொட்ஸ்கிஸக் கட்சிகள் ஒவ்வொன்றும் தனித்தனியே போட்டியிடுவதாக அறிவித்துள்ளன. இவற்றின் தலைவர்களின் தன்முனைப்பு எப்போதுமே, இடதுசாரி ஒற்றுமையை விட முக்கியமானதாக இருந்து வந்துள்ளதை இங்கு நினைவூட்டுவதுதாகும்.

உண்மையில் மக்களின் முன்னாலுள்ள தெரிவு என்ன? கடந்த இருபத்தைந்து வருடகால அரசியலைப் பார்த்தால், எந்த அரசாங்கமும் நாட்டின் அடிப்படையான பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கு ஒரு வழியையும் வைத்திருக்கவில்லை, ஒரு உருப்படியான வழியையும் தேட ஆயத்தமாக இல்லை என்பது தெளிவாக விளங்கும். விக்ரமசிங்க இந்த நாட்டை நேரடியாகவே அமெரிக்க ஆதிக்க த்தின் கீழே கொண்டு வருகிற நோக்கத்தைக் கொண்டவர். ராஜபக்ஷ அமெரிக்க மேலாதிக்கத்திற்கு எதிராக இதுவரை ஒரு மூச்சும் விடாதவர். இந்திய மேலாதிக்கவாதிகளின் கைப்பாவைகள் அவருக்குப் பின்னால் உள்ளனர். அந்த நெருக்குவாரம் அவர் வென்றால் வெளிவெளியாகவே செயற்படும். விக்கிரசிங்க இந்தியாவைப் பகைத்து எதுவும் செய்வாரென்று நாம் நம்ப இடமில்லை. எனவே இரண்டு மேலாதிக்கங்களும் எந்த விதத்தில் நம்மீது ஆதிக்கம் செலுத்தும் என்பதில் உள்ள சிறு வேறுபாட்டை விட்டால் நாட்டின் பொருளாதாரம் உலகமயமாதலின் வழியிற் சீரழிவது பற்றி இரண்டு பிரதான அணிகட்கிடையிலும் வேறுபாடு இல்லை.

தேசிய இனப்பிரச்சினையின் தீர்வு பற்றி எந்த விதமான தெளிவான ஆலோசனையையோ தீர்வுத்திட்டத்தையோ இரண்டு பிரதான வேட்பாளர்களும் முன்வைக்கவில்லை. முன்வைக்கும் சாடையும் இல்லை. போர் நிறுத்தத்தைத் தொடர்வதற்கப்பால் இருவருக்கும் தேசிய இனப்பிரச்சனைபற்றிய அக்கறை இல்லை.


எனவே இரண்டு வேட்பாளர்களையும் நிராகரிப்பதற்கான பாதையொன்றைத் தேடவேண்டிய ஒரு சூழலில் மற்ற இடதுசாரி முற்போக்குச் சக்திகளுடனும் பிறநேர்மையான ஜனநாயக சக்திகளுடனும் ஒரு விதமான கலந்தாலோசனையும் இல்லாமல் ஒவ்வொருவர் ஒரு கருத்தைத் தெரிவித்துள்ளது வருத்தத்தக்கது. இது நடைமுறைச் சாத்தியமான ஒருங்கிணைவான நடவடிக்கை ஒன்றுக்கு வழியில்லாமற் செய்து தென்னிலங்கையில் இடதுசாரி ஒற்றுமைக்கும் தடை ஏற்படுத்தியுள்ளது. நாட்டை எதிர்நோக்கும் பேரபாயம் பற்றிய கவலை இவர்கட்கு இருந்தால் இரண்டு பிரதான வேட்பாளர்களையும் நிராகரிப்பதற்கான மாற்றுவழியொன்றைத் தேடியிருப்பார்கள். எவருமே வாக்கெடுப்பின் முதலாவது எண்ணுதலில் தெரிவு செய்யப்படாத நிலைமையை உருவாக்கியிருக்கலாம். அல்லது, அதை விட வலுவான முறையில், வாக்குச் சீட்டுக்களைப் பழுதாக்கியோ தேர்தலைப் பகிஷ்கரித்தோ மக்களின் எதிர்ப்புக்கு ஒரு செயல் வடிவம் கொடுத்திருக்கலாம்.

இந்த தேர்தலில் யார் வென்றாலும் அது மக்களுக்குத் தோல்வியே. எனவே அந்த வெற்றியை வெறுமையாக்குகிற வழிகளை இரண்டு வேட்பாளர்களையும் வெறுக்கிற மக்கள் தேட வேண்டியுள்ளது. நம் முன்னாலுள்ள சனாதிபதித் தெரிவு ஒரு தெரிவேயல்ல என்பதை உலகறியச் செய்வதே நம் தெரிவாகட்டும்

www.tamilarangam.net
நன்றி - நூலகத்திட்டம்



# தோழர் நவம் நினைவாக!



தோழர் நவம் மறைந்து (சி. நவரட்ணம் 8-10-2004) ஒரு வருடம் பூர்த்தியாகிறது. அவரது மறைவை புதிய- ஜனநாயக கட்சி புரட்சிகர உணர்வுடன் நினைவு கொள்கின்றது. தோழர் நவம் இறுதி மூச்சுவரை ஒரு நேர்மையான மாக்சிச லெனினிச வாதியாக வாழ்ந்து வந்தவர். அவ்வாறு வாழ்வதென்பது சமகாலச் சூழலில் இலகுவான ஒன்றாக இருக்கவில்லை என்பது இவ்வேளை ஆழ்ந்து நோக்குதற்குரியதாகும். ஒருவருடைய சொற்களில் இருந்தன்றி அவருடைய செயற்பாடுகளில் இருந்தே ஒரு மாக்சிச லெனினிச வாதிக்குரிய நிலைப்பாட்டைக் காணுதல் வேண்டும் என்பது அடிப்படையான ஒன்றாகும்.

இன்றைய தேசிய சர்வதேசியச் சூழல் மிகச் சிக்கல்கள் நிறைந்தவையும் கடுமையான அபாயங்களைக் கொண்டவைகளாகவுமே காணப்படுகின்றன. தேசியவாத நிலைப்பாடுகள் மிகுந்த வன்மத்துடனும் வக்கிரத்துடனும் முன்னெடுக்கப்படுகின்றன. இதன் காரணமாக தேசிய இன ஒடுக்குமுறை யுத்த வடிவத்தை அடைந்து பிரதான பிரச்சினையாகி நின்கின்றது. இதனால் ஒவ்வொருவரும் தத்தமது தேசிய உணர்வு கொண்ட நோக்கின் ஊடாகவே ஒவ்வொரு விடயத்தையும் குறுகி அணுகும் ஒரு பாதகமான போக்கை கடைப்பிடிக்கின்றனர். இதே தேசியவாத நோக்கு என்பது வர்க்க சுரண்டலையும் வர்க்க ஒடுக்குமுறையையும் மறைப்புச் செய்து நிற்கிறது. பேரினவாத ஒடுக்குமுறை இன்றைய பிரதான பிரச்சினை என்பதால் அது அம்பலப்படுத்தப்படவும் எதிர்க்கப்படவும் வேண்டும். அதே வேளை அதற்கு அடிப்படையாக அமைந்துள்ள சமூக அமைப்பு முறையின் ஏற்றத்தாழ்வும் வர்க்க ஒடுக்குமுறைகளும் மறுக்கப்படக் கூடாது. அத்துடன் ஏனைய ஒடுக்குமுறைகளும் தட்டிக்கழிக்கப்படக் கூடாதவைகளாகும். அதேபோன்று உலகமயமாக்கப்பட்டு வரும் ஏகாதிபத்திய பொருளாதார அரசியல் ராணுவ ஊடுருவல்கள் அம்பலப்படுத்தப்பட்டு எதிர்க்கப்படல் வேண்டும். சுயநிர்ணய உரிமை வற்புறுத்தப்பட்டு அதற்கான போராட்டம் மேலும் முன் செல்ல வேண்டும். அதே வேளை ஜனநாயகம் மனித உரிமை மறுக்கப்படக் கூடாது. இதனையே மாக்சிச லெனினிச வாதிகளாகிய நாம் வற்புறுத்தி வருகின்றோம்.

தோழர் நவம் மேற்குறித்த மாக்சிச லெனினிச நிலைப்பாட்டில் உறுதியாக நின்று செயல்பட்டு வந்த ஒருவராவார். இன்று மாக்சிசம் லெனினிசத்திற்கும் சோஷலிசத்திற்கும் சற்று பின்னடைவுச் சூழல் நிலவுகின்றமை மறைப்புக்குரிய ஒன்றல்ல. அதேபோன்று ஏகாதிபத்தியம் தனது உலகமயமாதல் நிகழ்ச்சி நிரலின் ஊடே வெற்றி பெற்று வருவதாக ஒரு மாயத் தோற்றம் காட்டி நிற்கிறது. இத்தகைய ஒரு சூழலில் தான் ஒரு மாக்சிச லெனினிசவாதி தனக்குரிய கொள்கை ஓர்மத்தையும் செயற்படும் உறுதிப்பாட்டையும் வெளிக்காட்டி முன்செல்லல் வேண்டும். முதலாளித்துவம் பல்வேறு வடிவங்களில் விரித்து வரும் மாயவலைகளுக்குள் அகப்பட்டுவிடக் கூடாது. விஞ்ஞான பூர்வமான மாக்சிசத்தைத் தனது உலக நோக்காக வரித்துக் கொண்ட ஒவ்வொரு மாக்சிச லெனினிச வாதியும் முதலாளித்துவம் முன்வைக்கும் ஒவ்வொன்றையும் மிகக் கவனத்துடன் அணுகுதல் வேண்டும். பொருளாதார முன்வைப்புகளையும் அதற்கான அரசியல் வியூகங்களையும் உரியவாறு அடையாளம் காணுதல் வேண்டும். முதலாளித்துவம் இவற்றின் ஊடாகத்தன்னை நிலைநிறுத்திக் கொள்ள பண்பாட்டுத் தளத்தில் பாரியளவிலான நச்சுத்தனங்களை தினம் தினம் புகுத்தி வருகின்றது. இவற்றை ஒவ்வொரு மாக்சிச லெனினிசவாதியும் தெளிவாக அடையாளம் கண்டு உறுதியான எதிர்ப்பு நிலைப்பாட்டை கொண்டிருத்தல் வேண்டும். அதன் மூலமே மக்களுக்கு சொல்லாலும் செயலாலும் அறிவூட்டவும் செயலுக்குத் தூண்டவும் முடியும். இத்தகைய ஒரு நிலைப்பாட்டை தோழர் நவம் இறுதிவரை கடைப்பிடித்து வந்தவர்.

இன்றைய சமூக அமைப்பின் பாரிய ஏற்றத்தாழ்வையும் சுரண்டலில் தன்மைகளையும் ஒடுக்கு முறைகளின் ஊற்று மூலங்களையும் பொருள் முதல்வாத வரலாற்றியல் அடிப்படையில் தெளிவுறக் காண்பவர்கள் மாக்சிச லெனினிச வாதிகள். அவர்கள் இன்றைய சமூக அமைப்பில் திடீரென எழுந்து மாக்சிச லெனினிச ஞானோதயம் பெற்றவர்கள் அல்லர். ஒவ்வொருவரும் ஒவ்வொரு வர்க்க முத்திரையுடனேயே பிறந்து வளர்கிறார்கள். அப்போது அந்தந்த வர்க்கத்திற்குரிய குணாம்சமும் உணர்வும் உருவாகி வளரவே செய்யும். மனிதர்களின் வளர்ச்சிப்போக்கில் அறிவு தொகுக்கப்பட்டு பகுத்தறிவாக வளர்ச்சி பெறும் காலகட்டத்தில் ஊர் உலகத்தையும் சமூக அமைப்புகளையும் உற்று நோக்க ஆரம்பிப்பர். இதில் குறிப்பாக சுரண்டப்பட்டு ஒடுக்கப்படும் மக்கள் தத்தமது அன்றாட வாழ்வியல் அனுபவங்களின் மூலம் தாம் எதிர் கொள்ளும் பிரச்சினைகளை நோக்கி ஏன்? எப்படி? எதற்காக? என்னும் கேள்விகளை மீண்டும் மீண்டும் கேட்பதின் ஊடாக சமூக அக்கறையாளர்களாக தம்மை மாற்றிக் கொள்வர். இச் சமூக அக்கறையாளர்களில் குறிப்பிடத்தக்கோர் மாக்சிச உலக நோக்கை நோக்கி ஈர்க்கப்படுவர். அதன் விஞ்ஞான பூர்வமான நடைமுறைச் சாத்தியமான யாதார்த்த செயற்பாடுகளுடன் தம்மை இணைத்துக் கொள்வர். வெறும் புத்தகவாத மாக்சியர்களாக அன்றி மாக்சிசத்தை நடைமுறைப்படுத்தும் மாக்சிசக் கட்சியின் அவசியத்தை உணர்ந்து மாக்சிச லெனினிசக் கட்சியில் இணைந்து செயல்படுவர்.

அவ்வாறு செயல்பட ஆரம்பிக்கும் போது இன்றைய ஏற்றத்தாழ்வும் சுரண்டலும் ஒடுக்குமுறைகளும் கொண்ட கொடுமிகு சமூக அமைப்பை புரட்சிகர பலாத்காரம் கொண்டு வீழ்த்தும் போராட்ட உணர்வை இலட்சியமாக்கிக் கொள்வர். வீழ்த்துதல் மட்டுமன்றி புதிய சோஷலிச சமூக அமைப்பைத் தோற்றுவித்து கம்யூனிச அமைப்பு வரை முன்னெடுத்துச் செல்ல சபதமேற்றுக் கொள்வர்.

இத்தகைய மாக்சிச லெனினிச வாதிகள் தமக்கு முன்னே நிகழ்ந்து வரும் ஒவ்வொரு சமூக அநீதிகளுக்கும் ஒடுக்குமுறைகளுக்கும் எதிராகப் போராடுவதைத் தமது வாழ்வியல் கடமையாகக் கொள்கின்றனர். தன்னம் தனியே அன்றி கட்சி அமைப்பினதும் ஏனைய வெகுஜன இயக்கங்களின் கீழும் மக்களை அணிதிரட்டி போராட்டங்களை முன்னெடுப்பார்கள். மாக்சிச லெனினிச வாதிகளின் சமூக மாற்றத்திற்கான புரட்சிகரப் போராட்டங்களின் பரீட்சார்த்தக் களங்களாக வெகுஜனப் போராட்டத் தளங்கள் விளங்குகின்றன. அப் போராட்டங்களின் ஊடே ஒவ்வொரு புரட்சிகரப் போராளியும் பல்வேறு அனுபவங்களின் ஊடாகப் புடம் போடப்படுகிறார்கள். எனவே கட்சி என்பது வளர்ச்சி பெறவும் புரட்சிகரப் பயணம் வலுப்பெறவும் வெகுஜனப் போராட்டங்கள் பயனுள்ள பாத்திரம் வகிக்கின்றன. கட்சி அமைப்பை தனியே கட்டி முடித்து விட்டு வெகுஜனப்போர்ராட்டங்களை முன்னெடுப்பது என்பது தவறான ஒரு நோக்கு நிலையாகும். அதேபோன்று தனியே வெகுஜனப் போரட்டங்கள் மட்டும் மாற்றங்களைக் கொண்டு வந்து விடும் என்றும் கட்சி அமைப்பை முதன்மைப்படுத்தத் தேவை இல்லை என்று கருதுவதும் தவறானதாகும். இவை கொள்கை நடைமுறை சார்ந்த பிரச்சினையாகும். தோழர் ஸ்டாலின் இரத்தினச் சுருக்கமாகக் கூறினார். 'கொள்கையற்ற நடைமுறை குருட்டுத்தனம், நடைமுறையற்ற கொள்கை மலட்டுத்தனம்' என்பது மிகப் பெரிய அனுப உண்மையாகும்.

சி.கா.செந்திவேல்
பொது செயலாளர்

தோழர் நவம் மேற் கூறியவாறான கொள்கை நடைமுறையினை கட்சியமைப்பின் ஊடாகவும் வெகுஜனப் போராட்டங்களின் ஊடாகவும் முன்னெடுத்து வந்த தோழர்களில் ஒருவராவர். அவரது அனுபவங்களில் இருந்து இன்றைய தோழர்கள் ஒவ்வொருவரும் நிறையப் படிக்க வேண்டும். அவை நமது மாக்சிச லெனினிச அன்றாட வாழ்வியல் நடைமுறைகளுக்கு அவசியமானவைகளாகும்.

1. நமது மூளைகளில் படிந்து கருத்துக்களாக வெளிவரும் பழமைவாதத்தை படிப்படியாக விட்டெறிந்து விஞ்ஞான பூர்வமான மாக்சிச உலக நோக்கினால் மறுநிரப்பல் செய்து கொள்ளல் வேண்டும். மாக்சிச லெனினிச மாஓசேதுங் சிந்தனை என்னும் தத்துவத்தை தினம் தினம் கூர்மைப்படுத்தி நமது மூளையில் சிந்தனையில் செயலில் பிரயோக்கிக்காது விட்டால் நாம் மீண்டும் பழைமைவாதக் கருத்துக்களால் திசை திருப்பட்டு விடும் அபாயத்தை சந்திக்க வேண்டியே ஏற்படும்.

2. நமது வாழ்வியல் அன்றாட நடைமுறைகளுடன் மாக்சிசம் லெனினிசத்தை இசைவாக்கி முன்னெடுத்து வரல் அவசியமானதாகும்.

3. சகல வித திரிபுவாத சந்தர்ப்பவாத பிற்போக்குவாத சிந்தனைகளின் ஊற்று மூலம் அப்பட்டமான சுய நலமேயாகும். எனவே சுய நலத்திற்கு எதிராக நம்மை நாமே விழிப்புடன் இருத்தி வைத்திருத்தல் வேண்டும்.

4. கட்சிக்குள்ளும் வெளியில் அன்றாடவாழ்விலும் ஒவ்வொரு மாக்சிச லெனினிச வாதியும் விமர்சனம் சுய விமர்சனம் என்ற வழிமுறையை உறுதியாகப் பின்பற்றல் வேண்டியது அவசியமாகும்.

5. ஒவ்வொரு மாக்சிச லெனினிசவாதியும் மாக்சிச உலக நோக்கு தெளிவுகாட்டி நிற்கும் அடிப்படையில் புற நிலை யதார்த்தத்திலிருந்து விடயங்களைப் அணுகுதல் வேண்டும். வெறுமனே அகநிலை நின்று முடிவுகளுக்கு வருதல் அபாயமானதாகும் என்பதை உணருதல் வேண்டும்.

6. தினமும் முக்கியமான சந்தர்பங்களிலும் ஒவ்வொரு மாக்சிச லெனினிச வாதியும் அச்சமின்றியும் துணிவையும் நம்பிக்கையுடனான முன்னோக்கிய நகர்வையும் வெளிப்படுத்தி ஏனையோருக்கு முன்னுதாரணம் மிக்கவர்களாக விளங்க வேண்டும். வெறும் வாய்ச் சொல் வீரர்களாக அன்றி புரட்சிகர திடத்தின் ஊடான செயல் வீரர்களாக தம்மை புடம் போட்டுக் கொள்ளல் வேண்டும். இதற்கான பயிற்சிக் களம் வெகுஜனப்போராட்டங்களேயாகும்.

7. கட்சியமைப்பிலும் வெகுஜனப்போராட்டத் தளத்திலும் கூட்டு முடிவு தனிநபர் பொறுப்பு என்னும் வழி முறையின் ஊடாகவே மாக்சிச லெனினிச வாதிகள் செயல்பட்டு வெற்றி பெறுகின்றார்கள் என்பதை அனுபவப் பட்டறிவாக்கிக் கொள்ளல் வேண்டும்.

தொடர்ச்சி 9ம் பக்க

## சிம்மாசன நரித்தெய்வம்

உலகின் மிகப் பெரிய
துரதிருஸ்ட சாலிகளே!
அமெரிக்க பிரஜைகளே!
உங்களுக்காக வருத்தப்படுகின்றோம்.

உங்களின் உலக நாயகனிடம் கேளுங்கள்.
'மனிதர் உணவை மனிதர் பறித்தல்'
'மனிதர் நோக மனிதர் ரசித்தல்'
'மனிதர் கொன்று மனிதர் புசித்தல்'
விளக்கம் கேளுங்கள்.
மனுதர்மம் விளக்குவார்.
திருவாய் மொழியில்
புது நெறிகள் உதிரும்.

உங்களின் மகாபுருஷர்
உலகை உயரமிருந்து பார்ப்பவர்–
அமெரிக்காவின் அரைப்பகுதி தவிர
அனைத்தும் நிகரவர்க்கு.

ஜப்பான், வியட்னாம்
கியூபா, ஆர்ஜன்டீனா,
ஈராக், பொலிவியக் காடு,
ஏன்?
நியூ ஓர்லியன்ஸ் உள்ளடங்கலாக
அமெரிக்காவின் 'வெண்தேசங்கள்' தவிர,
அனைத்தும் நிகரவர்க்கு
வலது கரத்தில் வாளும்,
இடது கரத்தில் விடமும் கொண்டு
தூக்கு மரங்களை மட்டுமே
வலம் வரும் நவீன அவதாரம்.

கறுப்பர்களின் குருதியுறிஞ்சி
நிமிர்த்திய வெள்ளை மாளிகையின்
சிம்மாசன நரித்தெய்வம்– அவர்
உலகை உயரமிருந்து பார்ப்பவர்
அரங்கு வாரா ஆப்ரகாம் லிங்கன்கள்,
மாலை விரும்பா மார்ட்டின் லூதர்கள்,
என எத்தனைப் பேர்களை காவு கொள்வர்?!

அமெரிக்கச் சீமான்களே!
மண்டியிட்டு பிரார்த்தியுங்கள்
வணங்குங்கள்.

அகங்காரத்துடன் அமெரிக்க
சிம்மாசனம் எழுந்த போதெலாம்
விழுந்துபோன பழைய வரலாற்றை
புதுப்பிக்க புறப்பட்ட புதுக்கடவுள் அவர்.

ஜன நாயகத்தை
தன்வீட்டு நாய்க்கூட்டில் வளர்க்கும்
வெள்ளை வைரவர்.
ஏழைகளின் கண்ணீரும் செந்நீரும்
'போலி இறைவன்களை ' இயக்குவித்தல்
இயலாத காரியம்– ஆயினும்

அல்லாவை, ஏசுவை
அம்மனை, புத்தனை.
இன்னுமிதர தேவர்களை,
பழங்குடி கடவுளரை– அவர்தன்
அந்தரங்க அறைக்குள்
அதட்டி வைத்திருக்கிறார்.

ஓ... அமெரிக்க பிரஜைகளே!
உலகின் மிகப்பெரிய
துரதிருஸ்ட சாலிகளே!
உங்களுக்காக,
உங்கள் உலக நாயகனுக்காக
ஏழைத் தேசங்கள்
பரிதாபப்படுகின்றன.
அவர்தான் "கடவுள்" என்றால்
நீங்கள் மனிதர்கள் தானே?!

பத்தனையூர்
வே.தினகரன்

www.tamilarangam.net நன்றி - நூலகத்திட்டம்



# ஜே. வி. பியினர் யாருடைய கையாட்கள்?

ஜே.வி.பி யினர் தங்களை ஏகாதிபத்திய விரோதிகளாக காட்டி இளைஞர்களையும் யுவதிகளையும் ஏமாற்றி வருகின்றனர். அண்மைக் காலங்களில் ஜே.வி.பி யினரின் நடவடிக்கைகள் அவர்கள் ஏகாதிபத்திய வாதிகளின் கையாட்கள் என்பதை அம்பலப்படுத்தி வருகிறது.

ஈராக்கில் அமெரிக்க- பிரிட்டிஷ் ஆக்கிரமிப்பை எதிர்த்து வீதிகளில் ஜே.வி.பி.யினர் ஆர்ப்பாட்டம் செய்தனர் அண்மையில் கல்வி அமைச்சின் செயலாளர் தாரா டீமெல்லின் படத்தை உலக வங்கி வதிவிடப் பிரதிநிதியின் படத்துடன் போட்டு ஆறு கோடி டொலருக்காக நாட்டின் கல்வியை விற்கலாமா என்றும் சுவரொட்டிகளை ஒட்டியதன் மூலம் ஜே.வி.பி யினர் தங்களை உலகவங்கியின் விரோதிகளாகவும் காட்டியிருக்கிறார்கள்.

இந்த வீறாப்பு வீரர்கள் மேற்படி ஏகாதிபத்திய நாடுகளுக்குச் சென்று பணம் வசூலித்து வருவதில் சங்கடம் ஏதும் இருக்கவில்லை. இந்தப் புரட்சிக்காரருக்கு எந்த வகையில் கையூட்டல் செய்யலாமெண்பதை ஏகாதிபத்திய வாதிகள் திறமையாக அறிந்து வைத்திருக்கின்றனர்.

ஜே.வி.பியின் உயர்மட்ட கட்சித் தலைவர்கள் யப்பானுக்கு விஜயம் செய்தனர். அண்மையில் முன்னாள் பிரதி அமைச்சர் சுனில் கந்துநெத்தி அமெரிக்காவுக்கு விஜயம் செய்தார். எதிர் வரும் ஜனாதிபதி தேர்தலுக்கு நிதி சேர்ப்பதற்காக அவர் அங்கு சென்றார். யார் யாரிடம் பணம் பெற்றார்கள்? "ஆயிரம் குளங்களைப்" புனரமைக்கப் புறப்பட்ட ஜே.வி.பி.யினர் அமெரிக்க மிலேனியம் சலஞ் கணக்கிலிருந்து நிதி கேட்டுப் பெற்றனர். இந்தக் குளப்புனரமைப்புக்கு நோர்வேயின் உதவியும் பெறப்பட்டது.

அமெரிக்காவுக்கு உயர்மட்டத் தலைவர்களை அனுப்பினால் அது பொதுமக்கள் மத்தியில் சந்தேகத்தையுண்டு பண்ணுமென்பதால் இரண்டாம் நிலையிலுள்ள கட்சித்தலைவர்களை அமெரிக்காவுக்கு அனுப்பினர். சம்பந்தப்பட்ட முன்னாள் பிரதி அமைச்சர் அமெரிக்காவில் நியூயோர்க் வாஷிங்டன் நகரங்களில் தங்கியிருந்து. தமக்குரிய அலுவல்களில் ஈடுபட்டார். அங்கிருந்து திரும்பும் போது சிங்கப்பூரையும் சுற்றிப் பார்த்து விட்டுத் திரும்பினார்.

புதிய கல்விச் சீர்திருத்தத்தை எதிர்ப்பதாகக் கூறும் ஜே.வி.பி யினர் இந்த அரசுடன் ஒட்டியிருந்த காலத்தில் இது பற்றிப் பேச்சே எடுக்கவில்லை.

இந்தக் கல்விச் சீர்திருத்தம் 1998ல் பரீட்சார்த்தமாக கம்பகா மாவட்டத்தில் அறிமுகப்படுத்தப்பட்டது. இந்த கல்விச் சீர்திருத்தத்தை இரண்டு அரசாங்கங்களும் - ஏற்றுக் கொண்டுள்ளன. ஜே.வி.பியினரும் அரசுடன் இருந்தபோது ஏதும் பேசாது இருந்துவிட்டு இன்று மாணவர்களை மக்களை ஏமாற்ற நாடகமாடுகின்றனர்.

ஜே.வி.பி யினர் தமக்கு ஒரு நியாயத்தையும் ஏனையோருக்கு வேறொரு நியாயத்தையும் பேசி வருகின்றனர். மற்றவர்களை கையாட்கள் கைக் கூலிகள் என்று வசைபாடும் இவர்கள் யாருடைய கைக் கூலிகளாக மாறி வருகின்றனர் என்பதை தமது செயல்கள் மூலமாகவே அம்பலப்படுத்தி வருகின்றனர்.

ஜே.வி.யினர் தம்மை மூன்றாவது சக்தி எனக் கூறிக் கொண்டு ஒரு கையில் பேரினவாதத்தையும் மறு கையில் மேற்குலக ஏகாதிபத்திய எதிர்ப்பையும் தூக்கிநிற்பது போன்று காட்சி காட்டி நிற்கிறார்கள். இது சிங்கள சாதாரண உழைக்கும் மக்களை ஏமாற்றவேயாகும். அவர்களது உண்மையான நோக்கம் சிறிலங்கா சுதந்திரக் கட்சியை சிதைத்து அந்த இடத்தைத் தாங்கள் பிடித்து அதிகாரத்திற்கு வருவதற்கேயாகும்.

# மக்கள் எழுத்தாளர் இ. முருகையனுக்கு கௌரவம் அளித்த கலை இலக்கிய ஒன்றுகூடல்



மூத்த கவிஞர், தமிழறிஞர், தேசிய கலை இலக்கியப் பேரவையின் தலைவர் கலாநிதி இ. முருகையன் வயது 70பதைப் பூர்த்தி செய்கிறார். அதனைக் குறித்த ஒரு கலை இலக்கிய ஒன்று கூடல் 18-09-2005 யாழ்ப்பாணத்தில் இடம் பெற்றது. இது திருநெல்வேலி இந்து வாலிபர் சங்க மண்டபத்தில் தாயகம் சஞ்சிகையின் ஆசிரியர் க. தணிகாசலம் தலைமையில் நடைபெற்றது. ஒளியேற்றல் நிகழ்வுடன் ஆரம்பித்த மேற்படி ஒன்றுகூடலில் முருகையனும் அவரது துணைவியாரும் மாலைகள் அணிவிக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டனர். வரவேற்புரையை சோ. தேவராஜா நிகழ்த்த தலைமையுரையை க. தணிகாசலம் வழங்கினார்.

கடந்த ஐம்பது வருடங்களுக்கு மேலாக முருகையன் கலை இலக்கிய கல்வித் தளங்களில் சமூக நோக்கிலும் மக்கள் சார்பு நிலையிலும் நின்று பெறுமதி மிக்க படைப்புகளை வழங்கி வந்துள்ளார். அவரது எழுத்துக்கள் காலத்தின் தேவையை அடிப்படையாகக் கொண்டே எழுந்தவைகளாகும். அவை மிகச் சிறந்த கவிதைகளாகவும் நாடகங்கள், கட்டுரைகள் மொழி பெயர்ப்புகள், திறனாய்வுகள் என விரிந்து பரந்தும் உள்ளன. முருகையன் மாணவனாக இருந்த காலத்திலிருந்தே கைலாசபதியின் பாடசாலை நண்பராகி பல்கலைக்கழக பட்டப்படிப்பின் ஊடாக கல்வித்துறையில் பணிபுரிந்து வந்தவர். அவரது உலகக் கண்ணோட்டம் தமிழ்த் தேசியத்தில் ஆரம்பித்து இலங்கைத் தேசியமாக வளர்ச்சி பெற்று பிறகாலத்தில் மாக்ஸிச உலகக் கண்ணோட்டத்தை உள்வாங்கி பொதுவுடமைப் பரப்பினுள் புகுந்து சமூக அநீதிகளுக்கு எதிரான சமூக மாற்றத்தைக் கோரி நிற்கும் மக்கள் இலக்கியப் பரப்பை செழுமைப்படுத்தும் ஒன்றாகிக் கொண்டது. அதன் வழியில் பேராசிரியர் கைலாசபதியுடன் நெருக்கமாகச் செயற்பட்டு வந்தார். அவரது மறைவுக்குப்பின் தேசியகலை இலக்கியப் பேரவையின் தலைவராகவும் தாயகம் சஞ்சிகையின் ஆசிரியர் குழுவில் இருந்தும் ஆலோசனைகளும் வழங்கி வழிகாட்டி வருகின்றார். அமைதியும் தன்னடக்கமும் கொண்ட முருகையனிடம் கடுகளவேனும் வித்துவச்செருக்கோ தற்புகழ் வீறாப்போ இருந்ததில்லை. சமூக நோக்கும் மக்கள் சார்பும் சமூக மாற்றத்திற்கான விருப்புமே அவரிடம் காணப்படும் உள்ளார்ந்த குணங்களாகும். இவற்றை அவரது படைப்புகளிலே நன்கு காண இயலும்.

மேற்படி ஒன்று கூடிலில் முருகையனின் கட்டுரைகள் பற்றி பேராசிரியர் அ. சண்முகதாசும் கவிதைகள்

தொடர்ச்சி 11ம் பக்கம்

## தோழர் நவம்.........

8ம் பக்க தொடர்ச்சி

8.தத்துவ அடிப்படையாலும் கொள்கை வகுத்து முன்னெடுப்பதிலும் நடைமுறைப் போராட்டங்களாலும் அன்றாட வாழ்வியல் முறைமைகளாலும் மாக்சிச லெனினிச வாதிகள் ஒரே உலைக்களத்தில் வார்க்கப்பட்ட புதிய வார்ப்புகளாகி ஒரே மொழியில் பேசுபவர்களாகிக் கொள்ளல் வேண்டும்.

9.மக்களே மக்கள் மட்டுமே வரலாற்றின் உந்து சக்தி என்ற மாக்சிசத்தின் சாராம்ச உண்மையைப் புரிந்து மக்கள் மத்தியில் மக்களுக்காக சேவையாற்றி சமூக மாற்றத்திற்கான புரட்சிக்கு மக்களைத் தயார்படுத்துவதே மாக்சிச லெனினிசவாதிகளின் அடிப்படைக் கடமையாகும்.

10. பூரணபொருள் முதல் வாதிகள் அச்சமற்றவர்கள். மனச்சாட்சி ஒன்றுக்கே மாக்சிச லெனினிசவாதிகள் அஞ்சுபவர்கள் எனத் தோழர் மாஓ சேதுங் முன்மொழிந்து செயலாற்றியவர். அவ்வாறே மாக்சிச லெனினிச வாதிகள் தத்தமது ஒவ்வொரு சொல்லாலும் செயலாலும் கட்சிக்கும் மக்களுக்கும் பதில் சொல்ல வேண்டியவர்கள் என்பதை தெளிவுடனும் உறுதியுடனும் தோழர் மாஓ முன்வைத்தவர். இவற்றை நமது சிந்தனையில் செயலில் உள்வாங்கி செயற்படுவது அவசியமும் இன்றைய தேவையுமாகும்.

தோழர் நவம் மேற்கூறியவைகள் உள்ளடங்கிய மாக்சிச லெனினிச வழி நின்று சொல்லாலும் செயலாலும் நேர்மை உறுதி நம்பிக்கை ஆகியவை மூலம் செயற்பட்டு வந்த உன்னதமான தோழராவார். அதே வேளை அவர் தவறுகள் குறைபாடுகளுக்கு அப்பாற்பட்ட ஒருவரும் அல்லர். அக நிலைப்பட்டதும் அதிதீவிர முனைப்புக் கொண்டதுமான முடிவுகளை முன்வைக்கவும் நடைமுறைப்படுத்தவும் முற்பட்ட சந்தர்ப்பங்கள் ஏற்பட்டதுமுண்டு. ஆனால் கூட்டான விவாதங்களும் நடைமுறை அனுபவங்களும் பட்டறிவுகளும் அத்தகைய குறைபாடுகள் தவறுகள் சுயவிமர்சன ரீதியாக அவரை ஏற்றுக் கொள்ள வைத்தன. விமர்சனங்களை ஏற்றுக் கொள்ளவும் சுயவிமர்சனம் செய்து கொள்ளவும் அவர் என்றும் தயங்கியதில்லை. இதுவே மாக்சிச லெனினிசவாதிகளினது வெற்றிகளின் அடிப்படையுமாகும். எவற்றை தோழர் நவம் முன்வைத்தாலும் அவை கட்சியினதும் பரந்து பட்ட ஒடுக்கப்படும் மக்களினதும் தேவைகள் நன்மைகளிலிருந்தே முன்வைப்பது அவரது மிகச் சிறந்த மாக்சிச லெனினிசப் பண்பாகும். இதனை நமது இளம் தோழர்கள் உள்வாங்கிக் கொள்ளல் வேண்டும்.

அத்தகைய தோழர் நவத்தின் நினைவுகளை அவரது முதலாண்டு நினைவின் போது மீட்கும் போது நாம் எம்முன்னே விரிந்து கிடக்கும். மாக்சிச லெனினிசவாதிகளுக்குரிய வரலாற்றுக்கடமைகளை உறுதியுடனும் நம்பிக்கையுடனும் எவ்வித தயக்கமோ பின்னடிப்போ சோம்பலோ இன்றி முன்னெடுத்துச் செல்வதே அவருக்குரிய பெறுமதி யான நினைவு கூரலாகும்.

# குத்துக் கரணங்கள்

பட்டணத்தடிகள்

## புல்லுக்கும் பொசியும் சுனாமி

'சந்தனம் மெத்தினால் எங்கோ பூசு' என்று ஒரு ஊர் மொழி வழக்கு உண்டு. அது போல் தான் ஆகியிருக்கிறது சுனாமிக்கு என வந்து சேர்ந்த நிவாரணங்களின் கதி.

சுனாமி அனர்த்தம் நிகழ்ந்து ஒன்பது மாதங்கள் கடந்த நிலையில் உண்மையில் பாதிக்கப்பட்ட மக்கள் பொருளாதார, உளவியல், சமூக ரீதியாக புனரமைக்கப்படாத நிலை இன்னமும் நீடிக்கின்றது. இந்த இழி நிலைக்கு ஆட்சி அதிகாரம், கட்சி அரசியல், இன, மொழி, சமய, பிரதேச பாகுபாடு என்பன காரணமாக இருப்பதுதான் வேதனையான விடயம்.

அதைவிட வெளிநாட்டில் இருந்து கிடைத்த நிவாரணப் பொருட்கள் சம்பந்தமான ஒரு விசாரனை செய்வதே இங்கு நோக்கம் ஆகின்றது. சுனாமி விபத்து நடந்த நாளில் இருந்து கப்பல் கப்பலாக, ஆகாய விமானங்கள் மூலமாக உடனடித் தேவைக்கான உணவுகள், உலர் உணவுகள் எல்லாம் வந்திறங்கின. கூடவே இராணுவ தளபாடங்கள், இயந்திர உபகரணங்கள், உடு பிடவை துணிவகைகள், கட்டிட நிர்மாணப் பொருட்கள், ஆள் அணி, அன்பளிப்பு பொருட்கள் எல்லாம் வந்து இறங்கின.

அவற்றை சரியான சுங்க முறை மூலம் பரிசீலனை செய்து உடனடியாக நாட்டின் உள்ளே எடுத்துச் செல்வதற்கு தயாரான நிலையில் அரச இயந்திரம் இருக்கவில்லை. அந்தப் பொருட்கள் எல்லாம் களஞ்சிய அறைகளில் இடப்பட்டு ஆமை வேகத்தில் பொருட்கள் விநியோகத்திற்காக வெளிக் கொண்டு செல்லப்பட்டன. அந்த இடத்திலேயே பழுதான உணவு வகைகள், காலாவதியான உணவுப் பொருட்கள் என கசமுசாக்கள் வெளியாகின. உடனடி நுகர்வுக்காக அனுப்பப்பட்ட பொருட்களை நாட் பல கடந்து கையில் எடுத்தால் அது காலாவதியானதாக இருப்பதில் வியப்பெதுவும் இல்லையே. இன்னும் ஏனைய பொருட்கள் உண்மையாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு எத்தனை சத விகிதம் சென்றடைந்தன என்பதும் தர்மக் கடவுளுக்கே வெளிச்சம்.

இங்கு நாங்கள் மருத்துவத்துறைக்கென வந்த நன்கொடைகளை நிவாரணங்களை வேறாகப் பார்க்க வேண்டும்.இதில் மருந்துப் பொருட்கள், மருத்துவ உபகரணங்கள், பரிசோதனை இயந்திரங்கள், நோயாளிகளின் பயன் பாட்டிற்கான துணிவகைகள், இன்னும் இலத்திரனியல் உபகரணங்கள்,...என்று பல்வேறு விதமான பொருட்கள் கொண்டு வரப்பட்டிருந்தன.

அவற்றை சுகாதார அமைச்சின் மூலமே விநியோகிக்க முடியும் என்ற தீர்மானத்தின் பேரில் சுகாதார அமைச்சின் மருந்துக் களஞ்சியங்களில் சேகரிக்கப்பட்டன.

இந்த நேரத்தில் சுகாதார அமைச்சுக்கு ஒரு யோசனை உண்டாயிற்று. வருடாந்தம் நாட்டில் உள்ள வைத்திய சாலைகளுக்கான மருந்துகளுக்கும் ஏனைய உபகரணங்களுக்கும் பலகோடி ரூபாய்கள் செலவழிக்கப்படுகின்றன. அந்த செலவில் மூன்றில் ஒரு பங்கை என்றாலும் இந்த சுனாமி நிவாரணத்தின் மூலம் சமாளித்து விடலாம் என்பதுதான் அது.

உடனடியாக சந்தர்ப்ப நிர்ப்பந்தம் கருதி சுனாமியால் பாதிப்புற்ற பிரதேசங்களுக்கு அனுப்பப்பட்ட மருந்துகள், உபகரணங்கள் தவிர எஞ்சியவை புதிய யோசனைக்கு உட்படுத்தப்பட்டன. களஞ்சிய அறைகளில் குவிந்து கிடந்த நிவாரணப் பொருட்களை பிரித்து அடுக்கி பட்டியல்களில் அடக்க ஆளணி போதாது எனவே அனைத்து வைத்தியசாலைக்களுக்கும் அழைப்பு அனுப்பப்பட்டது. "நன்கொடையாகக் கிடைத்த பொருட்கள் உள்ளன வந்து பெற்றுக் கொள்ளவும்" என்பதாக அந்த அழைப்பு வெளியானது. வைத்திய சாலை களில் இருந்து விசேட குழுக்கள் சுகாதார அமைச்சின் மருந்துக் களஞ்சிய சாலைக்குச் சென்றன.

அறை திறந்து விடப்பட்டு "உங்களுக்கு வேண்டியதை எடுங்கள்" என்று கூறி அவர்கள் தேர்ந்து எடுத்த பொருட்களுக்கு பட்டியல் இடப்பட்டு விநியோகச் சிட்டைகளும் தயாரிக்கப்பட்டன. இதில் மருந்து வகைகள் உட்பட வைத்திய சாலைகளுக்குத் தேவையான இதர விடயங்களும் அடங்கும். (அவை வைத்தியசாலைகளுக்குப் போய்ச் சேர்வதற்கிடையில் அரையும் குறையுமாக மாயமான கதை வேறு உண்டு) வைத்திய சாலைக்கு உள்ளே கொண்டு வரப்பட்ட பொருட்கள் சாதாரண வைத்திய சாலை நடைமுறைக்கு உட்படுத்தப்பட்டு நோயாளர் தம் நலன் நோக்கி உரிய பிரிவுகளுக்கு விநியோகிக்க ஏற்பாடுகள் ஆனது.

இங்குதான் பாரிய பிரச்சனை எழுகின்றது?

*சுனாமியின் பெயரால் கொண்டு வரப்பட்டு பகிரப்படும் மருந்துகள், உபகரணங்கள் இலங்கையின் தரக்கட்டுப்பாட்டுக்கு உட்பட்டவையா?

அந்தக் கேள்விக்கான பதில் 'இல்லை' என்பது தெரிந்தும் பல்வேறுமட்டங்களில் அடக்கி வாசிக்கப்பட்டது. இலங்கையில் தேசிய மருந்துக் கட்டுப்பாட்டு அதிகார சபை ஒன்று உள்ளது. அதன் கண்களைக் கட்டிவிட்டு இந்த மாய மருந்துகள், உபரணங்கள் எமது மக்களின் மீதான பாவனைக்கு உட்படுத்தப்பட்டது.

அண்மையில் டி சொய்சா மருத்துவ மனையில் 8 தாய்மார் மெனிஞ்சைற்றிஸ் எனும் மூளை- நரம்புத் தொற்றுக்கு உள்ளாகுவதற்கு இந்த ஓட்டையே காரணமாகியது.

அதில் இரண்டு தாய்மார் இறந்த நிலையிலும் அக்கறைப்படாத அதிகாரபீட எண்மரில் அந்த ஒரு வைத்திய அம்மணியும் ஒருவரானதும் சுரணை கொண்டு எழுந்தது.

பின்பு யார் யாரோ எல்லாம் வந்து, போய் ஆலோசனை, விசாரணை எல்லாம் நடத்துவதாக கூறி, அந்த ஊசிகள் (வாபஸ்) திரும்பப் பெறப்பட்டதுடன் சமாச்சாரம் சப்தமின்றிப் போனது ஒரு விடயம்

இன்னும் மருந்துகள், குளிசைகள் (உதாரணமாக பச்சை வண்ண நிறத்தில் பரசிற்ற மோல்) சில வைத்தியசாலைகளில் நோயாளிகளிகளுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளன.

இங்கு எழுகின்ற உபகேள்விகள் இவைதான்.

1.சுனாமி நிவாரண மருந்துகள் சும்மா கிடைத்தவை என்பதால் தரக்கட்டுப்பாடு இல்லாது சகல வைத்திய சாலைக்களுக்கும் வழங்கியது சரியா?

2.மேலாதிக்க நன்கொடையாளர்கள் கண்டு பிடித்த புதிய மருந்துகளை அல்லது கதிர்வீச்சுக்கு உட்பட்ட மருந்துகளை, தரம் குறைந்த மருந்துகளை பரீட்சித்துப்பார்க்க எமது நாட்டு மக்கள் தானா கிடைத்தார்கள். அந்த பரிசோதனையின் பெறுபேறுகளை அவதானிக்கத்தான் ஆள் அம்பு அணி சேனையோடு இங்குவந்து தங்கியிருக்கும் உதவி வழங்கும் நாடுகளின் சுனாமி நிவாரணப் பணியாளர்கள் காத்திருக்கின்றனரா? ஏன் இந்த அநியாயம்? சுகம் வரும் ஆள் தப்பாது என்பதை நடைமுறைப்படுத்துகிறார்களா?

www.tamilarangam.net நன்றி - நூலகத்திட்டம்



# அமெரிக்க சமஷ்டியும் கறுப்பின மக்களும்




அண்மையில் அமெரிக்காவில் கற்றினா எனப் பெயரிடப்பட்ட சூறாவளி தாக்கியதில் கறுப்பின மக்கள் வாழும் பகுதிகளே பெரும் அழிவுக்குள்ளாகின, நீயூ ஓர்லின்ஸ் அணுக்குண்டுத் தாக்குதலுக்கு இலக்கான பகுதிபோல் காட்சியளிப்பதாயும்– அமெரிக்க சரித்திரத்தில் இந்த மாதிரி அழிவு இதற்கு முன் நிகழ்ந்ததில்லையெனவும் அறிவிக்கப்படுகிறது.

தமிழில் நாம் காற்று, கடுங்காற்று, புயல் அதையடுத்து சூறாவளியென்ற பதங்களைக் காண்கிறோம். சூறாவளியின் வேகத்தை வைத்து வெவ்வேறு பெயர்கொண்டு அழைக்கப்படுகிறது. நீயூ ஒர்லின்ஸ், மிசுசிப்பி போன்ற இடங்களைத் தாக்கிய சூறாவளிக்கு கற்றீனா என்று அழைத்தனர். இந்த மோசமான சூறாவாளி சம்பந்தமான எச்சரிக்கை இரண்டு தினங்களுக்கு முன்பே அறிவிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் இருபத்திநான்கு மணித்தியாலமளவில் இருக்கும் போதே மக்களை சம்பந்தப்பட்ட பகுதிகளிலிருந்து வெளியேறுமாறு கேட்கப்பட்ட போதும் மக்களை வெளியேற்றும் நடவடிக்கைகளில் மத்திய அரசோ, சமஷ்டி அரசோ ஊள்ளுராட்சி அமைப்புக்களோ எந்தவித நடவடிக்கையையும் செய்யவில்லை.

வாகன வசதியுடையவர்கள் உடனே வெளியேறினர். ஓரளவு வசதியுடையவர்கள் பஸ்களிலும் வேறு வாகனங்களிலும் ஏறிச் சென்று தப்பித்துக்கொண்டனர். ஆனால் மிகவும் மோசமான நிலையில் வாழ்ந்த கறுப்பின மக்கள் வருவது வரட்டும் என்று தத்தம் இடங்களில் இருந்துவிட்டனர். உலகிற்கெல்லாம் ஜனநாயகத்தைப்பற்றியும் மனித உரிமை பற்றியும் பேசும் புஷ் நிர்வாகம் பாதிப்புக்குள்ளான கறுப்பர்கள் வாழும் இடங்களுக்கு மீட்பு வேலைக்கு ஆட்களை அனுப்புவதற்கு ஆறு நாட்கள் பிடித்தது என்பது உலக மக்களை மேலும் சிந்திக்க வைத்துள்ளது.

கடந்த இரண்டு ஜனாதிபதித் தேர்தல்களிலும் பாதிக்கப்பட்ட பகுதி மக்கள் புஷ்சிற்கு தமது வாக்குகளைப் போடவில்லையென்பதற்காக புஷ் பழிவாங்கி கொண்டாரா?

உலகில் மிக உன்னத நிலையில் உள்ள மிகவும் செல்வந்த நாடு, ஜனநாயகத்தின் உறைவிடம் என்றெல்லாம் போற்றிப் புகழப்படும் அமெரிக்காவில் சமஷ்டி முறையிலான அரசியலமைப்பு இருக்கிறது. சமஷ்டி அமைப்பு மூலம் சகல இனங்களின் சமத்துவத்தைப் பேணலாமெனவும் கூறப்பட்ட போதும் கறுப்பின மக்கள் வாழும் பகுதி பெரும் அழிவுக்குட்பட்ட போது, அழிவு ஏற்படப்போகிறது என முன்கூட்டியே தெரிந்திருந்தும் ஆறு நாட்களுக்குப் பின்பே உலகின் கண்டனங்களின் மத்தியிலேயே புஷ் நிர்வாகம் மீட்பு நடவடிக்கையை ஆரம்பித்தது.

நீயூ ஒர்லியன்ஸ் மக்கள் அவர்களுக்குத் தேவையான உதவிகளைப் பெறவில்லையென்பதை புஷ் ஏற்றுக் கொண்டுள்ளார். மீட்புப்பணிக்கு நியூ ஒர்லியன்சுக்கு அனுப்பப்பட்ட படையினர் கண் மூடித்தனமாக சுட்டதில் அப்பாவி பொதுமக்கள் பலர் இறந்துள்ளனர்.

வெள்ளத்தில் மிதந்த சடலங்கள் பலவற்றில் துப்பாக்கி சூட்டுக்காயங்கள் காணப்பட்டன எனப் 18வயதுடைய மைக்கல் டேவிஸ் என்ற இளைஞன் தெரிவித்தான். தனது பகுதியில் பத்து அடி வெள்ளம் நிற்பதால் அதிலிருந்து லூசியானாவில் லாபாயெற் என்ற திடற்பகுதிக்கு தப்பிவந்ததை அவன் விபரித்தான்.

நியூ ஒர்லியன்ஸ் மாநாட்டு மையத்தில் ஐந்து குழந்தைகளுடன் நின்ற வைவனெற் கிறேஸ்- ஜோர்டன் கருத்து தெரிவிக்கையில் "அரச உத்தியோகத்தர்கள் இங்கு மிருகங்கள் போல் விளங்குகின்றனர். இரண்டு வேளை உணவையே உண்கிறோம். இங்கு மருந்துகள் இல்லை. ஆயிரக்கணக்கானோர் வீதியில் தட்டுத் தடுமாறுகின்றனர். இது பிழையானது. இதுதான் ஐக்கிய அமெரிக்கா"என்று கூறினார்.

ஏராளமான மக்கள் வீடுகளுக்குள் அடைந்து கிடக்கின்றனர். அவர்களின் வீட்டைச் சுற்றி கழிவு நீர் தேங்கிநிற்கிறது. சுறா மீன்களும், முதலைகளும் ஆங்காங்கே நீந்தித் திரிவதைக் காணக் கூடியதாயிருக்கிறது. இறந்தவர்களின் எண்ணிக்கை பல ஆயிரக்கணக்கில் இருக்குமெனக் கூறப்படுகின்றது. சகல சடலங்களையும் மீட்க முடியுமா என்ற சந்தேகம் நிலவுகிறது. ஏனெனில் சுறாக்களும், முதலைகளும் பல உடல்களை இழுத்துச் செல்கின்றன.

நியூ ஓர்லியன்ஸ் பகுதியில் உள்ள வெள்ளத்தை அப்புறப்படுத்த 36 முதல் 80 நாட்கள் தேவையென அமெரிக்க இராணுவ பொறியியலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இயற்கை அழிவு ஒன்று ஏற்படும் போது உடனடி நடவடிக்கையில் ஈடுபடத்தயார் நிலையில் தேசிய காவற்படையினர் இருப்பார்கள் என்று கூறப்பட்டபோதும் மிசிசிப்பியின் தேசியகாவற்படையினரில் 4000 பேர் மத்திய ஈராக்கில் உள்ளனர். லூசியானாவைச் சேர்ந்த 3000 காவற்படையினர் பக்தாத்தில் உள்ளனர். எந்தச் சமயத்திலும் இயற்கை அழிவை எதிர்நோக்கும் கறுப்பின மக்கள் வாழும் பகுதியிலிருந்து காவற்படையை அப்புறப்படுத்தியதில் ஒரு அரசியற் பின்னணியும் இருக்கிறது. கறுப்பர்கள் புஷ்சிற்கு எதிராகவே செயற்பட்டு வந்தனர். அவருக்கு எதிராகவே வாக்களித்துள்ளனர் என்பதே அதுவாகும். உலகிற்கு ஜனநாயகம் போதிக்கும் அமெரிக்காவில் உண்மையில் நிலவுவது ஏகபோக முதலாளிய அமைப்பே. அங்கு இருக்கும் சமஷ்டி அமைப்பால் கறுப்பின மக்கள் இரண்டாந்தரப் பிரஜைகளாகவே கணிக்கப்படுகின்றனர்.

ஒரு நாட்டில் அரச அதிகாரம் யார் கையில் இருக்கிறது என்பதிலேயே மக்கள் நலனா அல்லது சிறிய சுரண்டும் கும்பலின் நலனா என்பதைத் தீர்மானிக்க இயலுகிறது.

கியூபாவிலும் பல மோசமான சூறாவளிகள் தாக்கியுள்ளன. அப்போதெல்லாம் கியூபா அரசு தக்க நடவடிக்கை எடுத்து மக்கள் எதிர் நோக்கிய துன்பங்களைப் பகிர்ந்து கொண்டு மக்களின் நலன்களை கவனித்தது. உலகில் பெரிய பூகம்பம் ஒன்றை சீனா எதிர்நோக்கிய போது தலைவர் மாவோ கண்ணீர் விட்டு அழுதார். அன்றைய சீனக்கம்யூனிஸ்ட் கட்சி அரசு, மக்கள் விடுதலைப் படை மற்றும் அமைப்புகள் பொதுமக்கள் உடனடியாகச் செயற்பட்டதைக் அங்கே கண்டோம். சோஷலிச அமைப்பில்தான் மக்கள் நலன் பேணப்படுகிறது, இயற்றை அழிவுகள் உரிய முறையில் முகம்கொடுக்கப்படுகிறது என்பது நோக்குதற்குரியதாகும். ஆனால் உலகம் பூராவும் பிணம் தின்று வரும் அமெரிக்காவின் புஷ் நிர்வாகம் சொந்த நாட்டில் பிணங்கள் வீழ்ந்ததைப் பற்றி அக்கறையே கொள்ளவில்லை.

# பாகிஸ்தான் அதிபர் முசாராவ்வும் பெண்களின் உரிமையும்

அண்மையில் பேட்டியொன்றின் போது அமெரிக்காவின் செல்லப் பிள்ளையான பாகிஸ்தான் அதிபர் முசாராவ் பாகிஸ்தானில் பெண்கள் வெளிநாடுகளுக்குச் சுலபமாக விசா எடுக்கலாம் என்ற காரணத்திற்காகவே தாங்கள் கற்பழிக்கப்பட்டதாகப் புகார் செய்கின்றார்கள் எனத் தெரிவித்ததைத் தொடர்ந்து பாகிஸ்தானில் பெண்கள் அமைப்புக்கள் தலைநகரில் ஆர்ப்பாட்டம் செய்து அதிபரின் கூற்றை வன்மையாகக் கண்டித்தனர்.

பலரால் கற்பழிக்கப்பட்ட பெண் ஒருவரை நாட்டைவிட்டு வெளியேறப் படாதென அதிபர் உத்தரவு பிறப்பித்திருந்ததும் இங்கு கவனிக்கத்தக்கது, சம்பந்தப்பட்ட பெண் வெளிநாடு சென்றால் பாகிஸ்தானுக்கு அபகீர்த்தியை ஏற்படுத்துமெனவே அந்த தடை உத்தரவைப் பிறப்பித்திருந்தார். பாகிஸ்தானில் 2002ம் ஆண்டில் பதின்மூன்று பேர் பாலியல் வல்லுறவுக்குட்பட்டமை. டாக்டர் ஷாசியா மீதான வன்முறையென்பன அங்குமிங்குமான சம்பவங்கள் எனவும் முசாராவ் தெரிவித்தார் என்பது கவனிக்கத்தக்கது. அண்மைக் காலங்களில் பாகிஸ்தானின் கிராமப் புறங்களில் சுமார் நாலாயிரம் பெண்கள் கொல்லப்பட்டனர். குடும்பக் கௌரவத்தைப் பாதுகாப்பதற்காகவே அவர்கள் மதத்தலைவர்களின் தீர்ப்பின்படியே கொல்லப்பட்டனர். குலநீதி என்ற போர்வையில் ஏராளமான பெண்கள் கற்பழிக்கப்பட்டும் நச்சுத் திராவகம் ஊற்றப்பட்டும் தண்டிக்கப்பட்டுள்ளனர்.

இந்தியாவில் அண்மையில் மாமனார் மருமகளை பாலியல் வல்லுறவுக் குட்படுத்தியதைத் தொடர்ந்து அப்பெண்ணிற்கும் கணவனுக்கும் திருமணப் பந்தம் அற்றுப் போய்விட்டதென்றும் அப்பெண்ணை மாமனாருடன் வாழ வேண்டுமெனவும் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. இந்தத் தீர்ப்பு இஸ்லாமிய மதத்தின் பேரால் வழங்கப்பட்டுள்ளது. இந்தத் தீர்ப்பையடுத்து மதத்தலைவர்களிடையே பெரிய வாதப் பிரதிவாதம் இடம் பெற்று வருகிறது. பாகிஸ்தான் இந்தியா உள்ளிட்ட தென்னாசிய நாடுகளில் இந்து மதம் இஸ்லாம் மதம் மற்றும் மதங்களின் பெயரால் பெண்கள் அடிக்கிஒடுக்கப்படும் நிலை நீடித்து வருவதன் ஒரு உதாரணமே மேற் கூறிய சம்பவமாகும். நிலவுடமையும் அதனைப் பாதுகாத்து வரும் முதலாளித்துவமும் அழிக்கப் படாத வரை பெண்கள் இது போன்ற பன்முக வன்முறைகளுக்கும் வல்லுறவுகளுக்கும் பலியாகியே வருவர். இதுபற்றி முஷ்ராவுக்கு மட்டுமல்ல சோனியா மன்மோகன் சிங்குக்கும் கவலை இருக்கமாட்டாது.

# ஈராக் ஆக்கிரமிப்பை எதிர்த்த ஒரு அமெரிக்கத் தாயின் போராட்டம்




அமெரிக்க ஏகாதிபத்திய ஆளும் வர்க்க நிர்வாகத்தின் தலைவன் ஜோர்ச் டபிள்யூ புஷ் பேரழிவு ஆயுதங்கள் இருப்பதாகப் பொய்க்காரணங்கள் கூறி ஈராக் நாட்டின் மீது ஆக்கிரமிப்புப் போர் தொடுத்து அங்கு ஒரு லட்சம் முப்பதினாயிரம் அமெரிக்க படைகளை இறக்கி ஈராக் மக்களைக் கொன்று குவித்து வருகிறான். ஆனால் ஈராக்கியப் போராளிகளின் நாளாந்தத் தாக்குதல்களினால் அமெரிக்கப் படையினர் கொல்லப்பட்டு வருகின்றனர். இதுவரை ஆயிரத்து எண்ணூறுக்கு மேற்பட்ட அமெரிக்கப்படையினர் ஈராக்கில் உயிர் இழந்துள்ளனர். இவ்வாறு கொல்லப்பட்டவர்களில் ஒருவர் தான் <u>கேசி ஷீஹறன்</u> என்ற இளம் ராணுவ சிப்பாய். கடந்த 2004 ஏப்பிரல் 4ம் திகதி ஈராக்கிய போராளிகள் நடாத்திய குண்டுத் தாக்குதலில் கொல்லப்பட்டார். அந்த அமெரிக்க இளைஞனின் இறப்பு அவரது குடும்பத்தை சோகத்தில் ஆழ்த்தியது. தனது மகனை ஈராக்கிய ஆக்கிரமிப்புப் போரில் இறக்கி சாகடித்த அமெரிக்க நிர்வாகத்தையும் அதன் தலைவனான புஷ்சையும் நோக்கி கேசி ஷீஹறனின் தாயார் கோபக்கனலை வீசத் தொடங்கினார். தனது மகனுக்காக மட்டுமன்றி அவனைப் போன்ற அமெரிக்க இளைஞர்கள் ஆக்கிரமிப்புப் போரில் கொல்லப்படுவதை எதிர்த்து அந்த தாய் தன்னம் தனியே ஒரு போர் எதிர்ப்புப் போராட்டத்தையே ஆரம்பித்தார். "எனக்கு அந்த உண்மை தெரிய வேண்டும். ஈராக் மீது ஏன் இந்தப் போர்" என்பதே அவரது போர் எதிர்ப்பு கோப முழக் கமாகும். அமெரிக்க அதிபர் புஷ் தனது போர் வெறிக்களைப்பில் இருந்து ஓய்வெடுப்பதற்காக டெக்சாஸ் மாகாணத்தின் கிரா/ போர் டிலுள்ள தனது கால்நடைப் பண்ணை மாளிகையில் தங்கியிருந்தார். பொதுமக்கள் தமது கோரிக்கைகளுடன் தன்னைச் சந்திக்கலாம் என்றும் கூறிக் கொண்டார்.

இந்நிலையில் தனது மகனை ஈராக்கிய ஆக்கிரமிப்புப் போரில் பறிகொடுத்த அந்த அமெரிக்கத் தாயான சின்டி ஷீஹறன் கடந்த ஆகஸ்ட் 4ம் திகதி அதிபர் புஷ்சைச் சந்திக்க அவர் தங்கியிருந்த கால்நடைப் பண்ணைக்குச் சென்றார். ஆனால் திமிரும் வெறியும் பிடித்த அதிபர் புஷ் அந்த தாயை சந்திக்கவோ அவருக்கு ஆறுதல் வார்த்தைகள் கூறவோ மறுத்து விட்டார்.

ஆனாலும் அந்த தாய் எவ்வகையிலும் பின்வாங்கவில்லை. "ஈராக் மீது ஏன் இந்த ஆக்கிரமிப்புப் போர்? எனக்கு அந்த உண்மை தெரிய வேண்டும்" என எழுதப்பட்ட முழக்க அட்டையைத் தாங்கியபடி இரவு பகலாக அந்தப் பண்ணை மாளிகையின் முன் நின்றார். இதனைக் கேள்வியுற்ற மக்கள் அங்கு திரண்டு வந்து போர் எதிர்ப்பு ஆதரவு தெரிவித்தனர். இதனால் மிரண்ட புஷ் தனது உதவியாளர்களை அனுப்பி அந்தத் தாயின் பேராட்டத்தைக் கை விடச்செய்ய முயன்றார். ஆனால் அது வெற்றி பெறவில்லை.

சின்டி ஷீஹறன் என்ற தாய் தொடர்ந்தும் தமது ஈராக் மீதான போர் எதிர்ப்பு இயக்கத்தை முன்னெடுத்து வருகிறார். அதற்கு மக்கள் ஆதரவு தெரிவித்தும் வருகின்றனர். புஷ்ஷின் பண்ணை மாளிகையின் முன்பாக அந்த அமெரிக்கத் தாய் போராட்டம் நடாத்தி வந்த இடம் இப்போது ஈராக்கில் கொல்லப்பட்ட கேசி ஷீஹறன் என்ற அந்த இளைஞனின் பெயரிலான போர் எதிர்ப்புத்திடல் எனப் பெயரிடப்பட்டுள்ளது. இத் திடலிலே அடிக்கடி ஈராக்கில் கொல்லப்படும் அமெரிக்க ராணுவத்தினரின் தாய் தந்தையர்கள் உறவினர்களால் மற்றும் மக்களால் நினைவுக் கூட்டங்களும் போர் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களும் நடாத்தப்படுகின்றன.

அன்று வியட்நாமில் அமெரிக்க ஏகாதிபத்தியம் ஆக்கிரமிப்புப் போர் நடாத்திய போது அமெரிக்க மக்கள் அதனை எதிர்த்து பல்வேறு இயக்கங்களை நடாத்தினர். அவ் வாறே இன்று ஈராக் மீதான ஆக்கிரமிப்புப் போரை நிறுத்து, அங்கிருந்து அமெரிக்கப்படைகளை வாபஸ் பெறு என அமெரிக்க மக்கள் ஆர்ப்பரிக்க ஆரம்பித்து விட்டனர். அவர்களின் அடையாளச் சின்னமாவே சின்டி ஷீஹறன் அம்மையார் விளங்குகிறார். கடந்த ஆகஸ்ட் 21ம் திகதியன்று இரவு புஷ்சின் பண்ணை வீட்டுக்கு எதிரே அமைந்துள்ள கேசி திடலில் அன்றைய வியட்நாம் போர் எதிர்ப்பு இயக்கத்தின் மூலம் பிரபலமான நாட்டுப்புறப் பாடகி ஜோன் பெய்ஸ் அம்மையார் போர் எதிர்ப்பு இசை நிகழ்ச்சியை பெரும் திரளான மக்கள் முன்னிலையில் நடாத்தி னார். அதன் மூலம் ஈராக் போர் எதிர்ப்பு இயக்கத்திற்கு வலுவூட்டி மக்கள் ஆதரவைத் திரட்டினார்.

அமெரிக்க ஏகாதிபத்தியம் தனது சொந்த மக்களால் வெறுக்கப்படவும் எதிர்க்கப்படவும் கூடிய சூழல் தோன்றியுள்ளது. நீதி நியாயம் மனச்சாட்சி கொண்ட நேர்மையான ஒவ் வொரு சாதாரண அமெரிக்க மக்களும் வெள்ளை மாளிகையினதும் புஷ் நிரிவாகத்தினதும் உலக மேலாதிக்க வெறியை எதிர்த்தே தீருவர் என்பது உறுதியானதாகும்.

www.tamilarangam.net நன்றி - நூலகத்திட்டம்



# பேராசிரியர் சிவத்தம்பி வழங்கியுள்ள வாக்குமூலம்

## அவரது உண்மை உருவத்தை வெளிப்படுத்துகிறது

**இலக்கியமும் வாழ்க்கையும், கார்த்திகேசு சிவத்தம்பி (நேர்கண்டவர்: தி.ஞானசேகரன்), தமிழினி, லண்டன் SW17 9NE, ஐக்கியராச்சியம், 2005 ஒகஸ்ற், ப.160, விலை ரூ. 250.00**

'ஞானம்' மாசிகையின் பதினைந்து இதழ்களிற் தொடராக வந்த நேர்காணல் நூல் வடிவம் பெற்றுள்ளது. தமிழ்ச் சஞ்சிகைகள் பலவற்றில் வருகிற நீண்ட நேர்காணல்கள் கடித மூலம் பெறப்படும் கேள்வி பதில்களாக அமைகின்ற ஒரு நிலையில் ஒரு உண்மையான நேர்காணலாக இது அமைந்தமை வரவேற்கத்தக்கது. எனினும் ஓரிரு இடங்களைத் தவிர்த்தால் இந்த நேர்காணலில் ஒரு உரையாடற் பண்பே இல்லை. இரண்டு மூன்று வரிநீளக் கேள்விக்குப் பல பக்கங்கள் வரை நீளுகிற பதில்கள் ஒரு நேர்காணல் என்ற எண்ணத்தை மறுத்து நிற்கின்றன. சிவத்தம்பி முற்போக்கிலக்கியப் பிரசாரகராக இருந்தவர். கம்யூனிஸ்ற் கட்சி வலதுசாரி (பாராளுமன்றப்) பாதைக்கும் இடதுசாரி (புரட்சிகரப்) பாதைக்குமிடையிலான விவாதத்தின் விளைவாகப் பிளவுண்டபோது பாராளுமன்ற அரசியற் பாதையை நாடிய பிரிவினருடன் ஏறத்தாழ சோவியத் யூனியனின் சரிவு வரையும், ஒரு வேளை அதற்குப்பின்னரும் சேர்ந்து நின்றவர். நாடகத்துறையில் அவரது பங்களிப்பு நீடிக்காவிட்டாலும் 1950களின் பிற்பகுதிகளிலும் 1960களின் முற்பகுதியிலும் வந்த குறிப்பிடத்தக்க நாடகங்கள் சிலவற்றில் அவரது பங்கு முக்கியமானது. ஆய்வாளர் என்ற வகையில் நமது பல்கலைக்கழக வட்டாரங்களில் அவரை யாரும் சிறப்பாகக் குறிப்பிடுவது கிடையாது. திறனாய்வாளர் என்ற முறையில் அவரது பங்களிப்பு மிகவும் சிறியதும் அதிக முக்கியமற்றதும் என்பது என் மதிப்பீடு. எவ்வாறாயினும் கைலாசபதியின் பெயரோடு சேர்த்து அவருடைய பேருக்கும் இலக்கிய வட்டங்களில் ஒரு முக்கியத்துவம் இருந்து வந்துள்ளது. இதற்கு அரசியற் காரணங்கள் இருந்தன. கம்யூனிஸ்ற் கட்சியின் பிளவையடுத்து அதனுடன் தொடர்பு கொண்டிருந்த தமிழ் இலக்கியவாதிகளும் திறனாய்வாளர்களும் வலது கம்யூனிஸ்றுக்களைக் கைவிட்ட நிலையில் அங்கு எஞ்சியிருந்த ஒரே பல்கலைக்கழகத் திறனாய்வாளர் என்பதுடன் 1970 முதல் 77 வரை கம்யூனிஸ்றக ட்சி ஆட்சியில் ஒட்டியிருந்ததால் சிவத்தம்பிக்கு உள்ளூர் அங்கீகாரம் இருந்தது. அவ்வாறே தமிழக திரிபுவாதிகளிடமும் செல்வாக்கு இருந்தது. இன்று இடதுசாரி இயக்கம் இங்கு வலுவிழந்த நிலையில் வலது கம்யூனிஸ்றுக்கள் முதலாளிய ஸ்ரீ.ல.சு.கவுடன் ஐக்கியமாகிய நிலையில் சிவத்தம்பி தமிழ்த் தேசியவாதத்தின் குரலாகித் தனது கடந்தகால அரசி யலை மறுப்பதன் மூலமும் மழுப்புவதன் மூலமும் ஒரு புதிய அடையாளத்தைப் பெற்றுள்ளார். இலங்கையில் பாராளுமன்றப் பாதை புரட்சிகரப் போராட்டப்பாதை எனப்பிளவுபட்ட கம்யூனிஸ்ட் இயக்கத்தில் சிவத்தம்பி பாராளுமன்றப் பாதையின் பக்கம் நின்று வந்ததுடன் அவர் எப்பொழுதும் புரட்சிகர போராட்ட சக்திகளையும் அவர்களது அரசியல் இலக்கிய இயக்கங்களை எதிர்த்தும் அங்கீகரிக்காமலும் இருந்தே வந்துள்ளார். அதே வேளை கைலாசபதி அவ் இயக்கங்களுடனேயே இருந்து வந்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். இதன் காரணமாகவே இடதுசாரி இயக்கத்தின் பழைய எதிரிகளால் சிவத்தம்பி மெச்சப்படுகிறார். இந்தப் பின்னணியில் வைத்து அவரது நேர்காணலை விமர்சிக்க முயலுகிறேன்.

வலது கம்யூனிஸ்றுகளின் துரோகங்களை அறிந்தும் 'உள்ளேயிருந்து' திருத்த முற்பட்டதாகச் சொல்லித் தனது கடந்த காலத்தின் களங்கம் மிகுந்த ஒரு பகுதியைக் கழுவி விடுகிற சிவத்தம்பி, கட்சியின் பிளவின் போது ஏன் வலதுசாரிகளுடன் சென்றாரென்றோ ஏன் எந்த நிலையிலும் தனது மாற்றுக் கருத்துகளை மறைமுகமாகவேனும் தெரிவிக்கவில்லையென்றோ கூறாமல் தவிர்த்துள்ளார். அவரது அரசியலை விளங்க இது முக்கியமானது என்பதை வெறுமனே தமிழ்த் தேசியவாத நோக்கில் அரசியலைப் பார்க்கிற ஞானசேகரனுக்கு இதன் முக்கியத்துவம் விளங்காமலிருக்கலாம். சிவத்தம்பிக்கு விளங்காமலிருக்க முடியாது.

கைலாசபதியுடன் 1972-73 வரை பலமாக இருந்த உறவு கசந்ததற்குக் காரணம் 'சீனப் பிரிவு' என்று தட்டிக்கழிக்கிற சிவத்தம்பி ஏன் அந்த உறவு 1964ல் கட்சி பிளவுபட்ட போது கசக்கவில்லை என்று விளக்கத் தவறுகிறார். கைலாசபதி கருத்து வேற்பாடுகளைத் தனிப்பட்ட பகைமைக்கான காரணமாக்கிய தில்லை. யாழ் வளாகத்தின் தலைவராய் வருவதற்கு சிவத்தம்பி எடுத்த கடும் முயற்சிகளுக்கும் அந்த உறவு கசந்ததிற்கும் தொடர்பு இல்லை என்று அவராற் கூற முடியுமா?

சிவத்தம்பி இடத்துக்கு ஏற்றவிதமாகப் பேசுவதும் தன்னை அடையாளப் படுத்திக் கொள்வதும் கடந்த பத்துப் பதினைந்தாண்டுகளில் மிகவும் தெளிவாகவே எல்லாருக்கும் தெரியவந்துள்ள விடயமாகும். அவரது அரசியல் பார்வையின் ஆழமின்மையை, 1947ல் பருத்தித்துறையில் பொன். கந்தையாவுக்குக் கிடைத்த வாக்குகள் 'கரவெட்டியான்' என்ற காரணத்தாலேயே கிடைத்தன என்பதிலிருந்து அறியலாம்(ப. 27). இது மாதிரியே ரகுநாதனின் 'நிலவிலே பேசுவோம்' கதையைக் குறிப்பிட்டுச் சொல்லும் போது வடமராச்சியில் சாதியத்தை வெளிவெளியாகக் காட்டிக் கொள்ளமாட்டார்கள் என்று விளக்குகிறார். (ப. 40) தீண்டமை ஒழிப்பு வெகுசன இயக்கத்திற்குக் குழிபறிக்கிற காரியங்களில் வலது கம்யூனிஸ்றுக்கள் மும்முரமாக இருந்தனர். அவர்களுக்குத் தங்கள் அரசியல் ஆதரவுத் தளத்தைப் பேணவும் வேண்டும், ஆயுதப் போராட்டத்தை மறுக்கவும் வேண்டும் என்ற அவலம். சிவத்தம்பி போன்றவர்கள் அப்போராட்டம் பற்றி நீண்ட காலமாக உள்ளார்ந்த வெறுப்புடன் மௌனங் காத்தார்கள். எனவே நேர்காணலில் விடுபட்டுப்போன முக்கியமான ஒரு சமூக அரசியல் நிகழ்வாக அது இருப்பதில் வியப்புக் கிடமில்லலை.

யாழ்ப்பாணத்தில் 1963ம் ஆண்டு முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் உறுப்பினர்கள் சாகித்திய மண்டலக் கூட்டத்தில் முட்டையடித்ததை இப்போது அவர் வன்மையாகக் கண்டிக்கிறார் (ப. 90). இதை ஏன் அவர் அப்போதே விமர்சிக்கவில்லை? இது தவறென்றால் ஏன் அப்போதே எவரும் மன்னிப்புக் கோரவில்லை? அந்த நிகழ்வுக்குப் பிறகு முற்போக்கு எழுத்தாளர் சங்கம் எழும்பவில்லை என்கிற சிவத்தம்பி (ப. 92) அக்காலத்தையொட்டியே கட்சி பிளவுபட்டது என்பதும் வலது கம்யூனிஸ்ட்டுக்களும்படு சராசரியான எழுத்தாளர்களுமான சிலர் மு.போ.எ.ச பதவிகளைப் பிடித்து வைத்திருந்ததாலுமே இடது கம்யூனிஸ்ற்றுக்கட்கு அனுதாபமாக இருந்த பெருவாரியான முக்கியமான படைப்பாளிகள் ஒதுங்கிச் செல்லத் தொடங்கி விட்டனர் என்பதும் தெரியாத விடயங்களல்ல. இதில் மிகவும் கோழைத்தனமான விடயம் என்னவென்றால் முட்டையெறிந்தவர்கள் யார் என்பதை இப்போது சொல்லுவதன் மூலம் தன்னை நிரபராதி என்று காட்ட முற்படுவது தான். அது போக, அவர் சொல்லு




வது போல கம்யூனிஸ்ற்றுக்களிடையே அன்னியோன்னியமான உறவு இல்லாததால் எழுச்சியில் வீழ்ச்சி ஏற்பட்டது என்பதை ஏற்க இயலாது. (ப. 83). உண்மையில் எழுச்சிக்கு காரணமாக அமைந்தது இந்தப் பிளவோடு ஏற்பட்ட அரசியல் தெளிவுதான்.

சிவத்தம்பி எந்த இடத்துக்கு எது தேவையோ அதைத்தான் பேசுவார் என்று (ப.156) தன்னைப் பற்றிச்

> **தமிழ் இலக்கிய உலகில் சிவத்தம்பிக்கு ஒரு இடத்தைப் பெற்றுக் கொடுத்தது இடதுசாரி இயக்கம். அதன் மூலம் தன்னை வளர்த்துக் கொண்ட அவர் இப்போது பாவங்களைஅங்கேயும் புண்ணியங்களைத் தன்னுடனும் வரவு வைக்க முயன்றுவருகிறார்.**

சொல்லுகிறாரே அது முழு உண்மை. பொய் சொல்லமாட்டாராம். ஆனால் உண்மையைச் சொல்லாமல் விடுவார் என்பது கவனிக்கத்தக்கது. 1997க்கும் 2005க்குமிடையே முஸ்லிம்கள் பற்றிய அவரது நிலைப்பாடு நிச்சயமாக இடத்திற்கும் தேவைக்கும் ஏற்றபடிதான் சொல்லப்பட்டுள்ளது. இதுவும் ஞானசேகரனின் அக்கறைக்குரிய விடயமல்ல. சிவத்தம்பியின் தேவைகள் எவ்வளவு தூரம் சமூக நலன் சார்ந்தவை என்பது தான் நம் முன்னுள்ள கேள்வி. 'புரட்சி என்பது பெரிய விடயம். பாராளுமன்ற அரசியலால் தான் நாங்கள் கெட்டோம். ஆகையால் நாங்கள் திரும்பவும் அதற்குள் போக வேண்டாம்' என்று சொல்கிறார் (ப. 100). 1964ம் ஆண்டு முதல் இடது கம்யூனிஸ்ற்றுக்கள் சொல்லிவந்த போது விளங்காத உண்மை இப்போது தான் விளங்குவதானால் அதன் விளக்கம் என்ன? அந்த உண்மையைச் சொன்னவர்களை ஏன் அவர் ஆதரிக்க மறுத்து வந்துள்ளார்?

சிவத்தம்பி தான் பங்களிக்காத நல்ல விடயங்களுக்கெல்லாம் உரிமை கோரத் தவறுவதில்லை. மற்றவர்கள் செய்த நல்ல விடயங்களெல்லாம் நாங்கள் செய்தவை, 'யாழ்ப்பாணத்தில் சாதிப்போராட்டம் நடந்தது. அதனை நாங்கள் வென்றுவிட்டோம்' (ப.101) "நாங்கள் இந்த எழுத்தாளர் சங்கத்தை உடைய விடவில்லை" (ப.82) "இந்திய எழுத்தாளர்களை நாங்கள் சாடியது போல" (ப.86)இந்த மாதிரி உரிமை கொண்டாடுவதுடன் தான் பிழைவிட்ட இடங்களிலெல்லாம் 'நாங்கள்' என்பது ஒரு கேடயமாகி அவரைக் காத்துநிற்கும். நழுவ வாய்ப்புக் கிடைக்கும் போது நானல்ல மற்றவர்கள் என்றாகிவிடும்.

அன்று நாங்கள் சோஷஸ யதார்த்தவாதம் பேசியது தவறு என்று சில ஆண்டுகள் முன்பு தொட்டுப் பேசிவருவதை நேர்காணலிலும் கூறியுள்ளார். உண்மையில் கைலாசபதி என்றுமே சோஷலிஸ யதார்த்தவாதம் என்ற கருத்தை வற்புறுத்தியதில்லை. சிவத்தம்பி தன்னுடைய தவறை ஏற்க வேண்டிவருகிற போது நாங்கள் என்ற கூட்டுக்குள் புகுந்துவிடுகிறார்.

தேசிய இனப்பிரச்சனை தொடர்பாக இடது கம்யூனிஸ்ற்றுக்கள் சிங்களப் பேரினவாதத்திற்குச் சரணடையவில்லை. 1976ல் தமிழர் விடுதலைக் கூட்டணி தமிழீழம் கேட்ட போது அது வெறும் தேர்தல் தந்திரம் என்பதை அம்பலப்படுத்தியவர்கள் அவர்கள். இது உண்மையென்று 1977ம் ஆண்டே தெரிய வந்துவிட்டது. 1970 தரப்படுத்தலுக்கு எதிராக இடது கம்யூனிஸ்ற்றுக்கள் குரல் கொடுத்தார்கள். ஆனால் அரசாங்கத்தோடு ஒட்டிக் கொண்டிருந்த வலது கம்யூனிஸ்றுக்கள் அதற்குச் சப்பைக்கட்டுக் கட்டினார்கள். ஆட்சி கைமாறின பிறகு தான் அவர்களுக்கெல்லாம் மெல்ல மெல்ல ஞானம் பிறந்தது. அவ் வேளை சிவத்தம்பி எங்கிருந்தார்?

சிவத்தம்பி தன்னை ஒரு முக்கியமான ஆய்வாளராகக் காட்டுவதற்காக திணை பற்றித் தான் ஆங்கிலத்தில் எழுதிய ஒரு கட்டுரையை இந்தியாவின் முக்கிய ஆய்வாளர்கள் உசாத்துணையாகக் கொள்வதைக் கூறியுள்ளார். இது பற்றி அவருக்கு முதல் யாருமே தமிழில் எழுதவில்லையா? இது அவரது தனித்துவமான பங்களிப்பு என்றால் ஏன் அவரால் கைலாசபதி செய்த மாதிரித் தனது சிந்தனையை ஆழப்படுத்திச் சங்க இலக்கியம் பற்றி ஒரு விரிவான ஆய்வைத் தொடர இயலவில்லை?

அமைப்பியல், பின் நவீனத்துவம் என்பன பற்றி 92- 93ல் தான் பேசியது பற்றிக் கூறுகிற சிவத்தம்பிக்கு அவைபற்றிய தெளிவு இருந்தற்கு என்றுமே ஆதாரமிருந்ததில்லை. நுனிப்புல் மேய்கிற விதமான வாசிப்பையும் அரைகுறையான கேள்வி ஞானத்தையும் வைத்துக் 'கட்டுடைத்தல்' 'மீள் வாசிப்பு' என்றெல்லாம் பேசிய சிவத்தம்பியால் பின் நவீனத்துவத்தை மறுத்து எழுப்பப்பட்ட எந்தக் கேள்விக்கும் இது வரை உரிய விடை தரப்படவில்லை.

விஷயங்களை அரைகுறையாகக் கிரகித்து எல்லாமறிந்த விதமாகப் பேசுவதற்கு இன்னொரு உதாரணம் சீனா முழுவதும் 'நியம மொழி' வந்தது பற்றிய கதை. சீனாவின் ஹான் இனத்தவர் யாவரும் ஒரே மொழியிற்தான் செயற்படுகின்றனர். சீன எழுத்துமுறை சித்திர எழுத்து முறை என்பதால் எழுத்து மொழி எல்லாருக்கும் பொதுவானது. ஆனால் பேச்சு மொழி வேறுபடுகிறது. மாஓவின் நூல்களை வெளியிட்டு எப்படி ஒரு தராதரமான பேச்சுவழக்கை நிலைநிறுத்தினார்கள் என்று சிவத்தம்பி தான் விளக்க வேண்டும்!

சிவத்தம்பியின் எழுத்து நடை அண்மை வரை மிகத் தெளிவீனமாகவே இருந்து வந்தது. தன்னுடைய நிலைப்பாட்டைப் பற்றி மற்றவர்கள் திட்டவட்டமாக எதையும் கூற இயலாத விதமாகக் கருத்துரைப்பதை அவர் ஒரு கலையாகவே வளர்த்திருந்தார்.

இந்த விடத்தில் கைலாசபதியின் ஐயத்துக்கிடமற்ற கருத்துக் கூறலுடன் ஒப்பிட்டால் இருவரையும் இரட்டையர்கள் என்று சிலர் சொன்னதைவிட அபூர்வ சகோதரர்கள் என்று சொல்லியிருந்தால் பொருத்தமாயிருக்கும் என்று தோன்றுகிறது.

சிவத்தம்பியின் இன்றைய கருத்துக் குழப்பம் தமிழ்த் தேசியவாதத்தை அனுசரித்துப் போகிற வேளை இன்னமும் தான் ஒரு மாக்ஸியவாதி என்று காட்டுவதுடன் நிற்காமல் இந்திய மேலாதிக்கத்தையும் அமெரிக்க ஏகாதிபத்தியத்தையுங் கூடப் பகைக்காமல் தன் பாதையை வகுக்கிற தேவையையும் உள்ளடக்குகிறது. தமிழ் இலக்கிய உலகில் அவருக்கு ஒரு இடத்தைப் பெற்றுக் கொடுத்தது இடதுசாரி இயக்கம். அதன் மூலம் தன்னை வளர்த்துக் கொண்டவர் அவர். இப்போது பாவங்களை அங்கேயும் புண்ணியங்களைத் தன்னுடனும் வரவு வைக்க முயன்று வருகிறார். சிவத்தம்பியின் புனைவுகளைக் குறுக்கு விசாரணைக்கு உட்படுத்தும் ஆற்றல் ஞானசேகரனுக்கு இல்லாதது அவருக்கு வாய்ப்பாகி விட்டது. அவர்கள் சொன்னவற்றை விடச் சொல்லாமல் விட்டவை முக்கியமானவை.

திருமுகன்

---

*மக்கள் எழுத்தாளர்....*

**9ம் பக்க தொடர்ச்சி.**

பற்றி பேராசிரியர் சி. சிவசேகரமும் நாடகங்கள் பற்றி தே. தேவானந் ஆகியோர் மதிப்பீட்டுரைகள் வழங்கினர். மேலும் வாழ்த்துரைகளை ஏ.ஜே. கனகரட்ணா, குழந்தை ம. சண்முகலிங்கம். செங்கை ஆழியான், சி.கா. செந்திவேல், கலாநிதி செ. திருநாவு க்கரசு, திருமதி பகீரதி கணேச துரை, திருமதி ஈஸ்வரி தர்மலிங்கம் ஆகியோர் வழங்கினர்.

கவிஞர் சோ. பத்மநாதன் தலைமையில் "கவிதைக்குள் உயிர் ஒன்றி வாழ்" என்னும் தலைப்பில் கவியுரைகள் இடம் பெற்றன. கவிஞர்கள் ரி.திருக்குமரன், த. ஜெயசீலன், ஆழ. பகீரதன் க.வேல்தஞ்சன் ஆகியோர் கவியுரைத்தனர். நன்றியுரையை சோ. தேவராஜா தெரிவித்தார்.

மூத்த கவிஞர், தமிழறிஞர், தேசியக் கலை இலக்கியப் பேரவையின் தலைவர் கலாநிதி இ. முருகையனை அவரது 70 வயது பூர்த்தியை குறித்து இடம் பெற்ற மேற்படி ஒன்று கூடலில் கலை இலக்கிய படைப்பாளிகள், ஆர்வலர்கள், நண்பர்கள் உறவின ர்கள், கல்வியார்வலர்கள், மக்கள் எனப் பெருந் தொகையானோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். இவ்வாறு முருகையனுக்கு கௌரவம் வழங்கிய இக் கலை இலக்கிய ஒன்று கூடலை தேசிய கலை இலக்கியப் பேரவை ஏற்பாடு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

www.tamilarangam.net நன்றி - நூலகத்திட்டம்



REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA
வெகுஜன அரசியல் மாதப் பத்திரிகை
புதிய பூமி
පුදිය පූමි
Puthiya Poomi
சுற்று12 ஒக்ரோபர் 2005 பக்கம்12 விலை 12/- சுழற்சி 84

## சீன மக்கள் விடுதலையின் 56வது ஆண்டு நினைவு



மகத்தான தலைவர் மாஓசேதுங் தலைமையில் சீன கம்யூனிஸ்ட் கட்சி 1921ல் தோற்றுவிக்கப்பட்டு தொழிலார்கள் விவசாயிகளின் மக்கள் விடுதலைச் சேனையை உருவாக்கி நீண்ட ஆயுதப் போராட்டத்தின் மூலம் நிலவுடமை முதலாளித்துவ ஏகாதிபத்திய சக்திகளை முறியடித்து 1949ம் ஆண்டு ஒக்ரோபர் 1ம் திகதி மக்கள் சீனக் குடியரசு தோழர் மாஓவினால் பிரகடனப்படுத்தப்பட்டது. அதன் 56வது ஆண்டுநினைவு இம் மாதம் முதலாம் திகதியாகும். இதனை புதிய பூமி நினைவு கொள்கிறது.

# மலையகத் தமிழ்-முஸ்லீம் தலைமைகள்

## பேரினவாதத்திற்கு அடிபணிந்து நிற்பதேன்?

இலங்கையின் ஆளும் வர்க்க கட்சிகளான ஐக்கியதேசியக் கட்சியும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் பேரினவாத ஒடுக்கு முறையை தமிழ் முஸ்லீம் மலையகத் தமிழ் தேசிய இனங்கள் மீது கட்டவிழ்த்து விட்டு வந்ததில் ஒருவருக்கு ஒருவர் சளைத்தவர்கள் அல்லர். ஐக்கியதேசியக் கட்சி மறைமுகமாகவும் நாசுக்காகவும் அதனைச் செய்து வந்ததென்றால் சிறிலங்கா சுதந்திரக்கட்சி வெளிப்படையாகவும் விறுவிறுப்பாகவும் முன்னெடுத்து வந்தது. இந்தப் பேரினவாத ஒடுக்கு முறையால் எத்தனை தமிழர்கள் முஸ்லீகள் மலையகத் தமிழ் மக்கள் உயிர் துறந்தனர். உடமை இழந்தனர். இடம் பெயர்ந்து அகதிகளாயினர். இந்தியாவிற்கு கப்பல் ஏற்றப்பட்டனர்.

இத்தனைக்கும் இப்பேரினவாதிகளின் அரசாங்கங்களில் தாத்தா தொண்டமான், பேரன் ஆறுமுகன், அதன் பின் பெ. சந்திரசேகரன் அவ்வாறே மறைந்த எம்.எச்.எம். அஷ்ரவ் அதன் பின் அவரது மனைவி பேரியல் அஷ்ரவ், ரவ்வூ ஹக்கீம், டக்ளஸ் தேவனந்தா இப்படி ஒரு கணிசமான பெயர்ப்பட்டியலைக் காணமுடியும். இவர்கள் எல்லோரும் இன மத பிரதேச அடிப்படையிலான கோரிக்கைகளுடனும் அவற்றைப் பெறும் நோக்குத்துடனும் தான் தாங்கள் பேரினவாத அரசாங்கங்களில் பங்கு கொண்டதாகக் கூறி வந்தார்கள். ஆனால் தாங்கள் பிரதிநிதித்துவப்படுத்திய மக்களுக்கு எவற்றைப் பெற்றுக் கொடுத்தார்கள். இவர்கள் மக்களுக்கு பெற்றுக் கொடுத்ததாகக் கூறப்படுபவை வெறும் எலும்புத்துண்டுகள் என்றே கூறமுடியும். அதே வேளை இத் தலைமைகளும் அவர்களை அண்டி நிற்போரும் கோடிக் கணக்கில் லட்சக்கணக்கில் பணம் சம்பாதிக்கவும் தங்களை பணத்தாலும் ஏனைய சொத்துக்களாலும் பதவிகள் பட்டங்களாலும் உயர்த்தி சுக போக வாழ்வையே தேடிக் கொண்டார்கள். இத் தலைமைகள் தத்தமது மக்கள் மத்தியில் உள்ள உயர் வர்க்க சக்திகளின் நலன் காக்கும் காவலர்களேயாவர். அதே வேளை உழைக்கும் மக்களை அவ்வப்போது திசைதிருப்பி ஏமாற்றியும் வந்துள்ளனர்.

இத்தகைய பாராளுமன்றப் பாதையில் பயணித்து பேரங்கள் பேசி தங்களை நிலைப்படுத்தி வந்த இந்த மக்கள் விரோதத் தலைமைகளால் இப்போது மட்டும் நேர்மையாக மக்கள் சார்பாக நிற்க முடியுமா? அதன் வழியிலேயே தற்போதைய ஜனாதிபதித் தேர்தலில் இரண்டு பிரதான வேட்பாளர்களில் வரை ஆதரிப்பது என்பதில் பணத்திற்கும் பதவிகளுக்கும் பேரப் பேச்சுக்கள் நடாத்தி முடித்திருக்கின்றனர். கையில் வைத்திருப்பதாகக் காட்டிக்கொள்ளும் 19, 15,9 அம்சக் கோரிக்கைகள் என்பது மக்களின் காதுகளில் பூ ச்சுற்றவே ஆகும். ஒரு கை கோரிக்கைகளைப் பிடித்து உயர்த்தி நிற்க மறு கை பணம் பதவிக்கானதாக விரிந்து நிற்கின்றது. இதில் ஆறுமுகன் தொண்டமான் மட்டும் சம்மந்தப்பட்டவர் அல்லர். சந்திரசேகரனும் ரவ்வூ ஹக்கீமும் பேரியல் அஷ்ரவ்வும் டக்ளசும் ஏனைய பேரினவாதத் துணையாளர்கள் பணியாளர்களும். அடங்குவர்.



இவர்கள் அனைவரும் ரணிலுக்காகவும் மகிந்தாவிற்காகவும் அடிபணிந்து அடிமைத்தனமாக நிற்பதன் நிலைப்பாடு மலையகத் தமிழ் மக்களுக்கானதோ அன்றி முஸ்லீம் மக்களின் உரிமைகளுக்காகவோ இல்லை என்பதை மக்கள் சரியான அரசியல் நோக்கின் ஊடே தெரிந்து கொள்ளல் வேண்டும். இத்தகைய அரசியல் வேடதாரிகளின் சொற்களுக்கும் செயல்களுக்கும் பின்னால் மறைந்து கிடக்கும் பணம் பதவி ஆதிக்க அரசியல் போன்றவற்றின் சுய ரூபங்களை மக்கள் கண்டு கொள்வது இன்றைய சூழலில் அவசியமாகும்.

# ஜனாதிபதித் தேர்தல் பற்றிய

## புதிய- ஜனநாயக கட்சியின் தீர்மானம்

இந் நாட்டின் தமிமக் தேசிய இனத்தினதும் முஸ்லீம் மலையகத்தமிழ்த் தேசிய இனங்களினதும் சுயநிர்ணய உரிமையை மறுத்து பேரினவாத ஒடுக்குமுறையை ஏவி யுத்தத்தின் மூலம் தமிழ் மக்களின் போராட்டங்களை நசுக்கி வந்தது இன்றைய அரசியல் அமைப்பும் அதன் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையுமாகும். அதே முறைமையின் கீழ் இந்நாட்டின் அனைத்து தொழிலாளர்கள் விவசாயிகள் புத்திஜீவிகள் மற்றும் உழைக்கும் மக்களின் ஜனநாயக தொழிற் சங்க மனித உரிமைகள் மறுக்கப்பட்டும் ஒடுக்கப்பட்டும் வந்தன. அதேவேளை அமெரிக்காவின் தலைமையிலான உலகமயமாதல் நிகழ்ச்சி நிரலின் கீழ் தாராளமயம் தனியார் மயம் என்பனவற்றின் மூலமான மறு கொலனியாக்க த்தின் கீழ் நாடும் மக்களும் நவ கொலனித்துவப் பிடிக்குள் சிக்க வைக்கப்பட்டது. இவற்றை மேலும் தொடர்ந்தும் உறுதிப்படுத்தி முன்னெடுக்க நடை பெறும் இவ் ஜனாதிபதித் தேர்தலை புதிய-ஜனநாயக கட்சி முற்றாக நிராகரிக்கின்றது. அத்துடன் வாக்குச் சீட்டுக்களைச் செல்லுபடியற்றதாக்கி மக்கள் தமது வன்மையான எதிர்ப்பைத் தெரிவிக்க வேண்டும் எனவும் கட்சியின் மத்திய குழு ஏகமனதான தீர்மானத்தை எடுத்துள்ளது. இதற்கமைய கட்சி மக்கள் மத்தியில் இத்தேர்தலின் பின்னால் மறைத்து வைக்கப்பட்டுள்ள பேரினவாத முதலாளித்துவ ஏகாதிபத்திய சார்பு நிலைப்பாடுகளை அம்பலமாக்குவது எனவும் தீர்மானித்துள்ளது..

*எவருக்கு வாக்களி*

1ம் பக்க தொடர்ச்சி..

இருக்கும். இரண்டாவது உள்ளார்ந்த நிலையில் வைக்கப்பட்டுள்ள கொள்கைகளும் திட்டங்களும் வெளிப்படுத்தப்படுவதில்லை.ஆனால் அதுவே பதவிக்கு வந்தபின் நடைமுறைக்கு வரக்கூடியவையாகும்.

நாட்டின் பொருளாதார அரசியல் சமூகத் தளங்கள் அனைத்திலும் தாக்கத்தை விளைவித்து நிற்கக் கூடிய தேசிய இனப்பிரச்சினை யுத்தமாகி நிற்கும் பிரதான ஒரு பிரச்சினையாகும். இதனை பேரினவாத ஒடுக்குமுறை யுத்தமாக்கி முன்னெடுத்ததில் இவ்விரண்டு கட்சிகளும் இதே வேட்பாளர்களும் சம்மந்தமுடையோரே. இன்று வரை தமிழ்த் தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமை என்பதனையோ அதன் அடிப்படையிலான சுயாட்சி அமைப்பு முறையையோ இவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை.

ரணில் விக்கிரமசிங்கா சமஷ்டி முறை பற்றி தொட்டுக்காட்டி தமிழ் முஸ்லீம் மக்களின் வாக்குகளை வாரி எடுக்க நிற்கின்றார். ஆனால் அவர் கூறி நிற்கும் இனப்பிரச்சினைக்கான தீர்வு வழிகள் சாத்தியமாகக் கூடிய தொன்றல்ல. இனப்பிரச்சினைத் தீர்வுக்கு முதலில் சிங்கள மக்கள் மத்தியிலான ஒற்றுமையும் பிரதான எதிர்க்கட்சியான சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் இணக்கப்பாடும் பெறப்படுமாம். அதன் பின் புலிகள் இயக்கத்துடன் பேச்சுவார்த்தை நடாத்தி எடுக்கப்படும் முடிவை சர்வசனவாக்கெடுப்பிற்கு விடப்படுமாம். அதில் வெற்றி பெற்றாலே இனப்பிரச்சினை தீர்வு நடைமுறைப்படுத்தப்படுமாம். கடந்த காலப் பட்டறிவுகளின் ஊடாக ரணிலின் இந்த அணுகுமுறை எத்தனை வருடங்களுக்கு இழுத்தடிக்கப்படும். இறுதியில் முன்னையவை போன்று இடைவழியில் கைவிடப்படும்.

அதேவேளை மகிந்த ராஜபக்ஷ ஒற்றையாட்சி முறையின் கீழ் புலிகளுடன் நேரடியாகப் பேசி இனப்பிரச்சினைக்குத் தீர்வு கண்டுவிடப்போவதாகக் கூறிவருகிறார். தான் இனவாதியோ மதவாதியோ இல்லை எனக் கூறி தமது குடும்பத்தினரின் திருமண உறவு தமிழர்களிடம் இருப்பதாகக் காட்டி தனது இனவாத நிலைப்பாட்டை மூடி மறைக்க நிற்கின்றார். அத்துடன் அவருடன் ஒப்பந்தம் மூலம் இணங்கி நிற்கும் ஜே.வி.பி,ஹெலஉறுமய ஆகியவை வெறித்தனமான இனவாதத்தைக் கக்கி வருகின்றன. இதனை வைத்து ஐ.தே.கட்சி தனது தமிழ் முஸ்லீம் மலையகத் தமிழ் மக்களின் உற்ற நண்பன் என்ற தோற்றத்தைக் காட்ட முன் நிற்கின்றது.

ஆதலால் இனப் பிரச்சினையில் பேரினவாத நிலைப்பாட்டை நிற்கிறார்கள் இவ்விரு கட்சி வேட்பாளர்களும் அதற்கும் அப்பால் உழைக்கும் அனைத்து மக்களின் உரிமைகளை மறுப்பதிலும் வாழ்க்கைச் செலவைக் கூட்டி அன்றாட வாழ்வில் வாட்டி வதைப்பதை முடிவுக்கு கொண்டு வருவது பற்றி சாத்தியமான வாக்குறுதிகளை வழங்கவில்லை. தாராள இறக்குமதி, தனியார் மயம், உலகமய மாதல் திட்டங்களைத் தடுத்து நிறுத்துவதாக எந்த விதச் சிறு குறிப்புக் கூட கூறப்படவில்லை. பொருளாதார சமூக கல்வி சுகாதாரத் துறைகளில் உலக வங்கி, சர்வதே நாணய நிதியம் என்பவற்றின் ஆலோசனை உதவி பெறுவதிலும் அவர்களது திட் டங்களை நடைமுறைப்படுத்துவதி லும் ரணிலும் மகிந்தாவும் எத்தகைய வரையறைகளையோ பின்னடிப்பையோ வெளிப்படுத்த வில்லை.

அதேவேளை நாட்டின் தொடரும் மோசமான பிரச்சினைகளுக்கும் தீர்வின்மைகளுக்கும் வழிகாட்ட முடியாத இன்றைய அரசியலமைப்பை மாற்றவோ அதன் கீழான சர்வாதிகார நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை ஒழிக்கவோ பிரதான இவ்விரு வேட்பாளர்களும் தயாராக இல்லை என்பதை அவர்களது நிலைப்பாடு எடுத்துக்காட்டுகின்றது.

மேலும் ரணில் இந்தியாவை கோபப்படுத்தாதவாறு தாஜா பண்ணிக் கொண்டே அமெரிக்காவின் காலடியில் நிற்கும் நிலைப்பாட்டைக் கொண்டிருக்கிறார்.இந்த நிலைப்பாடு தமிழ்த் தலைமைகளின் தரப்பில் மறை முகமாக வரவேற்கப்படவும் செய்கிறது. அவ்வாறே அமெரிக்காவை பகைக்காதவாறு காட்டிக் கொண்டு மகிந்தா இந்தியாவின் காலடியில் சென்று நிற்கின்றார். அதனை ஜே.வி.பி ஹெல உறுமய அங்கீகரித்து நிற்கின்றன. இவர்களுடன் பின் வரிசையில் இலைமறைகாயாக நிற்கும் பாராளுமன்ற இடதுசாரிகள் ஏதோ எலும்புத்துண்டுகள் கிடைத் தால் போதும் என்ற நிலையில் பரிதா பமாக இருந்து வருகிறார்கள.

ஆதலால் இவ் இரு பிரதான வேட்பாளர்களான ரணிலும் மகிந்தாவும் அடிப்படையில் பேரினவாத முதலாளித்துவ ஆளும் உயர் வர்க்க சக்திகளின் நம்பிக்கைக்குரிய பிரதிநிதிகளே ஆவர். இவர்களிடம் தமிழ் முஸ்லீம் மலையக தமிழ் மக்கள் எவ்வகையிலும் நம்பிக்கை வைக்கவோ எதிர்பார்ப்புகளைக் கொண்டிருக்கவோ எவ்வித அடிப்படைகளும் இல்லை. அதற்கும் அப்பால் சிங்கள மக்களின் பொருளாதரப் பிரச்சினைகளுக்குரிய தீர்களும் கூட இவ்விருவரிடமும் கிடையாது. இவர்கள் சிங்கள பௌத்தர்கள் என்பதால் சாதாரண சிங்கள தொழிலாளர்கள் விவசாயிகள் மற்றும் உழைக்கும் மக்களுக்கு எதனையும் வாரி வழங்க மாட்டார்கள் என்பதும் புரிந்துகொள்ள வேண்டியதாகும். எனவே பேரினவாதத்தை மறைமுகமாகவும் வெளிப்படையா கவும் பற்றி நின்று கொண்டு பொய் வாக்குறுதிகளை முன்வைத்து ஏமாற்றுத் தேர்தல் பிரசார முழக்கங்களை முன்நிறுத்தியே ரணிலும் மகிந்தாவும் வாக்குவேட்டைக்குப் புறப்பட்டு நிற்கிறார்கள். இத்தகையவர்களில் எவருக்கு வாக்களித்தும் எவ் வித பலாபலன்களும் மக்களுக்கு கிடைக்கப்போவதில்லை என்பதே யதார்த்தம் கூறும் உண்மையாகும். இந்த உண்மையை அனைத்து மக்களும் அறிவு பூர்வமாகவும் நடை முறைரீதியாகவும் உணர்ந்து கொள் வது அவசியம் என்பதையே புதிய பூமி வற்புறுத்தி நிற்கின்றது.

## மேல் கொத்மலைத்திட்ட...

1ம் பக்க தொடர்ச்சி..

ஒக்டோபர் 15 ஆம் திகதி அட்டன் கிறிஸ்தவ தொழிலாளர் ஒத்துழைப்பு மண்டபத்தில் கலந்துரையாடல் ஒன்று இடம்பெறவுள்ளது. மக்கள் இயக்கம் ஏற்பாடு செய்துள்ள அக்கலந்துரையாடலில் அத்திட்டத்தை எதிர்க்கும் அனைத்து அமைப்புகளுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. எதிர்ப்பு போரட்டங்கள் மீதுதாக்குதல் நடத்தும் அளவிற்கு அரசாங்க எதிர்க்கட்சியினர் முன்வந்துள்ள நிலையில் அத்திட்டத்திற்கு எதிரான சக்திகளினது ஐக்கியப்பட்ட நடவடிக்கைகள் மிகவும் அவசியமாகும். ஆகக் கூடிய மக்கள் போராட்டங்களினூடாகவே அத்திட்டத்தை தடுத்து நிறுத்தவும் முடியும். போராட்டங்கள் மீதான தாக்குதல்களுக்கு பதிலடி கொடுத்து அவற்றை முறியடிக்கவும் முடியும்.

மேல்கொத்மலைத்திட்டத்திற்கு எதிரான ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது நடத்தப்பட்ட குண்டர் தாக்குதலை புதிய பூமி வன்மையாக கண்டிப்பதுடன் அதனை எதிர்ப்பதாக கூறுகின்ற அமைப்புகள் பாசாங்கு செய்யாமல் நேர்மையுடன் எதிர்ப்பததாக இருப்பின் மக்கள் இயக்கத்துடன் இணைந்து உக்கிரமான போராட்டங்களை முன்னெடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறது.

வெளியிடுபவர் : இதம்பையா, இல. 47, 3வது மாடி, கொழும்பு சென்றல் சுப்பர் மார்க்கட், கொழும்பு 11. அச்சுப்பதிப்பு: கொம்பிரின்ட், 334A.K.சிறில் சி.பெரேரா மாவத்தை, கொழும்பு 13.